ஈரோடு மாவட்டத் தொல்லியல் கையேடு



பதிப்பாசிரியர்

முனைவர் **தி. ஸ்ரீ. ஸ்ரீதர்**, இஆப,

முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

ஆசிரியர்

பெ. கௌதமபுத்திரன்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

சென்னை - 600 008

2011 - திருவள்ளுவர் ஆண்டு 2042

சுற்றுச்சூழல் மாவட்டத் தொல்லியல் கையேடு

பதிப்பாசிரியர்

முனைவர் **தி. ரூ. ரூதர்,** இஆப,

முதன்மைச் செயலாளர் (மு) ஆணையர்

ஆசிரியர்

பெ. கௌதமபுத்திரன்

வெளியீடு

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

சென்னை -600 008

2011 - திருவள்ளுவர் ஆண்டு 2042

BIBLIOGRAPHICAL DATA

TITLE	:	**Erodu Archaeological Guide**
Editor	:	Principal Secretary and Commissioner
Copyright	:	Tamilnadu State Dept. of Archaeology
Subject	:	History & Archaeological Guide
Language	:	Tamil
Edition	:	First
Publication No.	:	241
Year	:	2011
Type Point	:	11
No. of Pages	:	112
Paper Used	:	80 Gsm Maplitho
Printer	:	Department of Archaeology Press
Publisher	:	State Department of Archaeology, Tamil Valarchi Valaagam, Halls Road, Egmore, Chennai - 600 008.
Price	:	Rs. 26/-

பொருளடக்கம்

வ.எண்.		பக்கம்
	பதிப்புரை	
	முன்னுரை	
1.	ஈரோடு பற்றிய தொல்லியல் சான்றுகள்	1
2.	ஈரோடு மாவட்ட புவியியல் அமைப்பு	6
3.	பெருங்கற்காலம்	8
4.	ஈரோடு மாவட்ட அரசியல் பின்னணி	10
5.	வரலாற்றுக் காலத்தில் ஈரோடு மாவட்டம்	11
6.	ஈரோடு மாவட்டத்தில் பாண்டியர் ஆட்சி	13
7.	ஈரோடு மாவட்டத்தில் சேரர் ஆட்சி	15
8.	ஈரோடு மாவட்டத்தில் சோழர் ஆட்சி	16
9.	கொங்கு சோழர் காலம்	17
10.	ஈரோடு மாவட்டத்தில் ஓய்சாளர்கள் ஆட்சி	30
11.	ஈரோட்டில் மதுரை சுல்தான்கள்	34
12.	ஈரோடு மாவட்டத்தில் நாட்டுப்புற கோயில்கள்	40
13.	நாட்டுப் பிரிவுகள்	43
14.	நீர்ப்பாசனம்	45
15.	ஈரோடு மாவட்டத்தில் தொல்லியல் சான்றுகள் உள்ள ஊர்கள்	68
16.	ஈரோடு மாவட்டத்தில் சமணத் திருத்தலங்கள்	75
17.	ஈரோடு மாவட்டத்தில் நடைபெற்ற கொடுமணல் அகழாய்வு	78
18.	ஈரோடு மாவட்டத்தில் நடுகற்கள்	82
19.	ஈரோடு மாவட்டத்தில் மதங்கள்	88
	நிழற்படங்கள்	91

முனைவர் **தி. ஸ்ரீ. ஸ்ரீதர்,** இஆப,
முதன்மைச் செயலாளர் (மு) ஆணையர்

தொல்லியல் துறை,
தமிழ் வளர்ச்சி வளாகம்,
ஆல்சு சாலை,
சென்னை - 600 008

பதிப்புரை

தமிழகத்தின் ஒவ்வொரு ஊரிலும் தொல்லியல் வரலாற்றுச் சான்றுகளான கல்வெட்டுகள், சிற்பங்கள், சுவடிகள், காசுகள், பண்டைய பானை ஓடுகள், புதைமேடுகள், ஈமச்சின்னங்கள், கோட்டைகள், கோயில்கள், பாலங்கள், மண்பாண்டங்கள், மசூதிகள், தேவாலயங்கள் என பலவகையான சான்றுகள் குறித்த ஆய்வுகளில் தமிழகத்தில் ஒவ்வொரு ஊரிலும் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில் எல்லா மாவட்டத்திற்கும் தொல்லியல் ஆய்வு கையேடு வெளியிடுவது அவசியமாகின்றது.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை ஊர்கள் தோறும் மாவட்டந்தோறும் தொல்லியல் விழிப்புணர்வை ஏற்படுத்த மாவட்ட அளவிலான தொல்லியல் கையேடுகளை வெளியிட்டு வருகின்றது. இதுவரை கோயம்புத்தூர், விழுப்புரம், திருநெல்வேலி, திருவாரூர், விருதுநகர் ஆகிய மாவட்டங்களுக்கான தொல்லியல் கையேடுகள் இத்துறையினரால் வெளியிடப்பட்டுள்ளது. இந்த வரிசையில் இப்பொழுது ஈரோடு மாவட்டத் தொல்லியல் கையேடு வெளிவருகின்றது.

பண்டைய நாட்டுப் பிரிவான கொங்கு நாட்டில் அமைந்துள்ள ஈரோடு மாவட்டம் மிகுதியான தொல்லியல் சான்றுகளைக் கொண்டுள்ளது. மற்றும் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை இம்மாவட்டத்தில் கொடுமணல் என்ற பழமையான ஊரில் அகழாய்வு பணி மேற்கொண்டுள்ளது. மேலும் இம்மாவட்டத்தில் ஏராளமான

கல்வெட்டுகளும் தொல்பழங்கால பாறை ஓவியங்களும், கற்கால கருவிகள், பெருங்கற்கால சின்னங்கள் ரோமானியர் காசுகள், பானை ஓடுகள், சூதுபவள மணிகள், சுடுமண் பொம்மைகள், நடுகற்கள், வணிகர் குழு கல்வெட்டுகள், செப்புத் திருமேனிகள், காசுகள் இம்மாவட்டத்தில் கிடைக்கப்பெற்றுள்ளன. இம்மாவட்டத்தில் கொங்கு சோழர், கொங்கு பாண்டியர், கங்கர், போசாளர் என பல்வேறு அரச மரபினரும் ஆட்சி செய்துள்ளனர் என்பதை தெளிவாக இக்கையேடு விவரிக்கிறது.

இக்கையேடு ஈரோடு மாவட்டத்தின் புவியியல், தொல் பழங்காலம், வணிக சிறப்பு, அரசியல் பின்னணி, நாட்டுப் பிரிவுகள், நீர்ப்பாசனம், தொழில் குழுக்கள், சமயங்கள் ஆகியவை குறித்த செய்திகளைத் தொகுத்துக் கூறி ஈரோடு மாவட்டத்தில் உள்ள ஊர்களின் சிறப்புகளையும் எடுத்துக்கூறுகின்றது. பல சிறப்புகள் உள்ள ஊர்களின் பட்டியல்களும், தரப்பட்டுள்ளது.

இக்கையேட்டினை உருவாக்கிய திரு. பெ. கௌதமபுத்திரன் தொல்லியல் அலுவலர் பணி பாராட்டுக்குரியதாகும். இப்புத்தகத்துப் பதிப்புப் பணியை மேற்கொண்ட முனைவர் சீ. வசந்தி, பதிவு அலுவலர் அவர்களையும், அச்சுப் பிரிவு பணியாளர்கள் அனைவரையும் பாராட்டுகின்றேன்.

இத்துறையின் வெளியீடுகளுக்கு நிதி உதவி நல்கி பணிகளை ஊக்குவித்து வரும் தமிழ்நாடு அரசுக்கு எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூல் தொல்லியல் ஆய்வாளர்களுக்கும், மாணவர்களுக்கும், பொதுமக்களுக்கும் நன்கு பயன்படும் என்பதை வாழ்த்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தி. ஸ்ரீ. ஸ்ரீதர்

முன்னுரை

தமிழக பண்டைய வரலாறு, சேர, சோழ, பாண்டிய நாடு என்பது போன்று கொங்கு நாடும் தனி நாடாக இருந்துள்ளது. இந்த கொங்கு நாடு கோவை, ஈரோடு, சேலம், நாமக்கல், போன்ற மாவட்டங்கள் அடங்கிய பகுதியாக இருந்துள்ளது. இந்த கொங்கு நாட்டில் தொல்லியல், வரலாற்று சான்றுகளாக கல்வெட்டுகள், சிற்பங்கள், சுவடிகள், காசுகள், பண்டையப் பானை ஓடுகள், புதைமேடுகள், ஈமச்சின்னங்கள், கோட்டைகள், கோயில்கள், பாலங்கள், மண்டபங்கள், மசூதிகள், தேவாலயங்கள் என பலவகையான சான்றுகளில் ஏதாவது ஒன்று ஒவ்வொரு ஊரிலும் உள்ளது. எனவே இந்த வரலாற்றுச் சின்னங்களின் அருமை, பெருமைகளை ஒவ்வொரு மக்களும் அறிந்து கொள்ளவேண்டும் என்ற நோக்கில் ஒவ்வொரு வட்டத்திலும் தொல்லியல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முறையில் மாவட்ட தொல்லியல் கையேடுகள் வெளியிட வேண்டும் என்ற நோக்கில் ஈரோடு மாவட்ட தொல்லியல் கையேடு உருவாக்கும் பணியில் ஈடுபடப்பட்டது.

ஈரோடு மாவட்டம் பண்டைய நாட்டுப் பிரிவான கொங்கு நாட்டில் அமைந்துள்ளது. ஈரோடு மாவட்டம் ஏராளமான தொல்லியல் சான்றுகளை தன்னகத்தே கொண்டுள்ளது. இம்மாவட்டத்தில் மிக அதிக அளவில் கல்வெட்டுகளும், அகழாய்வு இம்மாவட்டத்தில் கொடுமணல், கத்தாங்கன்னி போன்ற ஊர்களில் மேற்கொள்ளப்பட்டு பல்வேறு வகையான, வெவ்வேறு காலத்தைச் சார்ந்த தொல்லியல் சான்றுகளும் கிடைக்கப்பெற்றுள்ளது.

தொல்பழங்கால பாறை ஓவியங்கள், கற்கால கருவிகள் பெருங்கற்காலச் சின்னங்கள், ரோமானியக் காசுகள், பானை ஓடுகள், சூதுபவள மணிகள், சுடுமண் பொம்மைகள், நடுகற்கள் வணிகர் குழு கல்வெட்டுகள், நல்ல செப்புத் திருமேனிகள் தமிழ் மன்னர்களின்

காசுகளும் ஈரோடு மாவட்டத்தில் மிகுதியாக கிடைக்கப்பெற்றுள்ளது. இம்மாவட்டத்தில் கொங்கு சோழர், கொங்கு பாண்டியர், கங்கர், ஒய்சாளர், என பல்வேறு அரச மரபினரம் ஆட்சி புரிந்துள்ளனர். மேலும் இம்மாவட்டத்தின், புவியல், தொல்பழங்காலம், வணிகச் சிறப்பு, அரசியல் பின்னணி, நாட்டு பிரிவுகள், தொழில் குழுக்களாக, சமயங்கள் ஆகியவை குறித்த செய்திகளை ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இவ்வாய்வானது பள்ளி மாணவர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும் உதவியாக அமையும்.

நான் கொங்கு நாட்டில் தொல்லியல் ஆய்வுப்பணியின் போது சேகரிக்கப்பட்ட தரவுகளைக் கொண்டும் மற்றும் ஆணையர் அவர்கள் ஆக்கமும், ஊக்கமும் தந்து அறிவுரை வழங்கியமைக்கு முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையர் திருமிகு முனைவர் தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இஆப, அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நூலினை பதிப்பிக்க துணை நின்ற பதிவு அலுவலர் முனைவர் சீ. வசந்தி அவர்களுக்கும், இப்புத்தகத்தை வடிவமைத்த தே. சத்தியவதி, அச்சுக்கோர்ப்பாளர் அவர்களுக்கும், இத்துறையின் அச்சுப் பிரிவினருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

பெ. கௌதமபுத்திரன்
தொல்லியல் அலுவலர்
கோவை

ஈரோடு மாவட்டத் தொல்லியல் கையேடு

ஈரோடு பற்றிய தொல்லியல் சான்றுகள்

பண்டைய தமிழ்நாடு சேரர், சோழர், பாண்டியர் நாடுகளைப் போலவே தொண்டை மண்டலம், கொங்கு மண்டலம் என இரண்டு தனிப் பிரிவு நாடுகள் இருந்துள்ளது. இந்த இரண்டு மண்டலங்களில் கொங்கு மண்டலம் தன்கென்று எப்பொழுதும் தனியாக எல்லைகள், கலைப்பண்பாடு, நாகரீகம், பழக்கவழக்கம் ஆகியவைகளைக் கொண்டது. இந்த செய்திகளை சங்க கால இலக்கியங்களும், கல்வெட்டுகளும் பிற எழுத்து ஆவணங்களும் உறுதி செய்கின்றது.

கொங்கு பெயர் காரணம்

கொங்கு என்றால், இனிமை, தேன் என்ற பொருளும் மற்றும் கொங்கு நாட்டில் உள்ள கொங்கு பற்றிய செய்திகள் கொங்கு நாட்டில், தாராபுரம், கொங்கூறும் கொங்கு வஞ்சியும், கொங்கு பெருவழியும், கொங்கின் அம்மன் கோயிலும், கொங்கில் பெருமாள் கோயிலும், கொங்கம் பாளையங்களும், கொங்கர் எனப்படும் மக்களும், இவர்கள் சொல் வழக்கில் கொங்கு நாழி, கொங்கமுளம், கொங்கில் குறும்பில் குரக்குத்தளி என்ற சொற்கள் உள்ளது.

கொங்குநாட்டு எல்லைகள்

கொங்கு நாட்டின் வடக்கு எல்லை பெரும்பாலை, தெற்கு எல்லை பழனிமலை, மேற்கு எல்லை வெள்ளிங்கிரி மலை, கிழக்கு எல்லை குளித்தலை ஆகும், தற்பொழுது இந்த நான்கு எல்லைகளுக்குள் கோவை, ஈரோடு, நாமக்கல், தர்மபுரி, பழனி, சேலம் போன்ற பகுகிகள் அடங்கியள்ளன.

சைவ சமய நூல்களில் தொன்மையான திருமூலரின் திருமந்திரத்தில் "தமிழ் மண்டலம் ஐந்து" என்று கூறுகின்றது. எனவே இந்த மண்டலங்களில் கொங்கு மண்டலம் தனிப்பகுதியாகவே இருந்துள்ளது. இந்த கொங்கு மக்கள் "கொங்கர்" என்று சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படுகின்றனர். "வராகமித்தரர்" தன் நூலில் கொங்கு நாடு தனி நாடு என்று குறிக்கின்றார். அசோகன் கல்வெட்டில் தனி அரசனாக குறிக்கப்பெறும் சத்தியபுத்திரன் கொங்கு நாட்டு மன்னன் "அதியமான்" என்பது ஜம்பை கல்வெட்டு மூலம் உணர முடிகிறது. தொன்று தொட்டு கொங்கு நாட்டை "வேளிர்" என்ற சிற்றரசர்கள் தமக்குள் பகையின்றி ஆண்டு வந்தனர். கொங்கு நாட்டை நிர்வாகம் செய்து 24 உள்நாடுகளாகப் பிரித்து ஆட்சி செலுத்தியுள்ளனர். உதாரணமாக கொங்கு மண்டலம் 20 கோட்டங்கள், 24 தீர்த்தங்கரர் போன்ற கொங்கு நாட்டையும் 24 உட்பிரிவுகளாகப் பிரிக்கின்றனர்.

அவைகள் 1. பூந்துறைநாடு, 2.தென்கரைநாடு, 3.காங்கயநாடு, 4.பொங்கலூர்க்காநாடு, 5.அரையநாடு, 6.வாயரைக்காநாடு, 7.கிழங்குநாடு, 8.வடகரைநாடு,, 9.தலையநாடு, 10.பூவானிநாடு, 11.தட்டயநாடு, 12.வடபரிசாரநாடு, 13.ஒடுவங்கநாடு, 14.மேல்கரை பூந்துறைநாடு, 15.நல்லூர்க்காநாடு, 16.நரையனூர்நாடு 17.அண்டநாடு, 18.வெங்காலநாடு, 19.கீழ்க்கரை பூந்துறைநாடு,. 20.காவடிக்காநாடு, 21.ஆரைக்கால்நாடு, 22.குறுப்புநாடு, 23.காஞ்சிகோயில் நாடு 24.சூவகாவூர் நாடு ஆகிய 24 உட்பிரிவுகளைக் கொண்டது.

ஈரோடு மாவட்டம்

தொன்மைக் காலத்தில் ஈரோடு மாவட்டத்தில் முக்கிய தொழிலாக விவசாயம், கால்நடை, பவளமும், மணிக்கற்களும் நிறைந்த மாவட்டமாக இருந்துள்ளது. தற்பொழுது ஈரோடு மாவட்டத்தின் எல்லைகளாக கிழக்கே சேலம், நாமக்கல், கரூர், மேற்கே, கோயமுத்தூர், உதகமண்டலம் மாவட்டங்களும், வடக்கே கருநாடக மாநிலத்தின் எல்லைப் பகுதியாகவும், தெற்கே திண்டுக்கல் மாவட்டமும் எல்லைகளாக அமைந்துள்ளது. இம்மாவட்டத்தில், ஈரோடு வட்டம், பவானி வட்டம், கோபி செட்டிபாளையம், சத்தியமங்கலம் அடங்கியுள்ளது.

ஈரோடு பற்றிய தலைப் புராணம்

உலகின் "சக்தி காளி" பிரம்மாவின் தலையை உடைத்தாள், தலை நான்காக சிதறி நான்கு இடங்களில் விழுந்தது என்றும், ஈரஓடு, ஈரோடு என்றும், வெள்ளை ஓடு விழுந்த இடம் வெள்ளோடு என்றும், சிறிய ஓடு விழுந்த இடம் சித்தோடு என்றும், பெரிய ஓடு விழுந்த இடம் பேரோடு என்றும் பெயர்கள் ஏற்பட்டது என்றும் கூறப்படுகின்றது. ஈரோடு, சித்தோடு, வெள்ளோடு, பேரோடு போன்ற ஊர்கள் இப்பொழுதும் உள்ளன.

சங்க இலக்கியங்களில் ஈரோடு மாவட்டம்

ஈரோடு மாவட்டத்தில் உள்ள அரையம், கொடுமுடி, சென்னிமலை, கொடுமணல், பூந்துறை, பெருந்துறை, நன்றா, பர்கூர், நாகம் போன்ற ஊர்கள் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. சங்கப்புலவர் பெருந்தலைச் சாத்தனார் பெருந்தலையூரையும், பொன்முழயார் பெருந்துறை அருகிலுள்ள பொன்முடி என்ற ஊரையும் "பிளினி" தனது குறிப்பில் காங்கயத்திற்கு அருகில் படியூரில் "பெரில்ஸ்" என்ற நீல நிறக்கற்கள் கிடைத்ததை குறிப்பிடுகின்றார்.

சங்க கால ஊர்கள்

சங்க காலத்தில் சங்க இலக்கியங்களில் ஈரோடு மாவட்டத்தில் "வெள்ளாயி" என்ற கிராமம் அகநானூறிலும் வந்துள்ளது. இந்த ஊர் வெள்ளோடு ஆகும். சென்னிமலை கிராமம் நற்றினையிலும், குறுந்தொகையிலும், அரச்சலூர் கிராமம் குறுந்தொகையில் குறிப்பிடப்படுகின்றது.

ஈரோடு மாவட்டத்தில் தொல்லியல் சான்றுகள் உள்ள இடங்கள் - கற்காலம் (Stoneage)

கற்கால மனித நாகரீகத்தின் முதற்காலமாகும். இக்கால கட்டத்தில் கரடு முரடான கற்கருவிகள் பயன்படுத்தப்பட்டன. புழைய கற்கால கருவிகள ஈரோடு மாவட்டத்தில், பெருந்துறை வட்டம் "பாசூர்" என்ற ஊரில் கிடைக்கப் பெற்றுள்ளன.

ஈரோடு மாவட்டத்தில் பெருங்கற்காலம் - பாண்டவர் குழி (Megalithic)

இரும்புக் காலம் என்று கூறப்படுவது பெருங்கற்களை இறந்தவர்களுக்கு கல்லறைகளாக பயன்படுத்தியதால் பெருங்கற்காலம் என்று அழைக்கிறார்கள். இக்கல்லறைகளை குத்துக்கல் (Menheir) கல்பதுக்கை, கல்வட்டம், கல்அரண், தொப்பிக்கல் என்றும் பெருங்கற்கால சின்னங்களாக அழைக்கப்படுகின்றன. அல்லது பாண்டவர் குழி என்றும் அழைக்கின்றனர்.

பெருந்துறை வட்டம்

1. பெருந்துறை
2. திங்களூர்
3. கோவில் பாளையம்
4. வெள்ளோடு
5. பாசூர்
6. குடிமியாம்பாளையம்
7. கொடுமணல்

பவானி வட்டம்

பவானி வட்டத்தில் பெருங்கற்கால சின்னங்கள் காணப்படும் இடங்கள்

1. அந்தியூர்
2. ஆப்பக்கூடல்
3. கல்பாவி
4. சின்னமோள பாளையம்
5. தாமரைக்கரை
6. கோரவபட்டி
7. ஏரிச்சேரி
8. செம்மங்குழி

சக்தி வட்டம்

1. நல்லூர் கிராமம்
2. அந்தியூர்
3. கடம்பூர்
4. கனுவக்கரை
5. காடனபள்ளி
6. பெருமுகை
7. சின்னகுள்ளம் பாளையம்

கோபிசெட்டிபாளையம் வட்டம்

1. கவுண்தம்பாடி
2. விண்ணப்பள்ளி

பவானி வட்டம்

1. அந்தியூர்
2. பெரியபுலியூர்
3. ஊராட்சிக் கோட்டை
4. பட்லூர்
5. வெம்பாடி
6. துக்கநாயக்கன் பாளையம்
7. கணக்கம் பாளையம்

ஈரோடு வட்டம்

1. அஞ்சூர்
2. விருமாண்டம் பாளையம்
3. ஏலவமலை
4. சிவகிரி
5. சோனம் பாளையம்
6. விருமாண்டம் பாளையம்
7. பெரியசேமூர்
8. மாணிக்கம் பாளையம்
9. பழமங்கலம்

போன்ற ஊர்களில் பெருங்கற்கால சின்னங்கள் காணப்படுகின்றது.

ஈரோடு மாவட்ட புவியியல் அமைப்பு

ஈரோடு மாவட்டம் குறிஞ்சி நிலமும், முல்லை நிலமும் நிறைந்த பகுதியாக உள்ளது. ஈரோடு மாவட்டத்தில் மேல் புறம் - மேற்கு தொடர்ச்சி மலை உள்ளது. வடபுறம் கர்நாடக மாநில எல்லைகளும், தாளவாடி, தாமரைகுளம் மலைப்பகுதிகளில், சந்தனம், தேக்கு மரவகைகள் அந்நில செலாவணியை ஈட்டி தருகின்றது. இம்மலையில் பெருங்கற்கால சின்னத்திற்குரிய தாழிகள், கருப்பு சிவப்பு பானைகள் கிடைத்துள்ளது. எனவே இந்த மலைவாழ் மக்கள் வாழ்க்கை கொங்கு சமவெளியுடன் தொடர்பு குறிப்பிடத் தக்கவையாகும். மேலும் இம்மலைகளில் காணப்படும் தொல்பழங்கால குகை ஓவியங்கள் 7000 ஆண்டுகளுக்கு முற்பட்டவை. இம்மலைவாழ் மக்கள் கொற்றவையை வழிபட்டுள்ளனர். ஈரோடு மாவட்ட மலைவாழ் மக்கள் யானையை பண்டம் (commodity) பட்டியினை பண்டம் என்றும் அழைக்கின்றனர். ஈரோடு மாவட்டத்தில் உள்ள மலை வெளிகளில் மலைவாழ் மக்கள் மாடுகளை மேய்க்கின்றனர். மலைகளிலே பட்டிப்போட்டு தங்க வைக்கின்றனர். அந்த மாட்டு மந்தைகளை புனையர்கள் என்ற பழங்குடியினர் பாதுகாக்கின்றனர். மாடுகள் அடைக்கும் இடத்திற்கு 'பட்டி' என்றும், மாடுகள் தண்ணீர் அருந்தும் இடத்திற்கு 'மடை' என்றும் பெயர்கள் உள்ளது. ஈரோடு மாவட்டத்து மலைகளில் நூற்றுக்கு அதிகமான மாட்டு பட்டிகளும், மடைகளும் காணப்படுகின்றது. இம்மாவட்ட மக்கள் கால்நடை வளர்ப்பு தொழில் செய்து பெருங்கற்கால சின்னங்களை உருவாக்கியுள்ளனர். கொடுமணல் கிராமத்தில் அகழாய்வுகளில் சோளம், கேழ்வரகு கிடைத்துள்ளது. இவ்வகழாய்வில் பெருங்கற்கால சின்னங்களில் பானை ஓட்டில், மகரந்த துகள்கள் காணப்பட்டது. எனவே சங்க இலக்கியத்தில் முல்லை திணையின் உணவினை குறிப்பிடும் பொழுது வரகு, கொள்ளு, அவரை, துவரை ஆகிய தானியங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதை நாம் அறியலாம். மேலும் இம்மாவட்டத்தில் பச்சை கற்கள், பளிங்கு கற்கள் கிடைத்ததைப் பற்றி பதிற்றுபத்தில்

குறிப்பிடுகின்றது. ஈரோடு மாவட்டத்தில் கனிமவளம் பெருங்கற்காலம் முதல், சோழர்காலம், ஆங்கிலேயர் ஆட்சி காலம் வரை தொடர்ந்து கிடைத்து வருகின்றது. இந்த கனிம வளங்களில் இரும்புத் தாது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். ஈரோடு மாவட்டத்து மலைகளிலும், ஆறுகளிலும் கிடைத்த இரும்பு தாதுவினைக் கொண்டு இரும்பு கருவிகளை செய்து மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளனர். மேலும் கொடுமணல் அகழாய்வு மூலம் இரும்பு உருக்கு தொழில் பெருங்கற்காலம் முதல் நடைபெற்று வருகின்றது. ஆதாவது பெருங்கற்கால சின்னங்களும், இரும்பை பயன்படுத்தும் நிலையும் சமமாக இருந்துள்ளது. ஈரோடு மாவட்டத்தில் பெருங்கற்காலம் முதல் இரும்புத் தொழில், இரும்புக் கருவிகள், இரும்பை உருக்கும் அடுப்புகள் நடைமுறையில் இருந்துள்ளது என்பதை கொடுமணல் அகழாய்வு முடிவு கூறுகிறது.

ஈரோடு மாவட்டம் பெருங்கற்காலம் தொட்டு, ஆறுகளில் ஓடும் நீரை வேளாண்மைக்கு பயன்படுத்தும் பழக்கம் இருந்துள்ளது. சோழர்காலம் முதல் ஆங்கிலேயர்கள் காலம் வரை தொடர்ந்து நீர்பாசன ஏரிகள், குளங்கள், நீர்ப்பாசனங்கள் உருவாக்கப்பட்டு இம்மாவட்டம் முழுவதும் வேளாண்மை தொழில் முதன்மை தொழிலாளகவும் உருவெடுத்து வளர்ந்துள்ளது.

துணை நின்ற நூல்கள்

1. சோழன் பூர்வ பட்டயம்
2. History of Kongu – R.Ramamoorthy.
3. ஈரோடு மாவட்ட வரலாறு - பேராசிரியர் செ.இராசு.

பெருங்கற்காலம்

பெருங்கற்காலத்தில் ஈரோடு மாவட்டத்தில் மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதற்கு சான்றாக இம்மாவட்டத்தின் பெரும் பாலான கிராமங்களில் பெருங்கற்கால சின்னங்கள் இருக்கின்றன. இவற்றின் காலம் கி.மு.300 என்று தொல்லியல் அறிஞர்கள் வரையறுத்துள்ளனர். மேலும் ஈரோடு மாவட்டத்தில் பெருங்கற்கால ஈமச்சின்னங்களான கல்பதுக்கை, கல்லரன், தொப்பிக்கல், முதுமக்கள் தாழிகள் ஏராளமாக உள்ளது. இந்த ஈமச் சின்னங்களின் உட்பகுதியில் இரும்பு பொருள்கள் மிகுதியாக உள்ளது. இந்த பெருங்கற்கால சின்னங்களில், மாடு, குதிரை, சேவல், நாய் விலங்குகளின் எலும்புகளும் கிடைத்துள்ளது. மனிதர்களின் எலும்புக் கூடுகளும் கிடைத்துள்ளது. பெருங்கற்கால சின்னங்களில் கிடைக்கின்ற பானை ஓடுகளின் இலம் வாரியாக உள்ளது. இந்த பானை ஓடுகளின் பகுப்பினை வைத்து குறிப்பாக கருப்பு சிவப்பு பானை ஓடு (Black and Red Ware) வேளீர் மரபினர் பயன்படுத்தினர் என்றும், இவர்கள், கால்நடை வளர்த்தல், விவசாயம், மீன்பிடித்தல் போன்ற தொழில்களில் ஈடுபட்டுள்ளனர் என்பதையும் பெருங்கற்கால சின்னங்களின் நிலையிலிருந்து மனிதர்கள், குடித்தலைவர் ஆட்சி உருவாகியிருக்கலாம் என்பதை அறிய முடிகின்றது.

மலைப்பகுதிகளிலும், ஆற்று ஓரங்களிலும் சுற்றி திரிந்த மனிதன், ஓர் இடத்தில் நிலையாக தங்கி கால்நடை வளர்த்தல், மீன்பிடித்தல், விவசாயம் போன்ற தொழில்களை உருவாக்கியுள்ளான் என்பதை உணர முடிகின்றது. பெருங்கற்கால மக்கள், இரும்பு பயன்பாடு, கால்நடை வளர்த்தல், விவசாயம் குறிப்பிட்ட பகுதியில் செய்து வேறு பகுதியில் வேறு குடிகளிடையே பண்ட மாற்று முறையை உருவாக்கியுள்ளனர். இதன் பொருளாதார வளர்ச்சி காரணமாக மனித வளமும், பொருள் வளமும் செழித்து வணிக வளமும் உருவாயிற்று. வணிக வளங்கள் உருவாகி தென்னாட்டு, வடநாட்டு பெருவழிகளும் உருவாயிற்று. மனித

நாகரிகம் வளர்ச்சி, மனித முயற்சி காரணமாக ஈரோடு மாவட்டத்தில் கனிம வளமும் உருவாயிற்று.ஈரோடு மாவட்ட பெருங்கற்கால சின்னங்களின் இருப்பிடங்களுக்கு அருகிலேயே கனிம வள ஊர்கள் பல உள்ளது தெரியவந்துள்ளது. இந்த மாவட்டத்தில் கனிம சுரங்ககளில் கடல் நீல பச்சைக்கல், பளிங்குக்கல், பூனைக்கல், அகேட, ஜேஸ்பர், சந்திரகாந்தக்கல் கனிம வளங்கள் கிடைத்துள்ளது. இந்த பொருளாதார வளர்ச்சி மக்கள் குடி, குடியாட்சி மாறி குடித்தலைவரின் ஆட்சி மலர்ந்துள்ளது என்பதை அறியலாம்.

பானை ஓட்டில் குறியீடுகள்

தமிழகத்தில தமிழ் பிராமி வரிவடிவம் தமிழகத்தில் வருவதற்கு முன்பே மக்கள் தங்கள் எண்ணம், கருத்துக்கள் பகிர்ந்து கொள்ள குறியீடுகளை பயன்படுத்தியுள்ளனர். ஈரோடு மாவட்டத்தில் கொடுமணல் அகழாய்வில் கிடைக்கும் கருப்பு சிவப்பு பானை ஓடுகளில் வெவ்வேறு வகையான குறியீடுகள் கிடைத்துள்ளன. இவ்வகழாய்வில் மேல் மண் அடுக்கு பாகங்களில் குறியீடு பொறித்த பானை ஓடுகள் ஏராளமாக கிடைத்துள்ளன. எனவே இந்த குறியீடுகளின் தன்மை, அளவு. வுடிவம் அடிப்படையாகக் கொண்டு தமிழ் பிராமி வரி வடிவங்கள் போன்றே இந்த குறியீடுகளும் இடமிருந்து வலமாக வரையப்பட்டுள்ளது. எனவே தமிழ் பிராமி வரிவடிவம் வந்தவுடன் இக்குறியீடுகளின் பயன்பாடு குறைவாக வெளிப்படுகின்றது. எனவே பெருங்கற்கால சின்னங்களின் பானை ஓடுகளில் குறியீடு பழக்க வழக்கங்கள், மற்றும் ஒரு குடும்பத்தின் குறியீடாகவும், ஒரு கூட்டத்தின் குறியீடாகவும் இருக்கலாம் என்பதனை உணர முடிகின்றது.

துணை நின்ற நூல்கள்

1. சு. இராசவேலு, கோ. திருமூர்த்தி, தமிழ் நாட்டு அகழாய்வுகள்
2. K.Rajan, Archaeology of Tamil Nadu (Kongu Country)
3. தமிழக வரலாற்றுக் குழு, தமிழ்நாட்டு வரலாற்று தொல்பழங்காலம்

ஈரோடு மாவட்ட அரசியல் பின்னணி

ஈரோடு மாவட்டத்தில் வடகொங்கு நாட்டையும், தென்கொங்கு நாட்டையும் உள்ளடக்கிய காஞ்சிகூவல் நாடு, ஒடுவங்கநாடு, அரையநாடு, குறுப்பு நாடு, மனநாடு, காங்கேயநாடு, மேல்கரைபூந்துறைநாடு, வடகரைநாடு ஆகிய ஒன்பது நாடுகள் அடங்கியது. பழைய கொங்கு நாட்டின் நான்கு பங்கு பரப்பளவில் ஒரு பங்கு பரப்பளவு ஈரோடு மாவட்டத்தில் உள்ளது.

சங்க காலத்தில் ஈரோடு

பெரியார் மாவட்டத்தில் உள்ள கொங்கு அரையம், கொடுமுடி,சென்னிமலை, கொடுமணல், பூந்துறை, பெருந்துறை, போன்ற ஊர்கள் சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளது. சங்க கால பெரும்புலவர்கள் பொன்முடியார், பெருந்துறை வட்டம் 'பொன்முடி' ஊரைச் சார்ந்தவர்கள். பெருந்தலைச் சாத்தனார் 'பெருந்தலையூரையும்' சேர்ந்தவராவர். சங்க காலத்தில் ரோமானியர் காங்கயம் அருகே படியூரில் பெரில்ஸ் என்ற கடல்நிற வைரக்கற்கள் கிடைத்தன என்பதைப் பற்றி 'பிளினி' குறிப்பிடுகின்றார்.

சங்க இலக்கியத்தில் 'ஆகெழு கொங்கு' என்ற குறிப்பு காணப்படுகின்றது. சங்க காலத்தில் பல வேளீர்கள் சிற்றரசர்களாக வாழ்ந்துள்ளனர். கிழக்கு கடற்கரையையும், மேற்கு கடற்கரையையும் இணைக்கும் தேசிய நெடுஞ்சாலைகள் பல ஈரோடு மாவட்டத்தில் சென்றுள்ளது மற்றும் பவானி, காஞ்சி (சேரர் ஆதிக்கம் நொய்யல்) 'அமராவதி' போன்ற ஆறுகள் சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்படுகிறது.

வரலாற்றுக் காலத்தில் ஈரோடு மாவட்டம்

இராட்டிர அரசர்கள்

கி.பி.முதலாம் நூற்றாண்டு சங்க காலத்தை அடுத்து இரட்டர், கங்கர் என்ற அரசு வம்சத்தினர் தாராபுரம் அருகில் உள்ள 'கொங்கூர்' என்ற ஊரை தலைநகராகக் கொண்டு ஆட்சி நடத்தியுள்ளனர். இரட்டர் அரச மரபினர் வீரராயன் தொடங்கி ஏழு அரசர்களும், இவர்களின் கல்வெட்டுகளும் ஈரோடு மாவட்டத்தில் உள்ளது.

கங்கர்கள்

கங்கர் அரசர் வழியில் கொங்க வர்மன் தொடங்கி இருபது அரசர்களும் இருந்துள்ளனர். இவ்வரசர்கள் நாடுகளைப் பிரித்து நிர்வாக வசதிக்காக கிராம அதிகாரிகளையும் நியமித்துள்ளனர். இந்த நிர்வாக முறையில் பாளையக்காரர்கள் தோன்ற வழிவகுக்கலாயிற்று. இம்மன்னர்கள் ஆலயங்கள் பலவற்றைக் கட்டி கொடைகளும் அளித்துள்ளனர். இவர்கள் காலத்தில்தான் சமண சமயம் ஈரோடு மாவட்டத்திற்குள் தோன்றி விரிவாக உள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் கி.பி. 3-ஆம் நூற்றாண்டில் இரட்டர் என்ற அரசு மரபினர் ஆட்சி செய்துள்ளனர். இவர்களில் இறுதி அரசன் கி.பி. 5-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆண்டான். இரட்டர்கள் யார் என்பதில் கருத்து வேறுபாடுகள் உண்டு. ரெட்டி மரபினர் என்று ஓர் ஆய்வாளர் கூறுவார். இரட்டிர கூடர் என்று மற்றொரு ஆய்வாளர் கூறுவார். களப்பிரர் என்று கருதுவாரும் உள்ளனர். இந்த மரபினர் கொங்கு தேச ராஜாக்கள் என்ற நூலில் மட்டும் கூறப்படுகின்றனர். இவர்கள் பற்றிய கல்வெட்டுச் சான்றுகளோ செப்பேட்டுச் சான்றுகளோ கிடைக்கவில்லை. பழந்தமிழில் "அரட்டா" என்பதே கொங்கு தேச ராஜாக்களில் ரட்டி என்று எழுதப்பட்டுள்ளது. பழந்தமிழில் அரட்டு, அரட்டர் என்பதற்கும் "குறும்பு", "குறும்பா" என்று பொருள். கொங்கு நாட்டில்

பண்டைக் காலந்தொட்டு குறும்பர்கள் வாழ்ந்துள்ளனர். "கொங்கில் குறும்பு" என்று சுந்தரர் கூறுவார். ஒருக்கால் ரட்டி (அரட்டி) என்பது கொங்கு நாட்டில் வாழ்ந்த குறும்பர்களை குறிப்பதாகலாம்.

ரட்டர்களுக்கு பின் கங்கர்கள் ஆட்சி இங்கு பரவியிருந்ததாகக் கொங்கு தேச ராஜாக்கள் கூறும், கொங்கனிவர்மன் என்பவன் கொங்கு நாட்டை ஆண்ட முதல் கங்க மன்னன் கங்கர்கள் ஆட்சி தொடர்ந்து நடைபெற்றதற்கான கல்வெட்டுச் சான்றுகள் அருகிலேயே காணப்படுகின்றன. ஆனால் கங்கர்கள் வெளியிட்ட செப்பேடுகள் சிலவற்றில் கொங்கு நாடு பற்றிய செய்திகள் உண்டு. துர்விநீதன் தாய் புன்னநாட்டின் இளவரசியாகச் சுட்டப்படுகிறாள். துர்விநீதன் செப்பேடுகள் அவனை "புன்னாட்டின் அரசன்" என்று கூறும். அந்நாடு "பாலின் வந்த பழவிறல் தாயமாக" அவனுக்குக் கிடைத்திருக்கலாம். குமரலிங்கத்தில் கிடைத்துள்ள இரவிதத்தன் என்பவன் செப்பேடுகள் புன்னாடு பற்றிச் சுட்டுகின்றன. இது கொண்டு ஆரோக்கியசாமி அவர்கள் புன்னாடு கொங்கின் வடபகுதியையும் (ஈரோடு) மைசூரின் தென்பகுதியையும் உள்ளடக்கியிருந்ததாக கூறுவார். புஞ்சைப் புளியம்பட்டிக்கருகில் நல்லூர் அத்திகோசன் கல்வெட்டு புன்னாடு என்றொரு நாட்டினைக் குறிக்கிறது. அதனால் துர்விநீதன் தாய் கொங்கு நாட்டினை சேர்ந்தவள் என்று கருத வேண்டியுள்ளது.

அண்மையில் மத்திய தொல்பொருள் ஆய்வுத் துறையினர் ஒரு செப்பேட்டினைக் கண்டு பிடித்துள்ளனர். அச்செப்பேடு பேரூர் பற்றியும் பேரூருக்கு அருகில் தடாகம் பற்றியும், ஆறு பற்றியும், மலைகள் பற்றியும் கூறுவதாகக் கல்வெட்டியல் அறிஞர்கள் கூறுவர். அது கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் ஆண்ட மாதவர்மன் காலத்தில் வெளியிடப்பட்டதாகும். கங்கர் ஆதிக்கம் கி.பி.6-ஆம் நூற்றாண்டில் நிலை பெற்றதற்கான சாசனச் சான்றுகள் கிடைத்துள்ளன.

ஈரோடு மாவட்டத்தில் பாண்டியர் ஆட்சி

பாண்டியர்கள் கொங்கு நாட்டை வென்று தமது ஆளுமைக்கு கீழ் கொண்டு வந்துள்ளனர் என்ற செய்தி வள்ளிக்குடி செப்பேடு கூறுகின்றது. மழகொங்கினை வென்றதாகவும் காவிரியை கடந்து போர் செய்ததாகவும் கொடுமுடியில் சிவபெருமானை வணங்கியதாகவும் பாண்டியர் செப்பேடு கூறுகின்றது. கொடுமுடிக்கு திருப்பாண்டி கொடுமுடி என்ற பெயருமுண்டு. நொய்யல் நதிக்கரையில் அன்னூரில் பாண்டியர் போர் செயதிருக்கின்றர். பிற்கால பாண்டியர்களில் சந்திரபாண்டியன் கொங்கு நாட்டை வென்றான். கொங்கு பாண்டியர் என்ற பெயரில் நான்கு அரசர்கள் இங்கு ஆட்சி புரிந்தனர். குலசேகரபாண்டியன், வீரபாண்டியன், சுந்தரபாண்டியன், விக்கிரமபாண்டியன் ஆகியோர் ஆவர். பாண்டியர்கள் காலத்தில் பல குளங்களையும், கால்வாய்களையும் அமைத்துள்ளனர். வீரபாண்டியன் தளபதி வெள்ளோடு களிங்கராயன் ஒரு கால்வாய் வெட்டியுள்ளான். இன்றும் இவன் பெயரோடு விளங்குகின்றது.

பாண்டியர்களில் கடுங்கோன் என்பவனுக்கு பின் வந்தவர்கள் கொங்கு நாட்டை தங்கள் ஆதிக்கத்திற்குள் கொண்டு வரப் பலகாலும் முயன்றார்கள். தேர்மாறன், கோச்சடையன் ரணதீரன் ஆகியோர் கொங்கர் கோமான் என்று குறிப்பிடப்பட்டு வருகின்றனர். தேர்மாறன் கொங்கபூமியை அடிமைப்படுத்திக் கங்கராசனுடைய மகளை மணந்தான் என்று வேள்விக்குடிச் செப்பேடுகள் கூறுகின்றன. இந்த கொங்கபூமி ஈரோடு மாவட்டமே ஆகும். இவனுக்கு பின் வந்த பராந்தக நெடுஞ்சடைநன் வீரநாராயணன் கொங்கு நாடு முழுவதையும் தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தான். வேள்விக்குடிச் செப்பேட்டில் பராந்தகன் காவிரிக்கு வடகரையில் காடவனைத் தோற்கடித்தான் என்று

குறிப்பிடப்படுகிறான். சீவரமங்கலச் செப்பேட்டில் ஆயிரவேலி, புகார், வஞ்சி ஆகிய ஊர்களை அவன் வென்றதாகவும் குறிப்பிடப்படுகிறது. கொங்கு வெற்றிக்குப் பின் பாண்டி, கொடுமுடி சென்று பசுபதியினுடைய பதமபாதத்தைப் "பணிந்து ஏத்திப்" பொற்காசுகளைத் தானமாக அளித்தான். அவனே மீகொங்கில் காஞ்சிவாயப் பேரூர் புக்குத் தருமாலுக்குக் குன்றமனையதோர் கோயில் கட்டினான் என்றும் அச்செப்பேடு கூறுகிறது. அவனுக்க பின் வந்த வரகுணன், இராசசிம்மன், வீரநாராயணன், இரண்டாம் வரகுணன் ஆகியோர் கொங்கு நாட்டினை ஆட்சி செய்தனர்.

ஈரோடு மாவட்டத்தில் சேரர் ஆட்சி

சங்க காலத்தில் சேரர்கள் ஆட்சி பரவியிருந்தது. சேரன் செங்குட்டுவன், சோழர்களோடும், பாண்டியர்களோடும் நொய்யல் ஆற்றங்கரையில் உள்ள செங்களம் என்ற இடத்தில் போர் செய்த குறிப்பு சிலப்பதிகாரத்தில் விரிவாக காணப்படுகின்றது.

அதியமான் சேரர் மரபினர் என்றும் அழைக்கப்பட்டனர். சேர அரசர்கள் கி.பி.8 முதல் 10 முடிய உள்ள ஆண்டுகளில் இரவிகோதை, கோக்கண்டன், வீரநாராயணன் போன்ற சேர அரசர்கள் ஈரோடு மாவட்டம் (கொங்கு) மீது பலமுறை படையெடுத்துள்ளனர். சேரனைப் பற்றி அனுமன் பள்ளியில் சேரர் கால செப்பேடு விவரிக்கின்றது. சேரர் கொங்கு இலக்கியத்தை அருணகிரிநாதர் பாடியுள்ளார்.

இடைக்காலச் சேரர்களில் கோகண்டன் இரவி, இரவிகோதை, ஆகியோர் கல்வெட்டுகள் ஈரோடு மாவட்டத்தில் கிடைக்கின்றன. இரவிகோதைச் செப்பேடு ஒன்று கிடைத்துள்ளது. கோக்கலீமூர்க்கன் ரவீகோதை என்று தாழி ஏரிக் கல்வெட்டு குறிப்பிடும். ஈரோட்டில் இரவிகோதைக் கல்வெட்டும், இவனுடைய மருமகன் முதலாம் பராந்தகன் கல்வெட்டும் கிடைக்கின்றன. முதலாம் பராந்தகன் காலத்திலோ அல்லது அவனுடைய ஆட்சி தொடக்கத்திலோ ஈரோடு மாவட்டம் சேர மரபினர் ஆட்சி இருந்திருக்க வேண்டும் எனலாம். தாராபுரம் வட்டம் பிரமியம் கல்வெட்டு ஒன்று சந்திராதித்ய குல பராந்தக வீநாராயணன் என்று தொடங்குகின்றது. இரவி, இரவீகோதை ஆகியோர் சந்திராதித்திய குலத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈரோடு மாவட்டத்தில் சோழர் ஆட்சி

சங்க இலக்கியத்தில் ஈரோடு மாவட்டம் செங்களம் என்ற இடத்தில் சோழர்கள் சேரர் மன்னர்களுடன் போர் புரிந்துள்ளனர். கரிகாலச் சோழன் கொங்கு நாட்டில் வாழ்நதுள்ளதை சோழன் பூர்வபட்டயம் குறிப்பிடுகின்றது. பிற்காலச் சோழன் ஆதித்த சோழன் கொங்கு நாட்டை வென்று கொழுமம் கோவிலுக்கு பொன் வேய்ந்தான் என்ற செய்தி உள்ளது. முதலாம் பராந்தகசோழன் காலத்து கல்வெட்டுகள் ஈரோடு கோவில்களில் உள்ளது. இராசேந்திரச் சோழன், இராசராசசோழன், குலோத்துங்க சோழன் போன்றவர்கள் ஈரோடு மாவட்டப் பகுதியை ஆண்டு உள்ளனர். கொங்கு சோழர்கள் இப்பகுதியை வெவ்வேறு பகுதிகளாக நிர்வாகித்துள்ளனர். அவற்றில் கொங்கு மண்டலமும் ஒன்றாகும்.

ஈரோடு மாவட்டத்தில் சோழர்கள் பல ஆலயத் திருப்பணிகள் செய்துள்ளனர். சோழர்கள் காலத்தில் கி.பி.938 முதல் கொங்குச் சோழர் என்ற தனிப்பிரிவினர் இங்கு சிற்றரசர்களாக இருந்துள்ளனர். அவர்கள் கண்டராதித்த சோழன், உத்தமச் சோழன் வழியில் வந்தவர்கள் ஆவார்கள். கொங்கூருக்கருகில் பராந்தகபுரம் என்று பெயரிட்டு ஒரு நகரை உருவாக்கினார். பின்னர் அதற்கு இராசராசபுரம் என்று பெயரிட்டனர். இப்பெயர் கொங்கு சோழர்கள் ஆட்சிக் காலத்தில் இராசப்புரம் என்று அழைத்தனர். பின்னர் இப்பெயர் மருவி தாராபுரம் என்று அழைக்கப் பெறுகிறது. சோழர்களின் ஆட்சிக் காலத்தை ஈரோடு மாவட்டத்தின் பொற்காலம் என்று கூறலாம். ஆலயத் திருப்பணிகள் பல நடைபெற்றன வணிகமும் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

கொங்கு சோழர் காலம்

ஈரோடு மாவட்டத்தில் கொங்கு சோழர்கள் மிகவும் சிறப்பாக ஆட்சி புரிந்துள்ளனர். இவர்கள் கொங்கு நாட்டை சோழர் பேரரசுகளின் பிரதிநிதிகளாக ஆட்சி புரிந்துள்ளனர்.

1. வீரசோழ பெருமான்-942-980
2. இராசகேசரி வீரசோழ கலிமூர்க்க பெருமான்-980-1004
3. பரகேசரி கலிமூர்க்க விக்கிரம சோழன்-1004-1047
4. இராசகேசரி இராசிராசன்-1085-1100
5. பரகேசரி இராசிராச உத்தம சோழன்-1100-1117
6. இராசகேசரி ராசாதி ராச வீரசோழன்-1117-1138
7. பரகேசரி உத்தம சோழ வீரநாராயணன்-1138-1149
8. இராசகேசரி - குலோத்துங்க சோழன் -1149-1168
9. பரகேசரி வீரசோழன்-1168-1195
10. இராசகேசரி குலோத்துங்கன்-1195-1207
11. இராசகேசரி வீரராசேந்திரன்-1207-1255
12. பரகேசரி விக்கிரம சோழன்-1255-1266
13. பரகேசரி விக்கிரம சோழன்-1273-1304

கொங்கு சோழர்களின் கல்வெட்டுகள், குண்டடம், சீணாப்புரம், திங்களூர், பட்ளூர், பிரமியம், பொன்னிவாடி, மூலனூர். விசயமங்கலம், வள்ளியறச்சல், பாரியூர், கீரணூர், சாத்தாம்பூர். கத்தங்கன்னி, கொங்கூர், கொடிவேரி, போன்ற ஊர்களில் காணப்படுகின்றது.

சோழர்களில் முதலாம் ஆதித்தன் கொங்கு நாட்டை வென்றதாகக் கொங்கு தேச ராஜாக்கள் என்ற நூல் குறிப்பிடும். சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட திருத்தணி செப்பேடுகளும் அவ்வரலாற்றினை உறுதிப்படுத்தும் பத்து ஆண்டுகளுக்கு முன் கோவை நகருக்கருகில் இராசகேசரிப் பெருவழி பற்றிய கல்வெட்டு வட்டெழுத்திலும். தமிழெழுத்திலும் வடிக்கப்பட்டுள்ளது.

திருநிழலு மன்னுயிருஞ் சிறந்த மைப்ப
ஒருநிழல் வெண்டிங்கள் போலோங்கி- ஒருநிழல்போல்
வாழியர்கோச் சோழன் வளங்காவிரி நாடன்
கோழியர் கோக்கண்டன் குலவு.

இக்கல்வெட்டுக்கருகில் ஆயிரம் ஆண்டுகட்கு முன் அமைக்கப்பட்ட பெருவழியும் உள்ளது. இப்பெருவழி கண்டராதித்தன் காலத்தை சேர்ந்ததென்றும், முதலாம் இராசராசன் காலத்தைச் சேர்ந்ததென்றும் இரண்டு விதமான கருத்துகள் உண்டு. இவை இரண்டும் வரலாற்று உண்மைக்கு மாறானவை. கோக்கண்டன் என்ற பெயர் சோழர் பரம்பரையில் முதலாம் ஆதித்தனையும், இரண்டாம் ராஜராஜனையும் குறித்தது. ஒரு கல்வெட்டில் பல்யானைக் கோக்கண்டன் என்ற அடைமொழி தொண்டை நாடு பாவிய இராசகேசரிக்கு அடைமொழியாகக் கூறப்படும். சோழ அரசர்களில் தொண்டை நாடு பாவிய இராசகேசரி முதலாம் ஆதித்தன் மட்டுமே அதனால் கோக்கண்டன் என்று பெருவழி கல்வெட்டு வாசகம் சோழர்களில் முதலாம் ஆதித்தனை மட்டுமே குறிக்கும். இந்த வகையில் கோவைக்கு அருகிலுள்ள பெருவழி முதலாம் ஆதித்தன் காலத்தில் புதுப்பிக்கப்பட்டது எனக் கொள்ளலாம். சங்க காலந்தொட்டுப் பாலக்காட்டுக் கணவாய் வழியே கீழ் மேல் கடற்கரையை இணைத்து பெருவழியே பின்னாளில் இராசகேசரிப் பெருவழி என்று முதலாம் ஆதித்தனால் பெயரிடப்பட்டிருக்க வேண்டும்.

முதலாம் ஆதித்தனுடைய மகன் முதல் பராந்தகன் கி.பி.907 -இல் ஆட்சிக்கு வந்தான். இவன் கொங்கு நாட்டை வென்றதாகச் செப்பேடுகளும், கல்வெட்டுகளும் சுட்டும். இவனுக்கு வீரசோழன் என்ற பட்டப் பெயர் உண்டு. இந்தப் பெயரால் கொங்கு நாட்டின் ஒரு பகுதிக்கு வீரசோழ மண்டலம் எனப் பெயர் வைத்தனர். ஈரோட்டில் முதல் பராந்தகன் கல்வெட்டுகள் கிடைக்கின்றன. இம்மன்னன் வடக்கில் பாணர்களை வென்ற போது, இவனுடைய நம்பிக்கைக்கு உகந்தவர்களாக இருந்த பிருதிவினங்கர்களைப் பாண நாட்டிற்கு சுய ஆட்சி பெற்று சிற்றரசர்களாக்கினான்.

சுய ஆட்சி பெற்ற கொங்குச் சிற்றரசர்களாக நியமித்தான். இவர்களில் ஆரம்பகால அரசர்களின் கல்வெட்டுகள் வட்டெழுத்திலும் நான்காவது அரசன் காலத்திலிருந்த கல்வெட்டுகள் தமிழெழுத்திலும் பொறிக்கப்பட்டுக் காணப்படுகின்றன. இவற்றில் வட்டெழுத்துக் கல்வெட்டுகளே காலத்தால் முற்பட்டவை.

கோனாட்டரசர்களில் வீரசோழக்கலி மூர்க்கன் என்றும் கலிமூர்க்க விக்கரம சோழன் என்றும் இரு மன்னர்கள் தொடக்கத்தில் குறிப்பிடப்படுகிறார்கள். இவர்கள் கல்வெட்டுக்களில் "கோனாட்டான் வீர சோழக்கலி மூர்க்கன்" என்றும் சுட்டப்படுகின்றனர். தொடக்கத்தில் கொங்கு நாட்டு வரலாற்றை எழுதிய கோவை கிழார் அவர்கள் இவர்களைக் கொங்குச் சோழர் என்று குறிப்பிட்டார். ஆனால் கே.பி.சுப்பிரமணிய அய்யர் என்பவர், கொங்குச் சோழர் என்று குறிப்பிடுவது பொருத்தமுடையதன்று என்று குறிப்பிட்டுடள்ளார். ஏனெனில் தஞ்சாவூர் சோழர்க்கும், கொங்கு நாட்டு அரசர்களுக்கும் எவ்விதமான இரத்த உறவும் இல்லை. அதனால் கே.பி.சுப்பிரமணிய அய்யருடைய கருத்தே ஏற்புடைத்து.

கோனாட்டரசர்களின் வழிமுறை தெளிவாக வரையறுக்கப்படவில்லை. கோவை கிழார் அவர்கள் கோகலிமூர்க்க விக்கரம சோழனே கொங்குச் சோழர்களின் முதல் அரசன் என்று கூறுவார். ஆனால் கே.பி.சுப்பிரமணிய அய்யர் வீரசோழக்கலி மூர்க்கனே முதல் அரசன் என்று கூறுவார். அதற்குக் காரணம் உண்டு. பண்டை நாளில் ஒருவர் பெயரைச் சுட்டும் போது தந்தையின் பெயரை முன்னிட்டுச் சுட்டுவது வழக்கம். அந்த வகையில் கே.பி.சுப்பிரமணிய அய்யர் கூறுவதை ஒரு மாற்றத்துடன் ஏற்றுக் கொள்ளலாம். வீரசோழக் கலிமூர்க்கன் என்பது வீரசோழனுடைய மகன் என்பவன் கோனாட்டார் ஆட்சியைக் கொங்கு நாட்டில் தொடங்கியிருக்க வேண்டும். அண்மையில் தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை, ஈரோடு மாவட்டம், வள்ளியிறைச்சல் என்ற ஊரில் இரண்டு வட்டெழுத்து கல்வெட்டுகளை கண்டுபிடித்தது. அக்கல்வெட்டு, "ஸ்வஸ்தி கோநாட்டான் ஸ்ரீ வீரசோழனுக்கு யாண்டு முப்பத்தேழாவது" என்று

குறிப்பிடும். இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் வீரசோழன், வீரசோழன் கலிமூர்க்கன் என்று முன்பு கூறப்பட்ட கோனாட்டு அரசனின் தந்தையாகக் கொள்ளலாம். மேலும் பராந்தக சோழனுடைய ஆட்சியின் பிற்பகுதியில் இவனுடைய ஆட்சி கொங்கு நாட்டில் தொடங்குகிறது. ஆதனால் பராந்தகனுக்குரிய வீரசோழன் என்ற சிறப்பு அவிநாசி வட்டம் ஆலத்தூர் வட்டெழுத்து கல்வெட்டு ஒன்று கங்கமன்னன் சிற்றரசன் ஒருவனைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

அம்மன்னன் சிந்தரையர் என்று குறிப்பிடுகிறவன் மேலைக் கங்கர்களின் சிற்றரசனாக அவன் இருந்திருக்கலாம். கங்கவாடி 96000 என்ற பகுதியில் "சிந்ததேராட்டிரம்" எனற குறுநிலப் பகுதி சுட்டப்படுகின்றது. இப்பகுதி தமிழ்க் கல்வெட்டுக்களில் சித்தவாடி என்றும் சிந்தகப்பாடி என்றும் கூறப்படுகின்றது. சிந்தவாடியை ஆண்ட மன்னர்கள் சிந்தரையர் என்று அழைக்கப்பட்டனர். கங்கர்கள் இடைக்கிடை கொங்கு நாட்டில் தங்கள் ஆட்சியினை நிலைநிறுத்தினர். வேள்விக்குடி செப்பேடுகள் இரணதீரன் கங்க மன்னனை வென்று, கொங்க பூமியை அடிமைப்படுத்தினான் என்று கூறும். அதனால் கங்கர்கள் கொங்கு நாட்டினை ஆட்சி செய்தமை உறுதிப்படும். கருநாடகத்தையும், கங்கர்கள் குறுக்கீட்டால் நொய்யலுக்கு வடக்கேயிருக்கின்ற பகுதி கருநாடக அரசுக்கு உட்பட்டிருந்தது எனக் கருத வேண்டியுள்ளது. இந்த நூற்றாண்டில் வடக்கு பகுதியில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்களும் நிலைபெற்ற ஆட்சியும் கல்வெட்டுக்கள் எழுதுவதற்கு உகந்த சூழ்நிலையை அளிக்கவில்லை.

வீரசோழ கலிமூர்க்கன் (கி.பி. 980-1004)

இம்மன்னனின் கல்வெட்டு வட்டெழுத்தில் அமைந்துள்ளது. தாராபுரம் வட்டம் பிரமியம் என்ற ஊரில் கிடைக்கின்றது. மற்றொரு கல்வெட்டு கோவை மாவட்டம் கொடுவாயில் கிடைக்கின்றது. இவ்விரு கல்வெட்டுகள் தவிர வேறு கல்வெட்டு ஏதும் கிடைக்கவில்லை.

கலிமூர்க்க விக்கிரம சோழன் (கி.பி.1004-1049)

இம்மன்னன் கலிமூர்க்கனின் மகன் என்பது முன்னொட்டுப் பெயராலேயே விளங்கும். இவன் கொங்குச்

சோழர்களில் நீண்ட காலம் ஆண்டவர்களில் ஒருவன். இவனுக்கு மட்டுமே மெய்க்கீர்த்தி உள்ளது.

வெள்ளி வெண்குடை மிளிர வேந்தி
நூகு வளம் படுத்து நையும்குடி ஓம்பி
ஆறில் ஒன்று கொண்டு அல்லவை கடிந்து
பெற்ற குழவிக்கு உற்ற நற்றாய் போல

இந்த மெய்க்கீர்த்தியில் பிற மன்னரை வென்ற செய்தி கூறப்பெறவில்லை. ஆனால் இம்மன்னன் தன் கீழ் வாழ்ந்த மக்களை மகிழ்ச்சியாக வைத்திருந்தான் என்று கூறுகின்றது. இந்த மெய்க்கீர்த்தியில் மூன்று திருக்குறள்களின் கருத்துகள் பொதிந்துள்ளன. இவன் கல்வெட்டுகள் பிரம்மியம், வெள்ளியிறைச்சல், அன்னூர் ஆகிய ஊர்களில் கிடைக்கின்றன. விக்கிரமசோழ சதுர்வேதி மங்கலம் என்றொரு சதுர்வேதி மங்கலம் ஏற்படுத்தப்பெற்றிருந்தது.

பராக்கிரம சோழன்

அண்மையில் கோபிசெட்டிபாளையம் அருகில் பராக்கிரமசோழன் என்ற பெயரோடு தொடங்கும் கல்வெட்டு ஒன்று கிடைத்துள்ளது. இக்கல்வெட்டு அவனுடைய ஆறாம் ஆட்சி ஆண்டில் பொறிக்கப் பெற்றதாகும். கோவை மாவட்டம் அன்னூரில் ஸவஹ்ரீ பராக்கிரம சோழன்கு என்று தொடங்கி நின்று விடுகிறது. இந்தக் கல்வெட்டில் குறிக்கப் பெறும் பராக்கிரம சோழன் என்பவன் கலிமூர்க்க விக்கிரமசோழன் என்று கருதப் பெறுகின்றது. காரணம் விக்கிரம சோழ அபிமான சோழன் என்று தொடங்கும் கல்வெட்டு ஒன்று அன்னூரில் கிடைக்கின்றது. விக்கிரமசோழனுடைய மகன் அபிமான சோழன் என்று கொள்ளலாம். இது கொண்டு விக்கிரம சோழனுக்கு பின் அபிமான சோழன் ஆண்டவன் என்பது இந்த கல்வெட்டால் அறியலாம். இவன் தேவரடியாருக்கும், நிமந்தகாரருக்கும் அளித்த செய்தி முருகன் பூண்டிக் கல்வெட்டு கூறுகின்றது.

அபமாசோழ ராஜாதிராஜன் (கி.பி.1080-1110)

இம்மன்ன் வடகொங்கில் ஆட்சி செய்தான். இவனுடைய கல்வெட்டு விசயமங்கலம், பட்ளூர், திருமுருகன் பூண்டி போன்ற

ஊர்களில் கிடைக்கின்றன. அவன் காலத்தில் ஈரோடு மாவட்டம் செழிப்பாக விளங்கியது.

ராஜாதிராஜ வீரசோழன் (கி.பி.1110-1118)

இம்மன்னன் வீரசோழன் என்ற பெயரோடு உள்ள இரண்டாவது மன்னன். ஆதனால் இவனை இரண்டாம் வீரசோழன் என்று அழைப்பர். இவனுடைய கல்வெட்டுகள் விசயமங்கலத்தில் மிகுதியும் கிடைக்கின்றன.

இராஜாதிராஜ உத்தம சோழன் (கி.பி. 1118-1128)

உத்தமசோழன் கல்வெட்டுகள் அகிலாண்டபுரம், பட்டாலி போன்ற ஊர்களில் கல்வெட்டுகள் கிடைக்கின்றன. இவன் காலத்தில் தான் கோடிக்காலைத் தொழு என்ற ஊரில் கோட்டையைக் கட்டி வீரகேரளர்களுக்கு ஏதிராக படையை வைத்திருந்தான். வீரகேரளர்களும் உத்தமசோழனுக்கு எதிராக வஞ்சகர் வஞ்சகன் கோட்டை என்ற பெயரில் கோட்டையை கட்டினர்.

முதலாம் குலோத்துங்க சோழன் (கி.பி. 1149-1168)

இவன் காலத்தில் வடகொங்குப் பகுதியில் அதியமானுடைய ஆதிக்கம் நிலை பெற்றது. சேவூர்க் கல்வெட்டு ஒன்று அதியமான் ஒருவனை அரசியல் அதிகாரியாகக் குறிக்கின்றது. இவன் ஆட்சியில் கொங்கு நாட்டில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்களை முடிவிற்குக் கொண்டு வருவதற்குச் சோழப் பேரரசில் அப்போது ஆட்சி புரிந்த மூன்றாம் குலோத்துங்கன் என்பவன் கொங்கு நாட்டின் மீது படையெடுத்து வந்தான். அவன் கரூரை முற்றுகையிட்டு சோழராட்சிக்கு எதிராக இருந்த தென் கொங்கு மன்னர்களை வென்று அடக்கினான். கரூரில் அவன் முடிசூடிக் கொண்டதாக கல்வெட்டுக்கள் கூறும். கோநாட்டரசன் குலோத்துங்கன், பாண்டியர் அரசியலில் ஏற்பட்ட தாயாதிச் சண்மையில் தலையிட்டுள்ளான்.

குலசேரக பாண்டியன் என்பவனுக்கும், மாறவர்மன் பராக்கிரம பாண்டியன் என்பவனுக்குமிடையே ஏற்பட்ட அரியணைப் போட்டியில் குலசேகர பாண்டியனைக் குலோத்துங்கன்

ஆதரித்தான். வீரபாண்டியனுக்கு ஆதரவாக இலங்காபுரித் தண்டநாயகன் என்பவனையும், ஜயத்ரத தண்ட நாயகன் என்பவனையும் இலங்கைப் படைக்குத் தலைமை தாங்கி வந்த ஈழப்படை பாண்டிய நாடு, கோநாடு, சோழநாடு ஆகியவற்றைக் கொள்ளையிட்டன. சோழர்கள் குழப்பமடைந்திருந்ததால் இலங்காபுரித் தண்ட நாயகன் பல ஊர்களை எரியூட்டினான். அந்த நேரத்தில் குலோத்துங்கன் குலசேகரனுக்கு ஆதரவாக இருந்த ஈழப் படையைத் தோற்கடித்தான். ஈழப்படைகளைத் தோற்கடித்ததோடு இரண்டு சேனாதிபதிகளின் தலைகளையும் வெட்டி மதுரை கோட்டை வாயிலில் தொங்க விட்டான். பாண்டியர் அரசியலில் புகுந்து குறுக்கீடு முறியடிக்கப்பட்ட பின், கொங்கு அரசர்களின் செல்வாக்கு மேலோங்கியது. இந்தச் செய்திகளெல்லாம் ஈழத்து புத்த மத வரலாறான மகாவம்சம் என்ற நூலில் குறிப்பிடப்படுகின்றன.

ஆன்னூரில் குலோத்துங்க சோழனுடைய கல்வெட்டுகள் ஏழு கிடைத்துள்ளன. அவை 4,5,7,8 ஆகிய ஆட்சியாண்டுகளைச் சார்ந்தவை. இவற்றில் ஏழாம் ஆட்சியாண்டில் நான்கு கல்வெட்டுகள் வெட்டப்பட்டுள்ளன. கல்வெட்டுகளை வெட்டிக் கொடுத்தவர்கள் சிவப்பிராமணர், வாணிகர், பெருமாள் சாமந்தர் முதலியோர். மரபு குறிக்கப்படாத இருவர் குறிப்பிடப்பட்டுள்ளனர். சேரமான் தாழன், ஆண்டான் கருத்தன் ஆகிய பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. நான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் ஆண்டுகளுக்கு ஐந்து ஓடு கொடுத்ததைப் பற்றி குறிப்பிடப்படுகின்றது. இரு திருநீலகண்டர் சிவனடியார்களுக்கு ஓடு கொடுத்ததைப் பற்றி நினைவுபடுத்துகிறது. மற்ற கல்வெட்டுக்கள் அனைத்தும் சந்தியா தீபம் வைப்பதற்குக் காசுகள் கொடுத்ததைப் பற்றி சுட்டுகின்றன.

குலோத்துங்க சோழன் ஆட்சியில் கொங்குநாடு முழுவதும் படைவீடுகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டன. கோயில்களுக்கு தானம் செய்பவர்களில் படை வீரர்களும் சேனாதிபதிகளுமே அதிகம், திருமுருகன்பூண்டி, அவிநாசி, பேரூர், ஆனைமலை, கொழுமம், கடத்தூர் ஆகிய ஊர்களில் படையைச் சார்ந்தவர்களும், சேனாதிபதிகளும் கோயில்களுக்கு

தானம் வழங்கியுள்ளனர். பேரூரில் இடங்கை படைப் பிரிவினரைச் சார்ந்த சேனாதிபதிகள் இடங்கை நாயகம் உடையார் என்ற கோயிலைக் கட்டியுள்ளனர். அதே போல அன்னூரிலும் இடங்கை நாயகம் உடையார் என்ற கோயில் இருந்துள்ளது. இக்கோயிலைக் கட்டியவர்கள் விவரம் கிடைக்கவில்லையாயினும் இடங்கைப் பிரிவினரைச் சார்ந்தவரே கட்டியிருக்க வேண்டும் எனலாம். குலோத்துங்கன் காலத்திலிருந்து படை வீரர்கள் முக்கியத்துவம் பெற்று வந்தனர்.

வீரசோழன் (கி.பி. 1183-1206)

இவன் கி.பி.1183-ஆம் ஆண்டு பட்டத்துக்கு வந்தான். இவன் இரு கொங்கையும் ஆண்டவன் என்று கூறிக் கொள்கிறான். இருகொங்கு என்பது வடகொங்கு, தென்கொங்கு என இரு பிரிவைக் குறிக்கும். கொழுமம் கல்வெட்டு ஒன்று இவன் பிறந்த நாளும், சூரிய கிரகணமும் ஒரே நாளில் இருந்தமையால் ஏற்பட்ட தோஷத்தைப் போக்க வீர சோழீசுவரம் என்ற கோயிலைக் கொழுமத்தில் கட்டினான் என்று கூறும். இவன் அக்கோயிலுக்கு இரட்டையம்பாடி என்ற ஊரையும் வீரசோழ நல்லூர் என்ற ஊரையும் தானமாக அளித்தான். வீரசோழீசுரத்தைக் கட்டிய சிற்பியின் பெயரும், கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளன. கொழுமம் கல்வெட்டில் சூரியகிரகணம் பற்றியக் குறிப்பு வருவதால் இவனுடைய ஆட்சியாண்டை அறுதியிட்டுக் கூறுமுடிகின்றது. இவன் கீழ் பணிபுரிந்த அதிகாரிகளும், சேனாதிபதிகளும் கொங்கு நாடு முழுவதுமுள்ள கோயில்களுக்கு தானம் அளித்துள்ளனர். இவ்வரசன் இரு கொங்கையும் ஆண்டதால் கொங்கு நாட்டு அனைத்துக் கோயில்களுக்கும் ஊரையும் ஊர்வரியையும் தானமாக அளித்தான். மன்னீசுவரர் கோயில்களுக்கு வீரசோழநல்லூர் என்ற ஊரை தேவதானமாக அளித்துள்ளான். அக்கல்வெட்டு "மன்னியூர் ஊரார்க்கும் தேவகன்மிகளுக்கும் நம் ஓலை கொடுத்த படியாவது" என்று தொடங்குகின்றது. அதனால் இவ்வூரை அரசன் தானே தானமாகக் கொடுத்துள்ளான் என்று தெரிகிறது.

வீரராசேந்திரன் (கி.பி. 1206-1252)

வீரசோழன் மகளான வீரராசேந்திரன் கி.பி.1206-இல்

கூறிக் கொள்கிறான். அன்னூரில் இவனுடைய கல்வெட்டுக்களில் ஆட்சியாண்டைக் குறிப்பிடும் பொழுது "எதிராமாண்டு" என்ற சொல் குறிப்பிடப்படுகின்றது. சான்றாக "ஸ்வஸ்தி ஸ்ரீ வீரராசேந்திர சோழ தேவர்க்கு எதிர் பதினேழாம் ஆண்டு" என்று வருவதைக் கூறலாம். எதிர் என்ற வாசகம் பயன்படுத்தப் பட்டால் அதைக் கூட்டி ஆட்சியாண்டைக் கொள்ள வேண்டும். அன்னூரில் எதிராமாண்டைக் குறிக்கின்ற கல்வெட்டுக்கள் ஏழு கிடைத்துள்ளன. கொங்குநாடு முழுவதும் இவனுடைய கல்வெட்டுக்கள் முந்நூற்றுக்கும் அதிகமாகக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. ஏழாம் ஆண்டு தொடங்கி முக்கத்தைத் தாம் ஆண்டு வரையிலான கல்வெட்டுக்கள் அன்னூரில் கிடைத்துள்ளன.

அரசியர்

சோழர்காலத்தில் அரசர்கள் மட்டுமின்றி அரசியரும் கோயிலைக் கட்டியுள்ளனர். அவ்வாறு அவர்கள் கட்டி எழுப்பிய கோயில்களில் வழிபாடு சிறப்பாக நடைபெற தானத்தையும் அளித்துள்ளனர். "மேல் எழுந்தருளிய தேவர்" என்று கல்வெட்டுக்களால் அழைக்கப்படும் கண்டராதித்தனின் மனைவி செம்பியன் மாதேவியார் கணவனை இழந்தபோது "மேன்மை கொள் சைவநெறி" தமிழ் கூறும் உலகமெல்லாம் தழைப்பதற்கு தன் வாழ்வின் பிற்பகுதியை அர்ப்பணித்துக் கொண்டார். அவர் கட்டிய கோயில்கள் சோழ நாட்டிலும், மழவரையர் நாட்டிலும் வரலாற்றுக் கருவூலங்களாக இன்றும் திகழ்கின்றன. கோனேரி ராஜபுரம் காமரசவல்லி, திருவாடுதுறை, கொல்லிமலை (அறப்பளீசுவரர் கோயில்) ஆகிய ஊர்களிலுள்ள கோயில்களைச் சான்றாக காட்டலாம். கொல்லிமலையில் அவ்வம்மையாரின் திருப்பணி குறிப்பிடத்தக்கது. உலகம் போற்றும் செப்புத் திருமேனிகளைச் செய்து அளித்த பெருமை அவரையே சேரும். அதேபோல் கொங்கு நாட்டை ஆண்ட கொங்குச் சோழர்களின் அரசியர்கள் தானம் அளித்துள்ளனர். முக்கோகிகழானடி, மல்லகேசி ஆகியோர் கொங்கு நாட்டுக் கோயில்களுக்கு தானம் அளித்த அரசியர் மல்லிகேசி என்பவள் வீரராசேந்திரன் மனைவி. இவள் அன்னூர் மன்னீசுவர் கோயிலுக்கு விளக்கு வைத்திருப்பதாக ஒரு கழஞ்சு பொன் அளித்துள்ளாள். வீரராசேந்திரன் சோழனுக்கு பின் விக்கிரம சோழன் என்று பல

கல்வெட்டுகள் குறிக்கப்படுகின்றது. இக்கல்வெட்டுகளில் இரண்டு அரசர்கள் விக்கிரம சோழன் என்ற பெயரில் வாழ்ந்ததைக் குறிக்கின்றன. இவ்விருவருக்குரிய கல்வெட்டுக்களையும் வகைப் படுத்திப் பார்ப்பது அரிதாக உள்ளது. வரலாற்றாசிரியர் இரண்டாம் விக்கிரம சோழன் என்றும், மூன்றாம் விக்கிரம சோழன் என்றும் இருவரைப் பிரித்துக் கூறுவர். அன்னூர்க் கல்வெட்டுக்களில் வருபவர் பெரும்பாலும் இரண்டாம் விக்கிரம சோழனாக இருக்கலாம். இவன் ஆட்சியில் பதினான்காம் ஆண்டு வரையிலான கல்வெட்டுக்கள் கிடைக்கின்றன.

விக்கிரம சோழன் (கி.பி. 1255-1266)

வீரராஜேந்தின் சோழனுக்கு பின் விக்கிரம சோழன் என்று பல கல்வெட்டுகள் குறிக்கப்படுின்றது. இக்கல்வெட்டுகளில் இரண்டு அரசர்கள் விக்கிரம சோழன் என்ற பெயரில் வாழ்ந்ததைக் குறிக்கின்றன. இவ்விருவருக்குரிய கல்வெட்டுகளையும் வகைப் படுத்தி பார்ப்பது அரிதாக உள்ளது. வரலாற்றாசிரியர் இரண்டாம் விக்கிரம சோழன் என்றும், மூன்றாம் விக்கிரம சோழன் என்றும் இருவரைப் பிரித்துக் கூறுவர். அன்னூர்க் கல்வெட்டுகளில் வருபவர் பெரும்பாலும் இரண்டாம் விக்கிரம சோழனாக இருக்கலாம். இவன் ஆட்சியில் பதினான்காம் ஆண்டு வரையிலான கல்வெட்டுகள் கிடைக்கின்றன.

கோனேரின்மை கொண்டான்

"கோனேரின்மை கொண்டான்" என்று தொடங்கும் கல்வெட்டுக்கள் அரசனே நேரடியாக அனுப்பிய ஆணையாக உள்ளன. கோநாட்டரசர்களில் முதலில் ஆண்டவர்கள் ஆணை அளிக்கும் போது தங்கள் பெயரையும் சேர்த்துக் கூறுவர். பிரமியத்தில் உள்ள ஒரு கல்வெட்டு "கோநாட்டான் கலிமூர்க்க விக்கிரம சோழனேன் எனக்கு திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற திரு நல்லியாண்டு" என்று கூறுகிறது. பின்னாளில் வந்த கொங்குச் சோழர்கள் இந்த மரபினைப் பின்பற்றவில்லை. அதனால் "கோனேரின்மை கொண்டான்" என்று தொடங்கும் கல்வெட்டுக்களை வெளியிட்ட அரசர்களை அறுதியிட்டு உரைப்பது கடினமாக உள்ளது. "கோனேரின்மை கொண்டான்" என்று தமிழ் நாட்டரசர்கள் தங்களைக் கூறிக் கொள்வது கி. பி. 10 - ஆம்

நூற்றாண்டிலிருந்து வழக்கத்தில் உள்ளது. ஆனால் கொங்கு நாட்டில் கி.பி.12-ஆம் நூற்றாண்டிலிருந்து இம்மரபு பின்பற்றப் படுகின்றது. கோனோரின்மை கொண்டான் என்ற வாசகத்துடன் தொடங்குகின்ற கல்வெட்டுக்கள் ஏழு அவற்றில் ஆட்சியாண்டு குறிப்பிடப் படுகின்றது. இக்கல்வெட்டுக்களில் ஊர்தானமும் நிலத் தானமும் மட்டுமே குறிப்பிடப்படுகின்றன. ஒரே கல்வெட்டு மட்டும் காசு கொடுத்ததைக் குறிப்பிடுகின்றது. திருவோலை இராசேந்திர மூவேந்த வேளான் எழுத்து, எல்லாம் வல்ல சோழ மூவேந்த வேளான் எழுத்து. சோழகுல மாணிக்க மூவேந்த வேளான் எழுத்து, வாணராயன் எழுத்து என்று கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படுகின்றன. இவ்வாறு குறிக்கப்படுவதால் இவர்கள் அரசன் ஆணையை அமுல்படுத்துவதற்குள் கையொப்ப மிட்டுள்ளனர் என்று கருத வேண்டியுள்ளது.

பாண்டியர்களுக்கும், கோநாட்டரசர்களுக்குமிடையில் மனைவினை உறவு ஏற்பட்டுள்ளது. அதுவும் பாண்டியரில் ஒரு பிரிவினருடன் இவ்வுறவு இருந்துள்ளது. இரு கொங்கையும் ஆண்ட கொங்க வேந்தர்களுக்கிடையில் ஏற்பட்ட சச்சரவுகளை நசுக்குவதற்கு பாண்டிய மன்னன் ஒருவன் கொங்கு அரசியலில் தலையிட்டான். இரு மன்னர்களையும் அன்புடன் சிறையில் வைத்திருந்தான் என்று சாசனங்கள் கூறும். கோநாட்டரசன் பாண்டியர் மனைவினை உறவு கோநாட்டரசர்களின் இறுதி நாட்கள் வரை நிலைபெற்றிருந்தது. திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரத்தில் உள்ள கல்வெட்டு ஒன்று விக்கிரமசோழனைப் பாண்டியன் மைத்துனர் என்று கூறுகின்றது. இவன் கோநாட்டரசர்களில் இறுதியாக ஆண்டவன். இவனுக்கு பின் சந்ததி இல்லாமையால் பாண்டியர்கள் நிருவாகத்தை மேற்கொண்டனர் என்று கருத வாய்ப்புண்டு. அவ்வூரில் வீரபாண்டியன் கல்வெட்டுகள் இரண்டு கிடைத்துள்ளன. அவற்றில் ஊர்த்தானமும், வரி பற்றிய செய்தியும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இம்மன்னன் கல்வெட்டுகள் கொங்கு நாடு முழுவதும் கிடைக்கின்றன. வீரவல்லாளனுக்கு முன் சில போஸால மன்னர்கள் கொங்கு நாட்டினை தங்கள் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வர முயற்சி செய்துள்ளனர். விஷ்ணுவர்த்தன் தன்னுடைய

கல்வெட்டுகளில் கொங்கர்களை வென்றதாக கூறிக்கொள்வான். மற்றொரு மன்னன் தன்னுடைய மெய்க்கீர்த்தியில் கொங்கர், பொலுவர், தோடர், மலையாளர், காலன் என்பது வேட்டுவர்களையும், குறும்பர்களையும் குறிப்பதாகலாம். பொலுவர் என்பது பூலுவர் என்ற பழங்குடிகளைக் குறிக்கும் மலையாளர் என்பவர்கள் மலையில் வசிக்கும் மலசர் என்பாரைக் குறித்து வந்தது. இந்த வெற்றியில் குறிக்கப்படுபவர்கள் பழங்குடிகளும், மலைவாழ் மக்களும் ஆவர். போஸால மன்னன் படையெடுத்து வந்த போது கொங்கின் வட பகுதியில் அரசாட்சி நிலையற்றிருந்தது போலும். அதனால் தான் அவன் அரசர்களை வென்றதாகக் கூறிக் கொள்ளவில்லை. கொங்கர்கள், பூலுவர்கள், மலையாளர் போன்றவர்கள் வடகொங்குப் பகுதியில் வாழ்ந்த குடிகள் போஸால மன்னன் தன்னுடைய கல்வெட்டுகளில் குடிகளை வென்றதாகக் கூறுவதும் இவர்களைத்தாம்.

மூவேந்த வேளான் என்னும் பட்டப் பெயர் முதல் பராந்தகன் காலத்திலிருந்து வழக்கத்திலிருந்து வரும் பெயர். அதற்குமுன்"வேளான்" என்ற பட்டப் பெயர்ப் பயின்று வரக் காணலாம். கொங்கு நாட்டுக் கல்வெட்டுக்களில் மட்டுமின்றி தமிழ்நாடு முழுவதும் "வேளான்" என்ற பட்டப் பெயரினைக் கல்வெட்டுக்கள் கூறும். "அண்ட நாட்டு வேளான்" என்று மயில்ரங்கம் கல்வெட்டுக்கள் யகூறும். கொங்கு நாட்டுக் கல்வெட்டு ஒன்று "வெட்டுவரில் வேளான்" என்று கூறும். "வேளான்" என்பதற்குத் தமிழ்ப் பேரகராதி ஒரு சாதிப் பெயர் என்றும், குலாலர் என்றும் கூறும். ஆனால் அச்சொல் கல்வெட்டில் பயின்று வருகிற இடமும், முறையும் இப்பொருள்களைத் தரவில்லை. வேளான் என்பது தலைவன், அரசியல் அதிகாரி என்ற பொருளில் வழங்குகின்றது. நாட்டு வேளான் என்பது நாட்டுக்குத் தலைவன் அல்லது அதிகாரி என்ற பொருளைத் தரும். சங்க காலத்தில் வெள் என்று கூறப்படுவதின் அடியாக இச்சொல் பிறந்திருக்கலாம். வெள் என்பதற்குக் காலம் தோறும் போருள் மாறி வந்துள்ளதைக் காணலாம். வேளிர் குலத்தான், சருக்கிகய வேந்தன் சிற்றரசன், வேளாளர்க்குப் பண்டை தமிழ் அரசர்கள் கொடுத்த பட்டம். சிறந்த ஆண்மகன் என்று பல பொருள்கள் வழங்கப்பட்டு வந்துள்ளன. இவை அனைத்தும் சிற்றரசர்கள் அல்லது தலைவன் என்ற

பொருளில் வழங்கி வந்துள்ளமையால் வேள், வேளான், மூவேந்த வேளான் ஆகிய சொற்கள் ஊர்த்தலைவன், நாட்டுத் தலைவன் ஆகிய பொருள்களில் வழங்கி வந்தது என்று கொள்வதில் தவறில்லை. மூவேந்த வேளான் என்ற் அதிகாரி நிலஞ்சம்பந்தமான ஆவணங்களில் மட்டும் கையொப்பமிட்டுள்ளான். ஆதனால் அவர்களுடைய பணி நிலஞ்சம்பந்தப்பட்டது என்று கூறலாம்.

வீரபாண்டியன் (கி.பி.1282-1303)

கோநாட்டரசர்களுக்கு பின் ஆட்சி செய்த அரசர்களைக் கொங்கு பாண்டியர் என்று கூறுவர். ஆனால் இவர்கள் மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த பாண்டிய மரபினர் சுந்தரபாண்டியன், வீரபாண்டியன் என்ற இரு பாண்டியர்கள் இப்பகுதியை ஆண்டுள்ளனர். விக்கிரம பாண்டியன் என்றொரு மன்னனும் குறிப்பிடப்படுகின்றான். பாண்டியர்கள் கொங்கு நாட்டு அரசியலில் கி.பி.7-ஆம் நூற்றாண்டிலிருந்து ஈடுபாடு கொண்டிருந்தனர். இடையில் சோழர்கள் ஆதிக்கம் ஏற்பட்ட போது பாண்டியர்கள் கொங்கு நாட்டு அரசியலில் பெற்றிருந்த செல்வாக்குக் குறைந்தது. கோநாட்டரசர்களில் பிற்பகுதியில் ஆண்டவர்கள் பாண்டியர்களுடன் நெருங்கிய உறவு வைத்திருந்தனர். பாண்டியர்களுக்கும் கோநாட்டரசர் களுக்குமிடையில் மனைவினை உறவு ஏற்பட்டுள்ளது. அதுவும் பாண்டியரில் ஒரு பிரிவினருடன் இவ்வுறவு இருந்துள்ளது. இரு கொங்கையும் ஆண்ட கொங்கு வேந்தர்களுக்கிடையில் ஏற்பட்ட சச்சரவுகளை நசுக்குவதற்கு பாண்டிய மன்னன் ஒருவன் கொங்கு அரசியலில் தலையிட்டான். இரு மன்னர்களையும் அன்புடன் சிறையில் வைத்திருந்தான் என்று சாசனங்கள் கூறும். கோநாட்டரசர் பாண்டியர் மனைவினை உறவு கோநாட்டரசர்களின் இறுதி நாட்கள் வரை நிலை பெற்றிருந்தது. திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரத்தில் உள்ள கல்வெட்டு ஒன்று விக்கிரமசோழனைப் பாண்டியன் மைத்துனர் என்று கூறுகின்றது. இவன் கோநாட்டரசர்களில் இறுதியாக ஆண்டவன். இவனுக்கு பின் சந்ததி இல்லாமையால் பாண்டியர்கள் நிருவாகத்தை மேற்கொண்டனர் என்று கருத வாய்ப்புண்டு. அவ்வூரில் வீர பாண்டியன் கல்வெட்டுக்கள் இரண்டு கிடைத்துள்ளன. அவற்றில் ஊர்த்தானமும், வரி பற்றிய செய்தியும் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஈரோடு மாவட்டத்தில் ஓய்சாளர்கள் ஆட்சி

ஓய்சாளர்கள் "ஹளபீடு, துவார சமுத்திரம் பகுதியில் ஆட்சி புரிந்துள்ளனர். இவர்கள் கொங்கு நாட்டு வரை படையெடுத்து கொங்கு நாட்டைக் கைப்பற்றினர். ஓய்சாள அரசன் வீரகேரளர், வீரவல்லாளன் காலத்துக் கல்வெட்டுகள் பல்வேறு இடங்களில் உள்ளன.

ஓய்சாளர்கள் காலத்து கல்வெட்டுகள் காணப்படும் இடங்கள் ஆப்பக் கூடல், விண்ணப் பள்ளி, டனாயக்கன் கோட்டை, பாப்பினி கிராமம், மறவப் பாளையம் போன்ற இடங்களில் இவர்கள் காலத்து கல்வெட்டுகள் காணப்படுகின்றது.

ஓய்சாளர்கள் ஆட்சியின் இறுதி நாட்களில் ஆண்டவன் வீரவல்லாளன். இம்மன்னன் பவானி சாகரில் முழ்கியுள்ள டனாய்க்கன் கோட்டை என்ற ஊரிலிருந்து கொங்குப் பகுதியை ஆட்சி செய்தான். அக்கோட்டை நீலகிரி சாதாரணன் கோட்டை என்று கல்வெட்டுக்களில் கூறப்படுகின்றது. இக் கோட்டையிலிருந்து போஸளர் பிரதிநதியாக ஆட்சி செய்தவன் மாதப்ப தண்டநாயக்கன் என்பவன் பேரூரில் வீரவல்லாளன் நீண்ட மெய்க்கீர்த்தி ஒன்று பொறிக்கப்பட்டுள்ளது. அதில் மன்னனின் வெற்றிச் செய்திகள் சுட்டப்படுகின்றன. இக்கல்வெட்டு கொங்கு நாட்டு அரசியல் நிருவாகத்தை அறிந்து கொள்வதற்குச் சிறந்த சான்று கொங்கில் உள்ள நாட்டுச் சபைகள் நீலகிரி சாதாரணன் கோட்டை மாதவப் பெருமாள் கோயிலுக்கு தங்கள் நாட்டு வரியினை அளித்துள்ளன. போஸளர் காலத்தில் நிருவாகம் சுயாட்சித் தன்மையுடன் விளங்கியதை இக்கல்வெட்டு வலியுறுத்தும், வீரவல்லாளனுக்கு முன் வந்த போஸள மன்னர்கள் கொங்கு நாட்டில் நிலையான ஆட்சியை ஏற்படுத்தவில்லை. இவன் ஒருவனே கொங்கைத் தன் அடிக்கீழ் கொண்டு வந்தவன் என்று கூறலாம்.

வீரவல்லாளன் (கி.பி. 1292-1345)

இம்மன்னன் கல்வெட்டுக்கள் கொங்கு நாடு முழுவதும் கிடைக்கின்றன. வீரவல்லாளனுக்கு முன் சில போஸாள மன்னர்கள் கொங்கு நாட்டினைத் தங்கள் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வர முயற்சி செய்துள்ளனர். விஷ்ணுவர்த்தனன் தன்னுடைய கல்வெட்டுக்களில் கொங்கர்களை வென்றதாக கூறிக்கொள்வான். மற்றொரு மன்னன் தன்னுடைய மெய்க்கீர்த்தியில் கொங்கர், பொலுவர், தோடர், மலையாளர், காலன் என்பது வேட்டுவர்களையும், குறும்பர்களையும் குறிப்பதாகலாம். பொலுவர் என்பது பூலுவர் என்ற் பழங்குடிகளைக் குறிக்கும். மலையாளர் என்பவர்கள் மலையில் வசிக்கும் மலசர் என்பாரைக் குறித்து வந்தது. இந்த வெற்றியில குறிக்கப்படுபவர்கள் பழங்குடிகளும், மலைவாழ் மக்களும் ஆவர். போஸாள மன்னன் படையெடுத்து வந்தபோது கொங்கின் வடி பகுதியில் அரசாட்சி நிலையற்றிருந்தது போலும், அதனால் தான் அவன் அரசர்களை வென்றதாகக் கூறிக் கொள்ளவில்லை. கொங்கர்கள், பூலுவர்கள் மலையாளர் போன்றவர்கள் வடகொங்குப் பகுதியில் வாழ்ந்த குடிகள், போஸாள மன்னன் தன்னுடைய கல்வெட்டுக்களில் குடிகளை வென்றதாகக் கூறுவதும் இவர்களைத்தாம்.

வீரவல்லாளன் இறுதி நாட்கள் அரசியல் குழப்பங்களும், கலகங்களும் நிறைந்தவை. மாலிக்காபூர் என்ற முகம்மதிய படைத்தலைவன் தென்னிந்தியா மீது படையெடுத்து வந்தான். அந்தப் படையெடுப்பு போஸளர் ஆட்சியை நிர்முலமாக்கியது. போஸளர் வீழ்ச்சிக்குப் பின் கொங்கு நாட்டில் பல ஊர்கள் எரியூட்டப்பட்டன. இந்த வீழச்சிக்கு பின் அழிந்து போன தலங்களிலும், ஊர்களிலும் சென்ற நூற்றாண்டு வரையிலும் குடியேற்றம் நடைபெற வில்லை. வீரவல்லாள தேவனுக்குப் பிறகு ஆண்ட அரசர்கள் பற்றிய செய்திகள் அன்னூர்க் கல்வெட்டில் குறிக்கப்படவில்லை. ஏறத்தாழ அறுநூறு ஆண்டுகள் அன்னூரில் நடைபெற்ற ஆட்சி, அரசியல் போன்றவை தெளிவாக அறிய முடியாதனவாகவே உள்ளன.

வாணவராயர்

கொங்கு நாட்டில் மழவராயர், கச்சிராயர், இலாடராயர், பல்லவராயன். தேன்வைதரையன், வல்லவரையன் போன்ற

பட்டங்களுடன் சில சிற்றரசர்கள் ஆண்டுள்ளனர். அவர்கள் அரசியல் அதிகாரிகளாகவும் செயல்பட்டுள்ளனர். அத்தகைய அதிகாரி மரபினுக்குள் வாணவராயரும் அடங்குவர். சங்க காலத்தில் பாண அரசர்கள் தமிழகத்தின் வடபகுதியை ஆண்டனர். இவர்கள் நாடு வடுக நாட்டை அடுத்திருந்தது. கடம்பர், பல்லவர் சாசனங்களில் பெரும்பாணர் என்ற மரபினர் கூறப்படுகின்றனர். இவர்கள் ஆண்ட பகுதி பெரும்பாணப்பாடி என்றும், பாணராட்டிரம் என்றும் அழைக்கப்பட்டது. அண்மையில் கண்டு பிடிக்கப்பட்ட செங்கம் நடுகற்கள் பெரும் பாணரசர் என்றும் வாணவகோவரையர் என்றும் இரண்டு பாணர் மரபுகளைப் பற்றி சுட்டுகின்றன.

பாணர்கள் வரலாற்றுக் காலம் முழுவதும் பேரரசர்களாகவும் சிற்றரசர்களாகவும் இருந்தனர். பல்லவர், சோழர், கங்கர், சாளுக்கியர் போன்ற அரசு பரம்பரையினரின் கீழ் சிற்றரசர்களாக ஆண்டனர். பேரரசர்கள் பலம் குன்றும் போது தங்களை சுயட்சி பெற்றவர்களாக அறிவித்துக் கொண்டனர். மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் சோழப் பேரரசு ஒடுங்கு தசையை அடைந்த போது பாணர்கள் தன் அரசை உருவாக்கி இருந்தார்கள். அவர்களுடைய தலைநகரம் சேலம் மாவட்டத்திலுள்ள ஆறகமூர், மூவேந்த வேளான்களாகவும் பணியாற்றினர். தாராபுரம், கொழுமம், கீரனூர், பேரூர் ஆகிய ஊர்க் கல்வெட்டுக்களில் இவர்கள் அரசன் ஆணையை அமுல்ப்படுத்தி கையொப்பமிடப்பட்ட செய்தி சுட்டப்படுகிறது.

அன்னூரில் உள்ள ஒரு கல்வெட்டு வாணராயன் ஒருவன் கோயிலுக்கு வாணராயநல்லூர் என்ற ஊரைத் தானமாக அளித்துள்ளான். கோநாட்டான் கலிமூர்க்க விக்கிரம சோழனின் மூன்றாம் ஆட்சியாண்டில் இத்தானம் அளிக்கப்பட்டதாகக் கல்வெட்டுத்துறை அறிக்கை கூறுகின்றது இக்கல்வெட்டு கொங்கு சோழர்களில் முதல் விக்கிரம சோழன் காலத்தைச் சார்ந்ததா அல்லது மூன்றாம் விக்கிரம சோழன் காலத்தைச் சார்ந்ததா என்பது புலப்படவில்லை. கல்வெட்டு அறிக்கையில் முதலாம் விக்கிரம சோழன் என்று கூறப்படுகின்றது. கொங்கு அரசியல் வரலாற்றினைப் பின்னோக்கிப் பார்க்கும் போது இக்கல்வெட்டு முதல் விக்கிரம சோழன் காலத்தினைச் சேர்ந்ததாகக் கொள்ள

முடியவில்லை. கொங்குச் சோழர் ஆட்சியின் தொடக்க காலத்தில் அரசியல் அதிகாரி, மூவேந்த வேளான்கள் பற்றிய குறிப்பு ஏதும் கிடைக்கவில்லை. கி.பி.12-ஆம் நூற்றாண்டிலிருந்து தான் மூவேந்த வேளான்கள் அரசியல் அதிகாரிகள் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன. அதனால் வாணராயர் பற்றிக் குறிப்பிடுகின்ற இக்கல்வெட்டும் மூன்றாம் விக்கிரம சோழன் காலத்தைச் சேர்ந்தது என்று கொள்ளலாம். கொங்குச் சோழர் ஆட்சி பலம்குன்றி வந்ததையே இக்கல்வெட்டு சுட்டுவதாகக் கொள்ளலாம்.

கோவை மாவட்டத்தின் மேற்கு மலைத் தொடர் ஓரம், சமுத்துார் என்று ஓர் ஊர் உள்ளது. அவ்வூரில் நாயக்கர் காலந்தொட்டு வாணவராயர் என்ற பட்டத்துடன் ஒரு பட்டக்காரர் குடும்பம் உள்ளது. அவர்கள் பழனி பகுதியிலிருந்து பொள்ளாச்சிப் பகுதிக்குக் குடிபெயர்ந்து வந்தவர்கள் அவர்களிடம் ஒரு செப்பேடு உள்ளது. அச்செப்பேடு பழநி கீரலூரிலிருந்து அவர்கள் குடி பெயர்ந்து வந்ததைச் சுட்டுகின்றது. பண்டைய நாளைய பாணர்களுக்கும் சமுத்துார் வாணவராயர்களுக்கும் இடையிலான வரலாற்றுத் தொடர்பு புலப்படவில்லை. ஆனால் வரலாற்றுக் காலம் முழுவதும் தமிழகத்துப் பல்வேறு பகுதிகளுக்கும் ஆட்சி செய்த பெருமை பெற்றவர்கள். அந்த வகையில் கொங்கு நாட்டிலும் அவர்கள் குடியேற்றம் சோழர் காலத்தில் நிகழ்ந்திருக்க வேண்டும் என்று உறுதியாக நம்பலாம்.

அன்னூர் கல்வெட்டுகள் கொங்கு அரசியலில் காணப்பட்ட நிலையற்ற தன்மையினைச் சுட்டுகின்றன. கொங்கின் வடபகுதியில் இருந்தமையாலும் கருநாடக மன்னர்களின் படையெடுப்பினாலும், அரசியல் உறுதித்தன்மை சீரழிந்தது. சோழன் பூர்வ பட்டயத்தில் ஆறை நாட்டில் (வடபரிசார நாடு) கோயில் திருப்பணி மிகுந்திருந்தது என்று கூறப்படுகின்றது. இருப்பினும் நூற்றாண்டுக் கணக்கில் கல்வெட்டுகள் கிடைக்கவில்லை. இதுவே அன்னூர் அரசியலில் பெற்றிருந்த பங்கினைச் சுட்டுகின்றது.

ஈரோட்டில் மதுரை சுல்தான்கள்

டில்லி சுல்தான்களின் பிரதிநிதிகளாக மதுரையை தலைநகரமாகக் கொண்டு ஆட்சி புரிந்துள்ளனர். இந்த மதுரை சுல்தான்களின் படையெடுப்பின் போது ஈரோடு மாவட்ட இந்துக் கோயில்கள் தாக்கப்பட்டு சேதமுற்றதா? என்பதை தாராபுரம், கொளுஞ்சிவாடி,கொடுவாய் கல்வெட்டுகள் தெரியப்படுத்து கின்றது. இவர்கள் ஆட்சிக் காலம் கி.பி.1365 வரை. ஈரோடு மாவட்டத்தின் தெற்கு பகுதியை முழுமையாக ஆட்சிபுரிந்துள்ளனர்.

விஜயநகரர் ஆட்சி

விஜயநகர அரசர் இரண்டாம் மன்னர் கம்பண்ண உடையார் காலம் முதல் கொங்கு நாடு விஜயநகரர் ஆட்சிக்குட்பட்டது. விஜயநகர அரச வம்ச பிரிவுகளாகிய சங்கம், சாளுவ, துழவ, ஆறவீடு என்ற வம்சத்தினர் கொங்கு நாட்டை ஆட்சி புரிந்துள்ளனர். பல கோயில்களையும், கோட்டைகளையும், கொங்கு நாட்டில் கட்டியுள்ளனர். ஈரோடு மாவட்டத்தில், கிருஷ்ண தேவராயன், சதாசிவராயன், அச்சுதராயன் பொன்றவர்களின் கால கல்வெட்டுகள் கிடைக்கின்றன. ஈரோடு அருகே சத்தியமங்கலம் கஸ்பாபேட்டை என்ற ஊரில் கை,கால் அற்ற முடவர்களுக்கு ஒரு பாதுகாப்பு நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

டில்லி முகமதியர்கள் ஆட்சிக்கு பின் விசயநகர அரசவம்சத்தினர் ஆட்சியின் கீழ் ஈரோடு மாவட்டம் வந்துள்ளது. இவர்களில் குறிப்பிடத்தகுந்த மன்னர்கள்.

1. வீர விசைய புக்கன் உடையார்-1364-1377
2. இரண்டாம் அரிகரன் -1377-1404
3. இரண்டாம் தேவராயர் -1422-1445
4. மல்லிகார்ச்சுன ராயர் -1447-1465
5. கிருஷ்ண தேவராயர் -1509-1529
6. அச்சுத தேவராயர் -1529-1542

விசயநகர அரசர்களின் கல்வெட்டுகள் அலங்கியம், நசியனூர், அறச்சலூர், பிடாரியூர், ஊஞ்சலூர் கல்வெட்டுகளில் இவர்களின் ஆட்சிக்காலம், கொடை போன்ற விவரங்கள் காணப்படுகின்றது.

உம்மத்தூர் தலைவர்கள் ஆட்சி

ஈரோடு மாவட்டத்தில் பேரரசுகள் வலிமை குன்றும்போது சுயேச்சை மன்னர்கள் உண்டாவது வழக்கமாக இருந்துள்ளது. விஜயநகர மன்னர் தேவராயனுக்கு பின் வந்த சிலர் வலிமை குறையவே உம்மத்தார் தலைவர்கள் தனி ஆட்சி செலுத்தியுள்ளனர். வீரரஞ்சராய உடையார், வீரசிங்கராயன், வீரரஞ்சண்ண உடையார் என்ற மூவர் இத்தலைவர்களாக ஆட்சி புரிந்துள்ளனர். பெரியபாளையம், காரத்தொழுவு, தாராபுரம், குன்னத்தூர், நம்பியூர் போன்ற இடங்களில் இவர்கள் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. கோபி அருகே கொடிவேரி அணை இவர்கள் காலத்தில் கட்டப்பட்டது.

விசயநகர அரசர்களின் பிரதிநிதிகளான உம்மத்தூர் தலைவர்கள் ஈரோடு மாவட்டத்தை ஆட்சி புரிந்துள்ளனர்.

1. வீர நஞ்சைராய உடையார் -1489-1500
2. வீர சிக்கராய உடையார் -1500-1527
3. நஞ்சன் உடையார் -1527-1540

இவர்கள் காலத்து கல்வெட்டுகள் ஆந்தியூர், ஆறுதொழு, குன்னத்தூர், சர்க்கார் பெரிய பாளையம், டானாயக்கன் கோட்டை, நசியனூர், மறவப் பாளையம், வெள்ளோடு போன்ற ஊர்களில் உள்ளது.

மதுரை நாயக்கர் ஆட்சி

விஜயநகர அரசின் பிரதிநிதி நாகமநாயக்கன் மகன் விசுவநாதன் மதுரையில் முதல் நாயக்க மன்னர் ஆவார். இக்காலத்திலேயே செஞ்சி, தஞ்சை, வேலூர் போன்ற இடங்களில் நாயக்க அரசுகள் ஏற்பட்டது. ஈரோடு மாவட்ட பகுதியில் மதுரை நாயக்கர்கள் பல கோட்டைகளைப் புதுப்பித்துள்ளனர். தாராபுரம்,

டனாயக்கன்கோட்டை, அந்தியூர், ஈரோடு, காங்கேயம், விஜயமங்கலம் போன்ற இடங்களிலுள்ள கோட்டைகளை புதுப்பித்துள்ளனர். மற்றும் இவர்கள் காலத்தில் கோயில்களில் சிற்ப செல்வங்கள் மண்டபங்கள் உருவாக்கப்பட்டன. முத்துவீரப்பன் நாயக்கன் காலத்தில் ஈரோட்டில் ஒரு சத்திரம் ஏற்பட்டது. இது இப்போது "வீரப்பன் சத்திரம்" என்று அழைக்கப் பெறுகின்றது. பவானி சங்கமேஸ்வரர் கோயில் புதுப்பிக்கப்பட்டு விரிவாக்கப்பட்டது.

1. விசுவநாத நாயக்கர் -1529-1564
2. முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர் -1564-1572
3. வீரப்ப நாயக்கர் -1572-1595
4. இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர் -1595-1601
5. முத்து கிருஷ்ணப்ப நாயக்கர் -1601-1609
6. முதலாம் முத்து வீரப்ப நாயக்கர் -1609-1623
7. திருமலை நாயக்கர் -1623-1659
8. இரண்டாம் முத்து வீரப்ப நாயக்கர் -1659
9. சொக்கநாத நாயக்கர்

இவர்களின் ஆட்சிப்பகுதி ஈரோடு மாவட்டத்தில் பரவி இருந்துள்ளது.

மைசூர் ஆட்சி

மைசூரில் இருந்த விஜயநகரப் பகுதிகளை அகற்றிவிட்டு "உடையார்" எனப்படும் மரபினர் மைசூர் அரசர்களாக ஆட்சி புரிந்தனர். இவர்கள் சிறிது சிறிதாக கொங்குநாடு முழுவதையும் கைப்பற்றினர். சீரங்கப்பட்டணத்தை முதலில் தலைநகராகக் கொண்டு இவர்கள் ஆட்சி புரிந்தனர். பல கோட்டைகளையும் பலப்படுத்தினர். சிவகிரி, துடுப்பதி, பூந்துறை, சென்னிமலை, பெரியபாளையம் போன்ற இடங்களில் இவர்கள் காலத்து கல்வெட்டுகள் உள்ளது. கி.பி.1785 முதல 1792 வரை நடைபெற்ற மூன்றாம் மைசூர் போரிலும் 1799 முடிவுக்கு வந்த நான்காம் மைசூர் போரிலும் மைசூர் உடையார்களின் பங்கு உண்டு.

மைசூர் உடையார்கள் ஆட்சிக் காலம்

விசய நகர ஆட்சிக்குப் பின் ஈரோடு மாவட்டம், மைசூர் உடையார்கள் ஆட்சியின் கீழ் வந்தது. இந்த அரச வம்சத்தினரில் குறிப்பிட தகுந்த அரசர்கள்.

1. சாமராச உடையார்-1617-1637
2. முதலாம் காண்டிரவ நாகராச உடையார்-1635-1659
3. கெம்பதேவன் என்ற தொட்ட தேவராச உடையார்-1659-1673
4. சிக்க தேவராச உடையார்-1673-1704
5. முதலாம் கிருஸ்ணராச உடையார்-1714-1732
6. இரண்டாம் கிருஸ்ணராச உடையார்-1734-1766

இந்த அரசர்களின் காலத்து கல்வெட்டுகள், ஈரோடு, பவானி சங்மேஸ்வரர் கோயில், துடுப்பதி, சிவகரி, மலையப்ப பாளையம் ஆகிய ஊர்களில் கல்வெட்டுகள் கிடைக்கப் பெற்றுள்ளது.

ஐதர் அலி திப்புசுல்தான் ஆட்சிக் காலத்தில் ஈரோடு மாவட்டம்

ஈரோடு மாவட்டத்தில் ஐதர் அலி, திப்புசுல்தான் ஆட்சிக் காலம் கி.பி.1716 முதல் 1799 வரை பரவியிருந்தது. ஐதர், திப்பு சுல்தான் ஆட்சிகாலத்தில் ஆங்கிலேயர்களுக்கும் நடைபெற்ற மைசூர் போர்களில் இம்மாவட்டம் நிலை குலைந்து இம்மாவட்டத்தின் வடக்கே கிருஷ்ணா நதி முதல், தெற்கே திண்டுக்கல் மாவட்டம் வரை பரவியிருந்த திப்பு சுல்தானின் மறைவிற்கு பின் ஈரோடு மாவட்டம் ஆங்கிலேயர்களின் ஆட்சியின் கீழ் வந்தது.

ஈரோடு மாவட்டத்தில் ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலம்

ஆங்கிலேயர்கள் ஆட்சியானது திப்பு சுல்தான் மறைவிற்கு பின் கிழக்கிந்திய கம்பெனி ஆதிக்கத்திலிருந்து கி.பி.1799-1858 இங்கிலாந்து மன்னர்களின் ஆளுகையின் கீழ் வந்தது.

பண்டைய வணிகமும், பண்டைய பெருவழிகளும்

உரோமானியர்களும். யாவனர்களும் ஈரோடு மாவட்டம் பாலக்காடு கணவாயின் அருகாமையில் அமைந்துள்ளதால், இக்கணவாய் வியாபாரத்திற்கும் பயன்படும் வழியாக இருந்துள்ளது. ஈரோடு மாவட்டம் கனிமவளம் நிறைந்த பகுதியாக இருந்ததினால் மணிகற்களையும், இரும்பு கருவிகளையும் வாங்கி சென்றுள்ளனர். இந்த பொருள்களுக்கு ஈடாக பொற்காசுகளையும், வெள்ளிகாசுகளையும் வழங்கியுள்ளனர். இந்த காசுகள் ஈரோடு மாவட்டத்தில் பல இடங்களில் கிடைத்துள்ளது. ஈரோடு மாவட்டம் வழியாக பாலக்காட்டு கணவாயிலிருந்து பெருவழிகள் சென்றுள்ளது. மேலும் இம்மாவட்டத்தில் சங்க கால சேரர் காசுகள், இடைக்கால சேரர் காசுகள், இராசராச சோழன் காசுகள், பல்வேறு காலம் மற்றும் அரசர்களின் காசுகள் ஈரோடு மாவட்டத்தில் கிடைக்கப்பெற்றுள்ளது.

வணிகர்கள் தங்கும் தாவளம்

பண்டைய நாளில் பெருவழிகளில் வணிகர்கள் தங்கி செல்வதற்கும், தங்குமிடங்களை உருவாக்கியுள்ளனர். பண்டைய மூன்று வெருவழிகளில் ஒரு பெருவழி கோவை-அவிநாசி விசயமங்கலம், ஈரோடு, சேலம், ஏத்தாப்பூர், கள்ளக்குறிச்சி விழுப்புரம், திண்டிவனம் வழியாக மகாபலிபுரம் சென்றடைந்துள்ளது. இந்த வழி சென்றுள்ள ஈரோடு மாவட்டத்தில் பல ஊர்களில் உரோமானியர் காசுகள் வெளிநாட்டு கைவினைப் பொருட்கள் கிடைத்துள்ளது. மேலும் கல்வெட்டுக்களில் பல பெருவழிகளில் இருந்துள்ளதை அறியலாம் அவைகள் 1. இராசகேசரி பெருவழி, 2. வரநாராயணனப் பெருவழி, 3. சோழமாதேவி பெருவழி, 4. கொழுமம் பெருவழி, 5. கொங்கு குலவல்லிப் பெருவழி எனப் பெருவழிகளைப் பற்றிய செய்திகள் அறியப்படுகின்றது.

யவண வணிகம்

மேலைநாட்டு யவண வணிகர்கள் தமிழ்நாட்டுடன் வணிக தொடர்பு செய்வதற்கு எளிமையாகவும், விரைவாகவும் செய்ய பாலக்காட்டு கணவாய் வழியை பயன்படுத்தியுள்ளனர். பண்டைய பெருவழி ஈரோடு மாவட்டம் வழியாக சென்றுள்ள ஊர்களில் கி.பி. முதலாம் நூற்றாண்டைச் சார்ந்த உரோமானிய மன்னர்

"டைபீரியஸ்" அரசனின் வெள்ளிக் காசுகள் பூமியிலிருந்து கிடைக்கப் பெற்றுள்ளன. கொங்குநாடு மூன்று பெருவழிகளைப் பெற்ற பகுதியாகும். சமணப் படுக்கைகளும், பௌத்தபள்ளிகளும், பெரும் வழி செல்லும் பாதையிலே அமைந்துள்ளது. ஈரோடு மாவட்டம் மலைகள் சூழ்ந்த நாடாகையால் சமண முனிவர்கள் தவம் செய்வதற்கேற்ற குகைகள் உள்ளது.

துணை நின்ற நூல்கள்

1. கல்வெட்டு காலாண்டு இதழ்-52
2. R. Nagaswamy, Roman Karur
3. History of Kongu, R. Ramamoorthy

ஈரோடு மாவட்டத்தில் நாட்டுப்புற கோயில்கள்

சிற்றூர்களை கிராமம் என்றும் மக்கள் தங்களுடைய இடங்களிலேயே வைத்து வழிபடும் தெய்வங்களை கிராம தெய்வங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன.

1. நரிச்சாமி கோயில் : இக்கோயில் ஈரோடு சங்ககிரி பாதையில் உள்ளது.

2. முனியப்பன் கோயில் : ஈரோடு மாவட்டத்தில் பெரும்பாலான ஊர்களில் முனியப்பன் கோயில் உள்ளது.

3. கருப்பண்ண சுவாமி கோயில் : இக்கோயில்கள் கிராமங்களின் புஞ்சை காடுகளில் மரத்தின் கீழ் அமைக்கப் பட்டுள்ளது.

4. சாமுண்டியப்பன் கோயில் : சாமுண்டியப்பன் கோயில் பெரும்பாலும் மரத்தடியில் உள்ளது

5. மதுரைவீரன் கோயில் : ஈரோடு மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மக்கள் பெரும்பான்மையோர் வணங்குகின்ற தெய்வம் ஆகும்.

6. வீரமாச்சியம்மன் கோயில் : வீரமாத்தி என்று அழைக்கப்படும் தெய்வம் நடுகற்களின் தொகுப்பே என்று கூறலாம்.

7. அண்ணமார் கோயில் : சின்னன், பெரியண்ணன் அல்லது பொன்னர், சங்கர் என்று அழைக்கப்பெறுகின்றனர்.

8. அய்யனார் கோயில் : ஈரோடு மாவட்டத்தில் ஒவ்வொரு கிராமத்திலும், காவல் தெய்வமாக வைத்துள்ளனர்.

9. தம்பி தலை அய்யன்கோயில் : தம்பி தலை அய்யன்கோயில் காஞ்சிக் கோயிலில் உள்ளது.

10. வேட்டுவர் கோயில் : கொங்கு வேளாளர்களின் வீரத் தளபதிகளின் நினைவு, வரலாற்று சின்னமாக வேட்டுவர் கோயில்கள் உள்ளன.

11. காளியம்மன் கோயில் : இக்கோயில்களை கிராமத்தில் வெவ்வேறு பெயர்களில் வெக்காளியம்மன், பத்ரகாளியம்மன், வனபத்ரகாளியம்மன், கெங்காலம்மன், கரியகாளியம்மன் என்று அழைக்கின்றனர்.

12. செம்படை அண்ணன்மார் கோயில் : சித்தோடு கொளகொல்லி கிராமத்தில் இக்கோயில் உள்ளது.

ஈரோடு மாவட்டத்தைச் சார்ந்த தமிழ்ப் புலவர்கள்

விசயமங்கலத்தில் சமணர்கள் தமிழ்ச் சங்கம் ஒன்றை நிறுவியுள்ளனர். "பெருங்கதை" என்னும் காப்பியத்தை எழுதிய பொன்முடியார் என்பவர் கொங்கு வேளிர் விசயமங்கலத்தைச் சார்ந்தவர். இவர் துர்வீநீதனின் வடமொழி "பிருகதகதா" என்னும் நூலை மொழிபெயர்த்தது பற்றிய தொன்மையான கல்வெட்டு செய்திகள் கூறுகின்றன. நன்னூல் இயற்றிய "சன்மதி", "முனிவர் மகன்", "பவனந்தி முனிவர்" பெருந்துறை சீனாபுரத்தைச் சார்ந்தவர். கனகாபுரமும் தொண்டைநாட்டு கனகாபுரமும். பவனந்தி ஊர் அல்ல ஈரோடு மாவட்டத்து சீனாபுரம் ஆகும். சிலப்பதிகாரத்துக்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் விசயமங்கலம் அருகே இருந்த "நிரம்பை" என்ற ஊரைச் சார்ந்தவர். சீவகசிந்தாமணி ஆசிரியர் திருத்தக்கதேவர் "பெருவஞ்சி" என்கின்ற தாராபுரத்தைச் சார்ந்தவர். வச்சனந்தி மாலை, நேமி நாதம் என்ற இரண்டு நூல்களை இயற்றிய குணவீரபண்டிதர் கொங்கு நாட்டவர். இந்நூல்கள் ஈரோடு மாவட்டம் விசயமங்கலத்தில் தான் இயற்றப்பட்டது. கொங்கு மண்டல சதகம் என்னும் நூலைப் பாடிய "ஜிதேந்திரா" என்கின்ற கார்மேகக் கவிஞர் பிறந்த ஊர் விசயமங்கலம் ஆகும்.

ஈரோடு மாவட்டத்ததில் பண்டைய பெருவழிகள் (தேசிய நெடுஞ்சாலைகள்)

ஈரோடு மாவட்டத்தில் பண்டைய அரசு, அரசியல் மாற்றங்களுக்கேற்ப வாணிப வழித்தடங்களுடன் தோன்றலாயிற்று. மேற்கு கடற்கரை தொண்டி, முசிறியிலிருந்து கிழக்கு கடற்கரை பூம்புகார் வரை பல பெருவழிகள் ஈரோடு மாவட்டம் வழியாக சென்றுள்ளது.

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஈரோடு மாவட்டத்தின் பங்கு

இந்தியாவில் வியாபாரம் செய்யவந்த கிழக்கிந்திய கம்பெனி இந்தியாவை அடிமைப்படுத்தியது, இந்த அடிமை தனத்தை அகற்ற இந்தியாவில் சுதந்திர போராட்டம் உருவானது. இந்த சுதந்திரப் போராட்டத்தில் ஈரோடு மாவட்டத்தில் குறிப்பிடத் தகுந்தவர்கள் தீரன்சின்னமலை, திருப்பூர்குமரன், தந்தை பெரியார் இவருடை துணைவியார் நாகம்மையாரும், பெரியாரின் தங்கை கண்ணம்மாவும் குறிப்பிடத் தகுந்தவர்கள், மற்றும் பல விடுதலைப் போராட்டங்களும் நடந்துள்ளது.

நாட்டுப் பிரிவுகள்

கொங்கு நாட்டில் வரலாற்றுக் காலத்தில் பல நாட்டுப் பிரிவுகள் இருந்துள்ளது. நாடு என்ற சொல் பொதுவாக நிலம், நாட்டுப் பகுதி என்று அழைக்கப்படுகின்றது. மற்றொரு பொருள், நாடு என்றால் காட்டை அழித்து உருவாக்கப்பட்டது என்றும், வேளாண்மை பகுதிகளின் கூட்டமைப்பு தான் நாடு என்றும், சோழன்பூர்வ பட்டயம் குறிப்படுகின்றது.

கொங்கு நாடு

பண்டைய தமிழகம் வடக்கில் வேங்கடமும், தெற்கில் குமரிமுனையும, கிழக்கு, மேற்கில் கடலீகள் எல்லைகளாக அமைந்துள்ளது. மேலும் அக்காலத்தில் தமிழ்நாட்டில் சேரர், பாண்டியர், தொண்டைநாடு, கொங்குநாடு, நாட்டுப் பிரிவுகள் இருந்துள்ளது. சங்க இலக்கியங்களில் கொங்கு நாட்டைப் பற்றிய குறிப்புகள் "கொங்கு", "கொங்கர்" என்ற சொற்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. கொங்கு நாட்டு வடக்கில் பெரும்பாலையும், தெற்கில் வைகாவூர் நாட்டு பழனியும், மேற்கில் வெள்ளியங்கிரி மலையும், கிழக்கில் குளித்தலையும் எல்லைகளாக அமைந்துள்ளது.

நாட்டுப் பிரிவுகள்

வரலாற்றுக் காலம் முதல் கொங்கு நாடு, தென்கொங்கு, வடகொங்கு, மேல் கொங்கு, கீழ்கொங்கு என்று நான்கு பிரிவுகள் இருந்துள்ளது. இந்த நான்கு பிரிவுகளில் ஈரோடு மாவட்டம் தென் கொங்கு பிரிவு, வடகொங்கு பிரிவுகளில் அமைந்துள்ளது. கொங்கு நாட்டை கொங்கு அரசர்கள் தங்கள் ஆட்சிப் பிரிவு நன்மைக்காக இருபத்தி நான்கு நாடுகளாக பிரித்து நிர்வாகித்துள்ளனர். அவைகள் 1. பூந்துறைநாடு, 2. தென்கரைநாடு, 3. காங்கயநாடு, 4. பொங்கலூர்க்காநாடு, 5. அரையநாடு, 6. வாயரைக்காநாடு, 7. கிழங்குநாடு, 8. வடகரைநாடு, 9. தலையநாடு, 10. பூவானிநாடு, 11. தட்டயநாடு, 12.வடபரிசாரநாடு,13. ஒடுவங்கநாடு, 14. மேல்கரை பூந்துறைநாடு, 15 .நல்லூர்க்காநாடு, 16. நரையனூர்நாடு

17.அண்டநாடு, 18.வெங்கலநாடு, 19.கீழ்க்கரை பூந்துறைநாடு, 20.காவடிக்காநாடு, 21.ஆரைக்கால்நாடு, 22.குறுப்புநாடு, 23.காஞ்சிகோயில் நாடு, 24.சூவகாவூர் நாடு என பிரிவுகள் இருந்துள்ளன. மேலும் இந்த 24 நாட்டு பிரிவுகளில் ஈரோடு மாவட்டம்

1. மேல்கரை பூந்துறை நாடு - ஈரோடு வட்டத்திலும்
2. மேல்கரை அரையநாடு - ஈரோடு வட்டம்
3. ஒடுவங்க நாடு - சத்தியமங்கலம் வட்டம்
4. வடகரை நாடு - பவானி வட்டம்
5. காஞ்சி கோயில் நாடு - கோபி வட்டம்
6. குறுப்பு நாடு - பெருந்துறை வட்டம்

என்ற நாட்டுப் பிரிவுகளில் உட்பட்டிருந்தது. ஈரோடு மாவட்ட கல்வெட்டுகளில் காஞ்சி கோயில் நாட்டுக்கும், மேல் பூந்துறை நாட்டுக்கும் இடையில் உள்ள ஊர்கள், காஞ்சிதுண்டம் என்றும், தென்கரைநாட்டு பகுதி நசியனூர் என்றும், குறுப்பு நாட்டின் தென்பகுதி தென் குறுப்பு நாடு என்றும் செய்திகளில் குறிப்பிடப்படுகின்றது.

துணை நின்ற நூல்கள்

1. தொல்குடி வேளீர் அரசியல் - இரா.பூங்குன்றன்.
2. V. Manickam – Kongunadu.
3. கொங்குச் சோழர் - க. அ. புவனேஸ்வரி.

நீர்ப்பாசனம்

ஈரோடு மாவட்டத்தில் பண்டைய காலம் முதல் விவசாய பணிகளுக்காக ஆற்றுப் பாசனம், ஏரிப்பாசனம் முறையை பயன்படுத்தியுள்ளனர். சங்க கால சேர மன்னர் "இரவிக்கோதை" ஆட்சிக்காலத்தில் "தாழிவரி" ஈரோட்டில் உண்டாக்கப்பட்டது. இந்த ஏரியை வெட்டியவன் "தென்னவன் பேரரையனான வஞ்சி வேள் தாழி" எனபவர் ஆவார். இந்த தாழி ஏரியை ஈரோட்டில் வாழும் வேளாளர்களும், ஈரோட்டில் வாழ்பவர்களும், குடிபுகுகின்றவர்களும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் இக்குளத்தின் பராமரிப்பிற்காக பத்துகழஞ்சு பொன் மூலப் பொருளாக வைத்து அதற்கு ஆண்டு தோறும் வரும் பத்து கல நெல் வட்டியை வைத்து பராமரிக்க வேண்டும் என்றும் தாழி ஏரி கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

ஈரோடு மாவட்டத்தில் காவிரியாறு, பவானியாறு, நொய்யலாறு, அமராவதி ஆறும் ஆண்டு தோறும் நீர்ப்பாசனத்திற்கு பெரிதும் துணை நிற்கின்றது.

மேலும் காலிங்கராயன் டனாயக்கன் கோட்டைப் பகுதியில் பவானியாற்றில் ஒரு அணையை கட்டினான். இந்த அணையின் பெயர் "லங்க்ய்யன் அணை" என்றும் அழைக்கப்பெற்றது.

ஈரோடு மாவட்டத்தில் கி.பி.12-ஆம் நூற்றாண்டில் பாண்டியர் வீரபாண்டியனின் ஆட்சி காலத்தில் "லங்கையய்யன்" தளபதி பூந்துறை நாட்டில் பவானி ஆறும், காவிரியாறும் கூடும் இடத்தில் அணையை கட்டியுள்ளார் என்று கல்வெட்டு செய்தி மூலம் அறியப்படுகின்றது.

உம்மத்தூர் தலைவன் "நஞ்சராயன்" ஆட்சிக் காலத்தில் பவானி ஆற்றில் கொடிவேரியில் நீர்ப்பாசனத்திற்காக ஓர் அணையை கட்டியுள்ளான், மேலும் வரலாற்றுக் காலத்தில் அமராவதி ஆற்றில் பல தடுப்பு அனைகள் நீர்ப்பாசனத்திற்காக கட்டப்பட்டு, நீர்ப்பாசனத்திற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.

துணை நின்ற நூல்கள்

1. கலைமகள் கல்விக்கூடம் - புலவர். செ. இராசு.
2. History of Kongu - R. Ramamoorthy.
3. கொங்கு நாட்டு வரலாறு - கோ. ம. இராமசந்திரன்.
4. கொங்கு நாட்டு கல்வெட்டுகள் - மா. கணேசன், இரா. ஜெகதீசன், கோயமுத்தூர் மாவட்டம்.

கொங்கு நாட்டு எல்லைகள்

சேர,சோழ, பாண்டிய நாடுகளைப் போன்றே கொங்கு நாடும் பழமையானது. சங்க இலக்கியங்களில் கொங்கு பற்றியும், கொங்கன் பற்றியும் குறிப்பிடப்படுகின்றது. மேற்கே வெள்ளியங்கிரி மலை, கிழக்கே குளித்தலை, வடக்கே பெரும்பாலை, தெற்கே பழனிமலையும் எல்லைகளாக உள்ளது. இந்த கொங்கு நாடு மேற்கொங்கு, தென்கொங்கு, கீழ்கொங்கு, வடகொங்கு என்று நான்கு பெறும் பகுதிகளாகவும், 24 சிறு நாடுகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளன.

24- நாடுகள்

1. பூந்துறைநாடு
2. தென்கரைநாடு
3. காங்கயநாடு
4. பொங்கலூர்க்காநாடு
5. அரையநாடு
6. வாயரைக்காநாடு
7. கிழங்குநாடு
8. வடகரைநாடு
9. தலையநாடு
10. பூவானிநாடு
11. தட்டயநாடு
12. வடபரிசாரநாடு
13. ஒடுவங்கநாடு
14. மேல்கரை பூந்துறைநாடு
15. நல்லூர்க்காநாடு
16. நரையனூர்நாடு
17. அண்டநாடு
18. வெங்காலநாடு
19. கீழ்க்கரை பூந்துறைநாடு
20. காவடிக்காநாடு
21. ஆரைக்கால்நாடு
22. குறுப்புநாடு
23. காஞ்சிகோயில் நாடு
24. சூவகாவூர் நாடு

இந்த 24 நாடுகளில் தென்கொங்கு நாட்டைச் சார்ந்த காங்கயநாடு, மேல்கரைபூந்துறை நாடு, வடகரைநாடு, தென்கரைநாடு, வாஞ்சி கூவல் நாடு, மேல்கரை அரயநாடு, ஒடுவங்க நாடு. குறுப்புநாடு, மனநாடு ஆகிய பழைய ஒன்பது நாடுகள் அடங்கிய பகுதிகள் தான் ஈரோடு மாவட்டமாகும். கொங்கு நாட்டின் நான்கில் ஒரு பங்கு பரப்பளவை கொண்டது ஈரோடு மாவட்டமாகும்.

ஈரோடு மாவட்ட வரலாற்று ஆவணங்கள்

ஈரோடு மாவட்ட மக்கள் வரலாற்றை கூறும் பல ஓலைச்சுவடிகளும், செப்புப் பட்டயங்களும், பழமையான காகிதங்களும் எழுதப்பட்டுள்ளன. இந்தப் பட்டயங்களில் வரலாற்று நிகழ்ச்சிகள் பழக்க வழக்கங்கள், வழிபாடு, காணியுரிமை, நாட்டு நிகழ்ச்சிகள் பற்றி குறிப்பிடப்படுகின்றது. ஈரோடு மாவட்டத்தில் கி.பி. 3-ஆம் நூற்றாண்டு முதல் கல்வெட்டுகள் காணப்படுகின்றது. தமிழ்பிராமி கல்வெட்டுகள், அரச்சலூர் இசைக் கல்வெட்டும் பர்கூர் ஈரெட்டி மலை தமிழ் பிராமி கல்வெட்டும், கொடுமணல் பாணை ஓடுகளில் தமிழ் பிராமி எழுத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வட்டெழுத்து கல்வெட்டுகள் இருப்பிடம்

ஈரோடு மாவட்டத்தில் வட்டெழுத்துக் கல்வெட்டுகளும் மிகுதியாக காணப்படுகின்றது. குறிப்பாக கன்னிவாடி, நீலாம்பூர், பிரமியம், மூலனூர், வள்ளியரச்சல் போன்ற ஊர்களில் உள்ளது.

தமிழ்க் கல்வெட்டுகள்

தமிழ்க் கல்வெட்டுகள், ஈரோடு மாவட்டத்தில் உள்ள சிவன் கோயில், பெருமாள் கோயில், அம்மன் கோயில், பாறைகள், நடுகல் உள்ள ஊர்கள் அனைத்திலும் கல்வெட்டுகள் நிறைந்து காணப்படுகின்றது.

கன்னடக் கல்வெட்டுகள்

ஈரோட்டை ஆட்சி செய்த கன்னட அரசர்கள், விஜயநகரர், மைசூர் உடையாளர்கள் மன்னர்களின் ஆட்சிக் காலத்து கல்வெட்டுக்கள் கன்னட மொழியில் காணப்படுகின்றது. இக்கல்வெட்டுகள் ஈரோடு, விண்ணப்பள்ளி, விசயமங்கலம், எளகனஹள்ளி, நத்தகாடையூர் போன்ற ஊர்களில் காணப்படுகின்றது.

ஈரோடு மாவட்டத்தின் வரலாற்றை கூறுகின்ற கல்வெட்டுகள்

(கல்வெட்டில் நாநதேசி)

ஈரோடு மாவட்டம் வரலாற்று காலத்தில் வாணிகத்தில் சீரோடும், சிறப்போடும் விளங்கியுள்ளது. கி.பி. முதலாம் நூற்றாண்டிலேயே ரோமானியர் வாணிகம் தொடர்பு வைத்துள்ளனர். ரோமானியர்களின் பொன், வெள்ளி நாணயங்கள் இங்கு கிடைக்கின்றன. கிழக்கு கடற்கரை செல்லும் தேசிய பெருவழிகள் ஈரோடு மாவட்டம் வழியாக சென்றுள்ளது. கொங்கு நாட்டில் உள்ள "படியூரில்" கிடைக்கின்ற மணிகற்கள் ரோமானியர்களால் எடுத்துச் செல்லப்பட்டது.

திசையாயிரத்து ஐந்நூற்றுவ நாநாதேசி என்பது கொங்கு நாட்டிலிருந்த ஒரு வணிகக் குழுவின் பெயர். அவர்களுக்கும் பிற வாணிக பெருமக்களுக்கும் பாதுகாப்பாக தங்கியிருக்கும் பொருட்டு ஒரு நகரத்தை ஏற்படுத்தியுள்ளனர். இவன் பெயர் "அதிருக்குறையான்". இவன் கொங்கு வேளார்களில் "வேட்டுவன்" என்ற பிரிவைச் சேர்ந்தவன். இவன் நித்தவிநோதம் என்ற ஊரைச் சார்ந்தவன். இந்த நித்தவிநோதம் என்ற ஊர் கொங்கு 24 நாடுகளில் "கிழங்காநாடு" என்ற பகுதியில் உள்ளது. மேற்கண்ட செய்தியானது ஒரு கல்வெட்டில் குறிப்பிடுகின்றது.

இக்கல்வெட்டு கிடைத்த இடம் பூந்துறை நாட்டுப் "பழமங்கலம்" என்ற கிராமத்தில் பழனிச்சாமிக் கவுண்டர் தோட்டத்தில் கிடைக்கப்பெற்றது. இக்கல்வெட்டில் அரசன் பெயர்கள் இல்லை. இக்கல்வெட்டு எழுத்து அமைதியைக் கொண்டு ஏறத்தாழ கி.பி.11-ம் நூற்றாண்டைச் சார்ந்தவையாக இருக்கலாம். இக்கல்வெட்டில் வணிகக் குழுவிற்கு ஏற்படுத்திய நகரத்திற்கு "அடைக்கலம்" என்று குறிப்பிடுகின்றது. இதுபோன்ற வேறு பாதுகாப்பு இடங்கள் "அபயம்" அஞ்சினான் புகளிடம் என்ற பெயரைப் பெற்றுள்ளது. பிறரைக் கண்டு அஞ்சியவர்கள் இங்கு தங்கலாம். தங்களுடைய பொருள்களுக்கு பாதுகாப்பு வேண்டுபவர்களும் இங்கு தங்கலாம்.

பழமங்கலத்தில் அடைக்கலம் ஏற்படுத்திக் கொடுத்தவன் "அதிக்குறையான்" இவன் நித்தவினோதம் என்ற ஊரைச் சார்ந்தவன். இந் "நித்தவினோதம்" என்பது முதலாம் இராசராசனின் (985-1014) பட்டப் பெயர்களில் ஒன்றாகும். இவ்வூர் இராசராசனின் பட்டப் பெயர்களால் அமைந்ததாக இருக்கலாம். முதலாம் இராசராசனுக்கும், கொங்கு நாட்டுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்துள்ளது. இராசராசனுக்கு முன் இவ்வூர் பராந்தபுரம் என்று அழைக்கப்பட்டது. இராசராசன் காலத்தில் இவ்வூர் "இராசராசபுரம்" என்று அழைக்கப்பட்டு பின்னர் தாராபுரம் என்று ஆகிவிட்டது. மற்றும் ஒரு உதாரணம் பாண்டிய நாட்டில் இராசபுரம் என்று அழைக்கப்பட்ட ஊர் ராதாப்புரம் என்றும், சோழநாட்டில் இராசராசப்புரம் என்று அழைக்கப்பட்ட ஊர் "தாராசுரம்" என்றும் பிற்காலத்தில் அழைக்கப்பட்டன.

இந்த "நிதிதளிவோதம்" என்றால் தினம், தினம் புதுமைகளை செய்பவன் என்று பொருள் ஆகும். இக்கல்வெட்டு ஈரோடு பழமங்கலம் கிராமத்தில் கிடைத்துள்ளது. மிகவும் பெருமைக்குரிய செய்தியாகும்.

நீர்ப்பாசன முறை - கல்வெட்டு

ஈரோடு மாவட்டத்தில் சேரர்கள் தலையிட்டு ஆதிக்கம் செலுத்தி வந்துள்ளனர். கி.பி. 8, 9,10-ஆம் நூற்றாண்டு வரையிலும் ஆட்சி செய்துள்ளனர். குறிப்பாக கோக்கண்டததனி, ரவிகண்டன், கோதைரவி, ரவிகோதை போன்றவர்கள் ஆவார்கள். ரவிகோதை கரூர் சித்திரகூடத்தில் இருந்து அரசு பிரித்ததாக ஈரோடு செப்பேடு கூறுகின்றது. இவனுடைய பட்டப் பெயர்கள் "காவேரி வல்லவன்" "நந்திகிரிநாதன்" என்பவைகளாகும். இந்த தனிகோதையின் கல்வெட்டு ஈரோடு சிவன் கோயிலில் உள்ளது. ஈரோடு மாவட்டம் கொல்லம்பாளையம் கிராமத்தின் ஏரிக்கரையில் கிடைத்த கல்வெட்டில் சக ஆண்டு குறித்தும் கல்வெட்டு கி.பி. 948-ஆம் ஆண்டைச் சார்ந்தவையாகும்.

சேரர்கள் கொங்கு நாட்டை ஆட்சி செய்தபொழுது காடுகளை அழித்து விளைநிலமாக்கி, குளம்வெட்டி வளம் பெருக்கினர். நீரும், நிலமும் உண்டாக்கியவர்களே இவ்வுலகில் புகழ்

பெறுகின்றனர் என்பது சான்றோர்களின் கருத்து. இதன்படி சேரன் ரவிகோதையின் காலத்தில் ஈரோட்டில் ஒரு ஏரி வெட்டப்பட்டது. ஈரோட்டில் வாழும் வேளாளர்கள் உதவியுடன் ஈரோட்டில் இப்பொழுது வாழ்கின்றவர்களுக்கும், ஏற்கனவே குடிபெயர்ந்து போனவர்களுக்கும், இனிமேல் குடிபுகுகின்றவர்களுக்கும் பயன்படுகின்ற வகையில் "தென்னவன் பேரரையனான வஞ்சிவேள்தாழி" என்பவன் வெட்டி வைத்தான். இக்குளத்தின் பராமரிப்புக்காக பத்து கழஞ்சு பொன்மூலப் பொருளாக வைத்து அதற்கு ஆண்டு தோறும் வரும் பத்து கலநெல் வட்டியைக் கொண்டு இக்குளத்தை பராமரித்தனர். இக்குளத்திற்கு "தாழி ஏரி" என்று பெயரிட்டனர். காலிங்கராயன் கால்வாய் வரும்வரை இந்த ஏரி நீர் பாசனத்திற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

கிழக்குநாடு கல்வெட்டு

கொங்கு நாட்டில் 24 நாடுகளில் ஒன்று கிழக்குநாடு அல்லது கிழங்காபாடு என்பதாகும். இப்பகுதி கரூர் வட்டத்தின் ஒரு பகுதியும், குளித்தலையின் ஒரு பகுதியும் இணைத்துள்ள காவிரிக் கரையின் ஓரமாக உள்ள பகுதியாகும். ஈரோடு மாவட்டம் சிவகிரி நந்தக்காட்டில் ஒரு நடுகல்லில் கல்வெட்டு கிடைக்கப் பெற்றுள்ளன. இக்கல்வெட்டில் தலைவன் "கிழக்கு வேட்டுவரில்" கிழங்கன் பெரிய கிழங்கன் அவன் கிழங்க வேட்டுவர் பிரிவைச் சேர்ந்தவனாக இருக்கலாம். கல்வெட்டு அமைப்பிலிருந்து அவன் கிழங்கன் என்பவரின் மகனாக இருக்கலாம். வேட்டுவர்கள் கொங்கு நாட்டிற்குரிய குடிமக்கள் அவர்களில் ஒரு பிரிவினராக கிழங்க வேட்டுவர் பெயரில் கொங்கு நாட்டில் ஒரு பகுதியாக கிழங்கநாடு இருந்துள்ளது என்பதை சிவகிரி நடுகல் கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

குறும்பர் செய்த நற்பணிகள்

குறும்பர்கள் இன்று ஈரோடு மாட்டம் அந்தியூருக்கு வடக்கே உள்ள பருகூர் மலைத் தொடரில் "குறும்பர்கள்" என்ற மலைவாழ் மக்களாக வாழ்கின்றனர். இம்மக்களின் சிலர் கன்னடம் மொழி பேசுகின்றனர். சிலர் கொச்சையான தமிழும் பேசுகின்றனர். இன்று இவர்களில் "பால் குறும்பர்" "முளகுறும்பர்" என்ற பிரிவு காணப்படுகின்றது. குறும்பர்கள் கொங்கு நாட்டில் பழங்குடி

மக்களின் ஒரு இனத்தார் கொங்கு 24 நாடுகளில் குறும்பர்கள் வசித்த நாடே குறும்பர்நாடு, குறும்புநாடு, குறுப்புநாடு என்று மாறியுள்ளது எனலாம்.

கொங்கு நாட்டுக்கு வடக்கே ஹளபீடுவை தலைநகரமாகக் கொண்ட ஒய்சாளர் வம்சம் (போசாள்) தோன்றியது. கொங்கு நாட்டில் தென் எல்லையில் மதுரை பாண்டியர் புகுந்து ஆட்சி செய்த போதே கொங்கு நாட்டின் வடக்கு பகுதியில் ஒய்சாளர் புகுந்து தொல்லை விளைவித்தனர். ஏறத்தாழ கி.பி. 1189 முதல் கி.பி. 1342 வரை கொங்கு நாடு முழுவதும் ஒய்சாளரின் முழுகட்டுப்பாட்டில் இருந்துள்ளது. ஒய்சாள மன்னன் மூன்றாம் வீரவல்லாளன் கல்வெட்டு பெரும்பாலும் கிடைக்கின்றது. ஈரோடு மாவட்டத்தில் அந்தியூர், எண்ணமங்கலம், விஜயமங்கலம், ஈரோடு, அரச்சலூர், கொடுமணல் போன்ற ஊர்களில் வீரவல்லாளன் காலத்து கல்வெட்டுகள் கிடைக்கின்றன. இந்த கல்வெட்டுகள் பெரும்பாலும் கோவில் திருப்பணிகளை மட்டும் குறிப்பிடுகின்றது.

பவானி வட்டம், எண்ணமங்கலம், புங்கமடுவு, வாவவித் தோட்டத்தில் கிடைத்த கல்வெட்டு வீரவல்லாளன் காலத்து கல்வெட்டாகும் (கி.பி.1299). இக்கல்வெட்டு வடகரை நாட்டு சிலம்பூரில் பந்தீஸ்வரமுடையார் கோவில் பழுது பார்க்கப்பட்டுள்ளது. இத்திருப்பணியை செய்தவர்கள் இவ்வூர் காணியுடைய குறும்பர்கள் சிலர் சாட்சி கையொப்பமிட்டுள்ளனர். அவர்களின் சிலப்பெயர்கள் சிலம்பக்கவுண்டன், இரவிபந்தன், இராசக்கவுண்டன், சொன்னகவுண்டன், பெரியப்பன், குப்பன், காரிராமன், இராமகவுண்டன் முதலியோர் ஆவார்கள். இக்கல்வெட்டை எழுதியவன் நடுவிக்கவுண்டன், பந்தியப்பன், இவ்வூர் இக்கல்வெட்டில் "சிலம்பபூர்" என்று குறிப்பிடுகின்றது. இதற்கேற்ப சிலம்ப கவுண்டன் என்ற பெயரும் இறைவன் பெயர் பந்தீஸ்வரர் என்பதற்கு ஏற்ப பந்தியப்பன் என்ற பெயரும் வருவதும் பொருத்தமாக உள்ளன. இக்கல்வெட்டு மூலம் குறும்பர்கள் பல சமய திருப்பணிகளை செய்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

ஈரோடு மாவட்டத்தில் கிடைக்கப்பெற்ற சில கல்வெட்டுகள்,
கொல்லம்பாளையம் கல்வெட்டு

ஈரோடு மாவட்டம், கொல்லம்பாளையம், கிராமத்தில் ஏரிக்கரையில் கல்வெட்டு உள்ளது. இக்கல்வெட்டு ரவிகோதை காலம் கி.பி.948 காலத்தைச் சார்ந்தவையாகும். இக்கல்வெட்டில் ஈரோட்டுக்கு அருகில் ஒரு ஏரி வெட்டியதாகவும், ஈரோட்டில் வாழும் வேளாளர்கள் உதவியுடன் ஈரோட்டில் இப்பொழுது வாழ்கின்ற வர்களும், ஏற்கனவே குடிபெயர்ந்தவர்களும் இனிமேல் குடிபுகுகின்றவர்களும் பயன்படுத்தும் வகையில் தென்னவன் பேரரையான வஞ்சிவேள் தாழி என்பவன் வெட்டி வைத்தான் என்று செய்தி குறிப்பிடுகின்றது.

கல்வெட்டு

1. ஸ்ரீ கொவிரவி கோதைக்குத் திரு
2. வெழுத்திட்டுச் செல்லா நின்றயாண்டு
3. என்னுற்றெழுவது இவ்வாண்டு
4. இவ்வூர் வாழும் வேளாத் மணியன்
5. இன்னும் வெள்ளாழர் சலிவிலங்
6. வெள்ளாளந் கன்னணிழுரிய
7. .....

.....

8. வழிமேல்
9. முன்பும் பின்பும்
10. .....
11. நிலவெட்டியான
12. தென்னவன் பேரரையவாணிய ல
13. ஞ்சிவேள் தாழிக்கு அவனும் குளம்
14. .....
15. வைத்தான் கழஞ்சியின் வாய்
16. க் கலநெற் பலிசையாக ஆண்டு
17. தோறும் பதின் கல நெல்லு

18. தோண்டு குளம்
19. வைத்தான் சந்திராதித்தவரை
20. தென்னவன் பேரரையனா
21. இளவஞ்சி வேண்டாழி வைத்தான்
22. தாழி ஏரி என்பது இது காத்
23. தானடி என் தலை மேலின இறக்கினா
24. ன் வழி ஏழெச்ச மறுவ்வான்

பருவாச்சிக் கல்வெட்டு

பவானி வட்டம் பருவாச்சியில் ஒரு கல்வெட்டு கிடைத்துள்ளது. இக்கல்வெட்டு ஒய்சாள அரசர் வீரவல்லாளன் காலத்தைச் சார்ந்தவையாகும். இக்கல்வெட்டில் நன்மங்கலம் சிறக்க என்ற மங்கலத் தொடர் கல்வெட்டு ஆரம்பமாகின்றது சிறப்பம்சமாகும்.

கல்வெட்டு

1. ஸ்ரீ நன்மங்கலஞ் (சிறக்க)
2. வைஸ்தி வீர வ(ல்லான)
3. தேவர் திருவரா (ச்சியம்)
4. புண்ணியருளா நின்ற
5. த்து மாசி மாதம்
6. வடகரை நாட்டு பரு
7. நல்லூ ர்.....
8. கள்

சிவகிரி கவுண்டன்பாளையம் நத்தக்காடு நடுகல் கல்வெட்டு

இக்கல்வெட்டு ஈரோடு கவுண்டம்பாளையம், நத்தக்காட்டில் கிடைக்கப் பெற்றது. கிழங்க நாட்டு வேட்டுவர் கவுண்டரில் கிழங்கன் பெரிய கிழங்கனுக்காக வைக்கப்பட்ட நடுகல் என்பதைப் பற்றி இக்கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

கல்வெட்டு

1. . தலை நல்லூ
2. ரில் கிழங்
3. க வேட்டு
4. வரில் கிழ
5. ங்கன்
6. பெரிய கி
7. ழங்கன்

வேம்பத்தி கிராமம் வேட்டுவன் தோட்டக் கல்வெட்டு

இக்கல்வெட்டு பவானி வட்டம் வேம்பத்தி கிராமத்தில் கிடைக்கப் பெற்றுள்ளது. இக்கல்வெட்டில் இராசகேசரி இராசேந்திர சோழதேவன் என்பது முதலாம் குலோத்துங்கச் சோழனை குறிப்பதாக இருக்கலாம். கி.பி.1070. இக்கல்வெட்டு வணிகர்களைப் பற்றிய செய்திகள் அடங்கிய வணிகர் கல்வெட்டாகும்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கோளிரசகேசரி பன்
2. மராசி (ய) ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர்குல திரு
3. வெழுத்திட்டுச் செல்லா நின்ற யாண்டு நா
4. லாவது சையமுரி நாடாழ்வார் நாட்டு வ
5. ட கரை விக்ரம் பலபூரத்து நகரத்து
6. வளஞ்சிாகர்க்கு வீரபட்டடணம் செய்து குடு
7. த்தோம் நாடாழ்வாரை வெட்டின மதிரை
8. இருக்கும் பூராந்த்கதேவன் நான்கொறு ம
9. ண்டல உயக் கொண்டாறும் முசிறியான
10. முமுடி சோழபுரத்தில் தந்திர சோழ முத்துரை
11. யனை வெட்டின பிழைக் கண்டழியும்
12. தொண்டை நாட்டில் நூா ரநல்லூார் இருந்து ஆளு
13. றவனை வெட்டின ஏறியும் விடங்க செட்
14. டியும் பாண்டி நாட்டில் நல்லக நாட்டி
15. காக்கையானதுள் கோதை சோலையான படை

ஈரோடு மாவட்டத்தில் செப்புப் பட்டயங்கள்

செப்புப் பட்டயத்தில் பெரும்பாலும் நிலம் தொடர்பான விவரங்கள், கோயில் நிர்வாகம், வழிபாடு, பாசனமுறை, நீதி வழங்குதல், மடம், மடத்தின் நிர்வாகம் பற்றிய செய்திகள் மன்னர்களால் அளிக்கப்பட்ட கொடைகள் போன்ற செய்திகள் அடங்கியிருக்கும். ஈரோடு மாவட்டத்தில் ஈரோடு, கொணப்பலூர், சென்னிமலை, பெருந்துறை, பாசூர், ஈங்கூர், காடையூர், கோசனம், திருவாச்சி,காக்கநாயக்கன் பாளையம்,பேரோடு, கூனம்பட்டி ஐமின் போன்ற ஊர்களில் கிடைக்கப்பெற்றுள்ளது.

1. குறும்பு நாட்டுப் பட்டயம்

இந்தப் பட்டயத்தின் ஓலைப் பிரதியும், செப்பேட்டு நகலும் ஈரோடு கலைமகள் கல்வி நிலைய அருங்காட்சியகத்தில் உள்ளது. இப்பட்டயத்தில் கொங்கு வேளாளக் கவுண்டர்களின் கோயில்களின் முதல் உரிமையைப் பற்றி குறிப்பிடுகின்றன.

2. கொங்கு காணியாளர் பட்டயம்

கொடுமணல், தம்பிராட்டி பாளையம் நா. நாச்சிமுத்து புலவர் வீட்டில் பெற்ற "கொங்கு காணியாளபட்டயம்" என்றும் ஓலைச்சுவடி ஆவணமாகும். இந்த ஓலைச்சுவடி ஆவணம் தற்பொழுது ஈரோடு கலைமகள் கல்வி நிலைய அருங்காட்சியகத்தில் உள்ளது. கொங்கு வேளார் குலபெருமக்கள் சோழ நாட்டிலிருந்து குடியேறி கொங்கு நாட்டில் நாடு, காணி, ஊர், இவைகளை உருவாக்கி கொண்டனர் என்பதை இப்பட்டயம் கூறுகின்றது, குலகுருக்கள், மக்கள் பற்றிய செய்தியும் உள்ளது.

3. கொடுமணல் பட்டயம்

ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டம் புதுமைப்புலவர் பரம்பரையினரிடமிருந்து இந்த ஓலைச்சுவடி ஆவணம் பெறப்பட்டது. இந்த ஓலைச்சுவடி தற்பொழுது தமிழ்ப் பல்கலைக்கழகம் ஓலைச்சுவடிகள் துறையில் உள்ளது. இந்த ஆவணத்தில் "குறுப்பு" நாட்டில் உள்ள 32 ஊர் காணியாளர்களுக்கும், அவ்வூரைச் சார்ந்த உட் கிராமங்களில் உள்ள அனைத்து கொங்கு வேளாளர்க்கும்

காந்தமலை முருகன் சன்னதியில் கூடி தங்களுக்கு புலவர்களை நியமனம் செய்து கொண்டதை பட்டயம் விரிவாக கூறுகின்றது.

4. கண்ணகுல ஆவணம்

இந்த பட்டயம் கண்ணிவாடி கே.எஸ்.சின்னசாமி கவுண்டரிடம் கண்ணகுலப்பட்டயம் என்ற ஓலைச்சுவடி உள்ளது. இந்த ஓலைச்சுவடியில் கண்ணகுலத்தார்கள் கண்ணிவாடியிலிருந்து கீழ்க்கரை பூந்துறை வரை குடியேறியதைப் பற்றி இப்பட்டயம் தெரிவிக்கின்றது.

5. பேரோடு பட்டயம்

இந்த செப்பேட்டில் நகல் பேரோடு செல்லப்பம்பாளையம் இராமசாமியிடம் உள்ளது. ஒரு வழக்கு தொடர்பாக செப்பேடு நீதிமன்றத்தில் உள்ளது. பேரோடு செப்பேடு சரிச்சிகுமாரர் கோயிலுக்குரிய காணியாளர்கள், வேட்டுவர், பண்ணை, பெருங்குடியான குலத்தினர். இவர்களின் மூவரில் வேட்டுவன் குலத்தார் முதன்மை காணியாளர்கள் என்ற செய்தியை குறிக்கின்றது.

ஈரோடு மாவட்டத்து ஓலைச்சுவடிகள்

ஈரோடு மாவட்டத்தில் கொடுமுடி, பவானி, சிவன்மலை, பூந்துறை, சென்னிமலை போன்ற ஊர்களில் கிடைக்கப் பெற்ற ஓலைச்சுவடிகளைக் கொண்டு இவ்வூர்களின் தலபுராணங்கள் எழுதப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தில் உ.வே. சாமிநாத அய்யர் அவர்கள் ஓலைச்சுவடிகளைச் சேகரித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, தஞ்சை தமிழ் பல்கலைக்கழகம், ஈரோடு கலைமகள் கல்வி நிறுவன அருங்காட்சியகங்களில் ஓலைச்சுவடிகள் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன.

ஈரோடு மாவட்டத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க ஊர்கள்

அறச்சலூர் (ஈரோடு வட்டம்)

இவ்வூர் மலையில் ஆண்டிப் பாறையில் குகைத்தளம், மற்றும் இசைக் கல்வெட்டுகள் உள்ளது. மேலும் இசைக் கல்வெட்டுகள் கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

அனுமன் பள்ளி

இவ்வூர் கொங்குப் பாண்டியர் காலத்து அனுமீசுவரன் கோயில் மிகவும் சிறப்பு வாய்ந்த கோயிலாகும். மேலும் இக்கோயில் சண்டிகேஸ்வரர் பிரகார கோயிலும் உள்ளது. கொங்கு பாண்டியர் சுந்தரபாண்டியர் காலத்து கல்வெட்டும், ஏராளமான கி.பி.12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டுகளும் காணப்படுகின்றது. மேலும் சின்னம்மன், பெரியம்மன் கோயில்களும் பழமையான கல்வெட்டுகளும் உள்ளது.

ஈரோடு

ஈரோடு நகரத்தில் திருத்தொண்டீசுவரர் கோயில், அரங்கநாதர் கோயில், பெரிய மாரியம்மன் கோயில், கொங்காளம்மன் கோயில் மிகவும் தொன்மை வாய்ந்தவையாகும். திருத்தொண்டீசுவரர் கோயிலில், கொங்கு பாண்டியர், கொங்கு சோழர், மதுரை நாயக்கர், போசாளர், சேரர் காலத்து கல்வெட்டுகள் காணப்படுகின்றது.

கொடுமுடி

இவ்வூர் சங்க இலக்கியத்துடன் தொடர்புடைய ஊராகும். இவ்வூர் காவிரி ஆற்றங்கரையில் மகுடேஸ்வரர் கோயில் உள்ளது. இக்கோயில் மிகவும் தொன்மையானதாகவும், வரலாற்று சிறப்புடைய ஊராகும். இக்கோயில், சேரர், கொங்கு சோழர், கொங்கு பாண்டியர், போசாளர் விசயநகர நாயக்கர், மதுரை நாயக்கர் காலத்து கல்வெட்டுகள் மிகவும் பிரசித்தி பெற்றவையாகும்.

கொளநால்லி

இவ்வூரில் வரலாற்றுக் கால பெண் குழலியம்மன் கோயில், கோட்டை மாரியம்மன் கோயில், பம்பளங்காசர் கோயில்கள் உள்ளது. இந்த மூன்று கோயில்களிலும் பல செய்திகள் அடங்கிய ஏராளமான வெவ்வேறு காலத்தைச் சார்ந்த கல்வெட்டுகள் காணப்படுகின்றது.

சிவகிரி

இவ்வூரில் கொங்குச் சோழர், மற்றும் பாண்டியர் காலத்து கோயில்களான நாகேஸ்வரர் கோயில், வரதராசப் பெருமாள் கோயில், பொன்காளியம்மன் கோயில், சுப்பிரமணியர் கோயில்கள்

வரலாற்று சின்னங்களாக உள்ளது. இக்கோயில்களில் கல்வெட்டுகள் வெவ்வேறு காலத்தை சார்ந்த ஆவணங்களாக உள்ளது. இவ்வூர் நத்தம் காட்டு நடுகல் கல்வெட்டு, இவ்வூர் தேங்கப்ப கவுண்டர் காட்டில் பாறையில் உள்ள கல்வெட்டு மைசூர் உடையார் ஆட்சி காலத்து செய்தியை விவரிக்கின்றது.

முருங்கை தொழுவு

இவ்வூர் கொங்கு பாண்டியர் காலத்து பிரம்மலிங்கேசுவரர் கோயில் வரலாற்று சிறப்புடையதாகும். இக்கோயில் கொங்கு பாண்டியர்கள் காலத்து கல்வெட்டுகள் மிக அதிக அளவில் உள்ளது.

பெரிய சேமூர்

இவ்வூரில் இரண்டு நடுகற்கள் கிடைக்கப்பெற்றுள்ளது. கி.பி.13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

கத்தாங்கண்ணி

இவ்வூர் பெருந்துறை வட்டத்தில் மிகவும் பழமை வாய்ந்த ஊராகும். சங்க இலக்கியங்களில் இவ்வூரைப் பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. இவ்வூரில் நின்மாணிசுவரர் கோயில், சொக்க பெருமாள் கோயில், அம்மன் கோயில் மிகவும் பழமையான கோயில்களாகும். இக்கோயில்களில் கொங்குச் சோழர், கொங்கு பாண்டியர் காலத்து கல்வெட்டுகள் நிறைந்து காணப்படுகின்றது.

ஈங்கூர்

இவ்வூர் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படுகின்றது. மற்றும் இவ்வூரில் சமண கோயிலும், சமண மடமும் உள்ளது. இவ்வூரில் சிவன் கோயில் மிகவும் சிறப்பான வரலாற்றுக் கால கோயிலாகும்.

திங்களூர்

இவ்வூர் சமண மதத்துடன் தொடர்புடைய ஊராகும். இவ்வூரின் சமண கோயில், சிவன் கோயில் வரலாற்றுச் சின்னங்களாக உள்ளது. மேலும் சமணக் கோயில் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம் முன் கருவறையில் 9-ஆம் தீர்த்தங்கரர் புஷ்பதந்தர் மற்றும் பிரம்மயட்சன் சிற்பங்களும் உள்ளது.

சீனாப்புரம்

இவ்வூர் பெருந்துறையிலிருந்து திங்களூர் செல்லும் சாலையில் உள்ளது. இவ்வூர் மமுட்டி தோப்பு என்ற இடத்தில் சமண கோயில் மற்றும், தீர்த்தங்கரர் ஆதி நாதர் கோயிலும் உள்ளது.

நசியனூர்

இவ்வூர் பெருந்தரையிலிருந்து சித்தோடு செல்லும் சாலையில் உள்ளது. இவ்வூரில் கொங்கு சோழர் காலத்து சிவன் கோயில் உள்ளது. இக்கோயிலில், கொங்கு சோழர், கொங்கு பாண்டியர் காலத்து கல்வெட்டுகள் மிகுதியாக காணப்படுகின்றது.

அந்தியூர்

இவ்வூரில் சிவன் கோயில், அம்மன் கோயில் வரலாற்றுக் காலக் கோயில்களாக உள்ளது. சிவன் கோயில் கல்வெட்டில் ஐந்து பிரிவு ஆசாரி மார்களுக்கு சில உரிமைகளையும், சலுகைகளையும் அளித்ததைப் பற்றிக் கல்வெட்டு செய்தி உள்ளது மற்றும் இவ்வூர் விநாயகர் கோயில் கல்வெட்டில் இக்கோயிலுக்கு அளித்த கொடையைப் பற்றி குறிப்பிடுகின்றது.

உலகடம்

இவ்வூர் மிகவும் பழமையான ஊராகும், இவ்வூரில் உலகேசுவரர் கோயில், மாரியம்மன் கோயில், வரலாற்று சின்னங்களாக உள்ளது. இவ்வூரில் நிலைக்கல்லில் கி.பி.12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கொங்கு சோழர் காலக் கல்வெட்டு உள்ளது.

பட்லூர்

இவ்வூரில் வரலாற்றுச் சின்னமாக வாகீஸ்வரர் கோயில் உள்ளது. இக்கோயில்களில் கொங்குச் சோழர், கொங்கு பாண்டியர் காலத்துக் கல்வெட்டுகள் பல்வேறு செய்திகளை தெரிவிக்கின்றது.

பவானி

இவ்வூர் காவிரிக்கரையும், பவானி ஆறும் சங்கமிக்கும் இடத்தில் அமைந்துள்ள வரலாற்று சிறப்புடைய புனித தலமாகும். இக்கோயில் கெங்குச் சோழர், கொங்கு பாண்டியர், விசயநகர அரசு,

கட்டிமுதலி, மைசூர் உடையார் காலத்து கல்வெட்டுகள், சிற்ப வேலைப்பாடுகள், கோயில் கட்டிடக்கலையும் மிகவும் சிறந்த நிலையில் உள்ளது.

தாமரைகரை

இவ்வூர் மலைவாழ் மக்கள் வாழ்கின்ற மலைக்கிராமம் ஆகும். இவ்வூரில் கற்கால சின்னங்களும், பெருங்கற்கால நிலைக்கல்லும் காணப்படுகின்றது.

ஆப்பக்கூடல்

இவ்வூர் வரலாற்றுடன் தொடர்புடைய ஊராகும்.

பவானி வட்டம்

இவ்வட்டத்தில் பெருங்கற்கால சின்னங்கள் மிகுதியாக காணப்படுகின்றது. இவ்வட்டத்தில் புலிக்குத்திக்கல் ஒன்று கிடைக்கப்பெற்றுள்ளது.

சேகாரஹட்டி

இவ்வூர் பெருங்கற்காலத்துடன் தொடர்புடைய ஊராகும், பெருங்கற்கால சின்னங்கள் ஏராளமாக கிடைக்கின்றன.

எண்ணமங்கலம்

இவ்வூரில் புங்கமடுவு வாவித் தோட்டத்தில் வீரவல்லாளன் தேவர் காலத்து கல்வெட்டுகள் கிடைக்கப் பெற்றுள்ளது. இவற்றின் காலம் கி.பி.13-ஆம் நூற்றாண்டு.

பருவாச்சி

இவ்வூர் வரலாற்றுடன் தொடர்புடைய ஊராகும். இவ்வூரில் சூலக்கல் ஒன்றில் கல்வெட்டு கிடைத்துள்ளது. கி.பி.13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஸ்ரீவீர வல்லாளன் காலத்தைச் சார்ந்தவையாகும்.

வேம்பத்தி

இவ்வூர் பவானி வட்டத்தில் உள்ள சிறிய கிராமம் ஆகும். இவ்வூரில் வேட்டுவன் தோட்டத்தில் கொங்குச் சோழர் கோவீர

ராச கேசரி இராசேந்திர சோழன் காலத்து கல்வெட்டு ஒன்று கிடைத்துள்ளது. இக்கல்வெட்டு கி.பி.12-ம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

பெருந்துறை வட்டம்

கொடுமணல்

இவ்வூர் பெருந்துறை வட்டத்தில் உள்ள ஒரு சிறிய கிராமம் ஆகும். இவ்வூர் சங்க இலக்கியங்களில் கொடுமணல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வூரில் தமிழ்நாடு அரசு, தொல்லியல் துறையினர், தஞ்சை தமிழ் பல்கலைக்கழகம், கல்வெட்டியல் துறை, பல்வேறு காலங்களில் அகழாய்வு பணிகளை செய்துள்ளனர். கொடுமணல் அகழாய்வில் சான்றுகள் மற்றும், தொழில்கள் தொடர்பான சான்றுகள், அகழாய்விலிருந்து கிடைக்கப் பெற்றுள்ளது.

சத்தியமங்கலம் வட்டம்

சத்தியமங்கலம்

இவ்வூர் தொன்மையான வரலாற்று சிறப்புடைய ஊராகும். இவ்வூரில் வரலாற்றுச் சின்னமாக தவளகிரி ஆண்டவர் கோயில் உள்ளது. சிவன் கோயில்கள் உள்ளது. இக்கோயில்களில் வரலாற்றுக் கால கல்வெட்டுகள் ஏராளமாக உள்ளது.

அந்தியூர்

இவ்வூர் சத்தியமங்கலம் வட்டத்தில் உள்ள ஒரு சிறிய கிராமம் ஆகும். இவ்வூரில் பெருங்கற்காலச் சின்னங்கள் மிகுதியாக காணப்படுகின்றது.

புளியம்பட்டி

இவ்வூர் கோவையிலிருந்து சத்தயமங்கலம் செல்லும் வழியில் உள்ள தொன்மையான ஊராகும். இவ்வூரில் அம்மன் கோயில் வரலாற்று சின்னமாக உள்ளது. பெருங்கற்கால சின்னங்களும் காணப்படுகின்றது.

ஹடனஹள்ளி

இவ்வூர் மலைவாழ் கிராமம் ஆகும். இவ்வூர் மைசூர் செல்லும் மலைப்பாதையில் உள்ளது. இவ்வூரில் ஏரளமான பெருங்கற்காலச் சின்னங்கள் காணப்படுகின்றது.

சின்னக்குள்ளம் பாளையம்

இவ்வூர் சத்தியமங்கலம் வட்டத்தில் உள்ள ஒரு சிறிய கிராமம் ஆகும். இவ்வூரில் பெரிய அளவில் பெருங்கற்காலச் சின்னங்கள் காணப்படுகின்றது.

நல்லூர்

இவ்வூர் கோவையிலிருந்து சத்தியமங்கலம் செல்லும் சாலையில் உள்ளது. இவ்வூரில் பெருங்கற்காலச் சின்னங்கள் காணப்படுகின்றது.

கோபிசெட்டிபாளையம் வட்டம்

அத்தாணி

இவ்வூரில் வரலாற்று சின்னங்களாக, செல்லாண்டி அம்மன் கோயில், அம்மன் கோயில்கள் உள்ளது. இவ்வூர் விளையாட்டு, திடலில் உள்ள குத்துக்கோயில் நான்கு பக்கமும் கல்வெட்டு காணப்படுகின்றது. இக்கல்வெட்டுச் செய்தியானது "வடகரை நாட்டவர்" கூகலூர் பெருமாள் கோயிலுக்கு நிலம் நன்கொடை அளித்ததைப் பற்றிச் செய்திகள் உள்ளது.

நம்பியூர்

இவ்வூர் கோபிசெட்டிபாளையத்திலிருந்து சத்தியமங்கலம் செல்லும் வழியில் உள்ளது. இவ்வூரில் அம்மன் கோயில், சிவன் கோயில் உள்ளது. இவ்வூரில் பெருங்கற்காலச் சின்னங்கள் காணப்படுகின்றது.

கரியதோட்டம் பாளையம்

இவ்வூர் கோவையிலிருந்து கோபி செட்டிபாளையம் வட்டத்தில் உள்ளது. இவ்வூரில் வரலாற்று சின்னமாக அம்மன் கோயிலும், பெருங்கற்கால எச்சங்களும் காணப்படுகின்றது.

புங்கம்பள்ளி

இவ்வூர் கோவையிலிருந்து கோபிசெட்டிபாளையம் செல்லும் வழியில் உள்ளது. இவ்வூரில் வரலாற்றுக் காலத்தில் சமணப் பள்ளிகள் இருந்துள்ளது. சமணர்களின் இருப்பிடமாக இருந்துள்ளது. இவ்வூரில் பெருங்கற்காலச் சின்னங்களும் காணப்படுகின்றது.

மலையம்பாளையம்

இவ்வூரில் வரலாற்று சின்னமாக முருகன் கோயில், அம்மன் கோயில், விநாயகர் கோயில் வரலாற்றுச் சின்னமாக உள்ளது. இவ்வூரில் பெருங்கற்காலச் சின்னங்கள் ஏராளமாக உள்ளது.

இக்கரை நெகமம்

இவ்வூர் கோபிசெட்டிபாளையம் வட்டத்தில் உள்ள ஒரு சிறிய கிராமம் ஆகும். இவ்வூர் "தாவளம்" அமைந்த ஊராகும் பெருங்கற்காலச் சின்னங்களும் காணப்படுகின்றது.

ஈரோடு மாவட்டத்தில் பழமையான கோயில்கள்

1. விசயமங்கலம்

விசயபுரி அம்மன் கோயில், சந்திரபிரபா தீர்த்தங்கரர் கோயில். இக்கோயில்கள் கி.பி.12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

2. ஈரோடு

திருதொண்டீஸ்வரர் கோயில், கபாலீஸ்வரர் கோயில், கஸ்தூரிரங்கப் பெருமாள் கோயில், இக்கோயில்களின் காலம் கி.பி.12-ஆம் நூற்றாண்டாகும்.

3. காளிமங்கலம்

குலவிளக்கம்மன் கோயில் உள்ளது.

4. குன்னத்தூர் கோவில்

குன்றபுரீஸ்வரர் கோயில், இக்கோவிலின் கட்டிடக்கலை போசளர்களின் கி.பி. 14-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கட்டிடக்கலை அமைப்பை சார்ந்ததாகும்.

5. கூவலூர்

இவ்வூரில் செல்லாண்டியம்மன் கோயில் உள்ளது.

6. பவானி

இவ்வூரில் சங்கமேஸ்வரர் கோயில் மிகவும் வரலாற்றுக்கால கோயிலாக உள்ளது.

7. சிவன்மலை

முருகன் கோயில் இக்கோயில் கட்டிட அமைப்பை நோக்கும் பொழுது கி.பி.14-ஆம் நூற்றாண்டு பிற்கால பாண்டியர் காலத்தை சார்ந்தவையாகும்.

8. தலையநல்லூர்

பொன்காளியம்மன் கோயில் உள்ளது.

9. கொடுமுடி

ஸ்ரீமகுடலிங்கேஸ்வரர் கோயில் உள்ளது.

10. திங்களூர்

சமணர்கோயில், பெருமாள் கோயில், சிவன்கோயில் உள்ளது.

11. பாரியூர்

அம்மன்கோயில், சிவன்கோயில் உள்ளது.

12. பூந்துறை

பட்டிலிங்கம் கோயில், புட்பவள நாதர் கோயில் உள்ளது.

13. பெரிய சேமூர்

சேமலிங்கேஸ்வரர் கோயில், இக்கோயில்கள் வரலாற்று காளிக் கோயில்களாகும்.

ஈரோடு மாவட்டத்தில் காசுகள் (*Coins*)

ஈரோடு மாவட்டம், ஆலம்பாளையம், ஈரோடு வட்டம் தயிர்பாளையம், கொடுமுடி, பெருந்துறை வட்டம், கொடுமணல் போன்ற ஊர்களில் நமக்கு ஏராளமான காசுகள் கிடைத்துள்ளன.

1. இராசராசன் கோரீக்காசு, 2. சுந்தரபாண்டியன் காசு, 3. ஈழமனிதனின் உருவமும் எழுத்தும் பொறிப்பும் உள்ள காசு, 4. காளை சின்னம் பொறிக்கப்பட்ட விசயநகர மன்னர் செப்புக்காசுகள், 5. வேங்கட்ட பெயர் பொறிக்கப்பட்ட விசயநகர மன்னர் காசுகள், 6. மைசூர் உடையார்-யானை தட்டு-யானை காசுகள், 7. ஹைதர்-திப்புகாசுகள், 8. வீரராயன் பணம், 9. கிழக்கிந்திய கம்பெனி காசுகள், 10. ரோமானிய முத்திரைக் காசுகள் ஆகியவைகளாகும்

ஈரோடு மாவட்டத்தில் கிடைக்கப் பெற்ற நாணயங்கள்

ஈரோடு வணிகத்தில் சிறந்து விளங்கியதால் இம்மாவட்டத்தில் ஏராளமான பழங்காசு கிடைக்கப்பெற்றது. இம்மாவட்ட கல்வெட்டுகளில் ஆணை அச்சு, பலசோலகை, இடைச்சாலகை, புதுச்சாலகை, ஸ்ரீஇயக்கி பணம், கழஞ்சு, வராகன் எனக் காசுகள் குறிப்பிடுகின்றன. இந்த காசுகள் அல்லாமல் சோழர் காசு, சேரர் காசு, பாண்டியர் காசு, ரோமானியர்கள் காசுகளும் கிடைக்கப்பெற்றுள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் தொல்லியல் சான்றுகள் உள்ள ஊர்கள்

விசயமங்கலம்

இவ்வூரில் கொங்கு சோழர் சிவன் கோயில், விசயபுரி அம்மன் கோயில், சமணர் கோயில் மற்றும் சந்திரபிரபதீர்த்தங்கரர் கோயில் வரலாற்று பெருமை வாய்ந்த கோயில்களாகும்.

வெள்ளோடு

இவ்வூரில் ஆதிநாதர் சமணக்கோயில், மற்றும் ஈரோடு மாவட்ட காலிங்கராயன் நீர்ப்பாசன வாய்க்காலை வெட்டிய காலிங்கராயன் சிலை உள்ளது.

சென்னிமலை

இவ்வூர் வரலாற்றுக் கால பெருவழியில் உள்ள ஊராகும். இவ்வூரில் அருணகிரிநாரதரால் பாடப்பெற்ற முருகன் கோயில் மலை மேல் உள்ளது. இம்மலை மேல் "பிண்ணாக்கு சித்தர்" குகை உள்ளது.

பாரியூர்

இவ்வூரில் வரலாற்றுக் கால அமர பரணீசுவரர் கோயில், கொண்டத்து காளியம்மன் கோயில் மிகவும் புகழ் பெற்ற கோயில்களாகும்.

வள்ளியறச்சல்

இவ்வூரில் மிகவும் தொன்மை வாய்ந்த, நாட்டராயன் கோயில் உள்ளது. இக்கோயில் சேர மன்னர்களால் உருவாக்கப்பட்டது என்று செவி வழி செய்திகள் கூறுகின்றது.

அப்பச்சி மடம்

இவ்வூரில் சமண தீர்த்தங்கரர் சமண கோயிலும் தீர்த்தங்கரர் கற்சிற்பங்களும் உள்ளது.

சாவடிப்பாளையம்

இவ்வூரில் வரலாற்று தொன்மை வாய்ந்த காவிரி கரையின் நடுவில் நாட்டாற்றீசுவரர் கோயில் உள்ளது.

பவானி

இவ்வூரில் காவேரி, பவானி, அமுதநதி என்னும் மூன்று நதிகளும் கலக்கும் இடமாகும். இந்த இடத்தை தென்னகத்தின் திரிவேணி சங்கமம் என்று அழைக்கின்றனர். இவ்வூர் செப்புப் பட்டயங்களிலும், கல்வெட்டுகளிலும், ஓலைச்சுவடிகளிலும் குறிப்பிடப்படுகின்ற சிறப்பு வாய்ந்த ஊராகும்.

கொடுமுடி

இவ்வூர் மாணிக்கவாசகர் பாடிய திருத்தலம், சிறப்பு வாய்ந்த நடராசரின் சதுர நடன செப்புத்திருமேணி உள்ளது.

ஆப்பக்கூவுடல

இவ்வூரில் தொன்மை வாய்ந்த மதகுகளுடன் பெரிய ஏரியும், நடுகல் சிற்பங்களும் உள்ளது.

ஓடாநிலை

இவ்வூரில் நடுகல்லில் போராட்ட தளபதி தீரன் சின்னமலை சிற்றூரும் மற்றும் கோட்டை மேடுகள் உள்ளது.

பழமங்கலம்

இவ்வூரில் நடுகல்லில் பாடல்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள் உள்ளது.

மேலப்பாளையம்

இவ்வூரில் வரலாற்றுக் கால விநாயகர் கோயில் உள்ளது. இக்கிராமத்தில் தீரன்சின்னமலை பிறந்துள்ளார்.

தாளவாடி

இவ்வூர் மைசூர் செல்லும் மலைப் பாதை, மற்றும் பெருவழி செல்லும் மலைக் கிராமம் ஆகும். இவ்வூரில் மைசூர் ஹைதர் அலி, மற்றும் திப்புசுல்தான் காலத்து பழமையான பள்ளிவாசல் உள்ளது.

அறச்சலூர்

இவ்வூர் மலையில் கி.பி. முதலாம் நூற்றாண்டைச் சார்ந்த இசைக் கல்வெட்டு உள்ளது.

கொடுமணல்

இவ்வூர் சங்க இலக்கியங்களில் குறிப்பிடுகின்ற ஊராகும். இவ்வூரில் தொல்லியல் சான்றுகள் கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் பல்வேறு வகையான தொல்லியல் சான்றுகள் அகழாய்வில் கிடைக்கப்பெற்றுள்ளது.

பவளமலை

இவ்வூர் கோபிசெட்டிபாளையம் அருகே உள்ள ஒரு மலையாகும். இம்மலையிலும் வரலாற்று பெருமை வாய்ந்த முருகன் கோயில் உள்ளது.

திண்டல் மலை

இவ்வூர் ஈரோடு அருகில் உள்ள ஓர் குன்று ஆகும். இந்த குன்றில் முருகன் கோயில் உள்ளது.

பண்ணாரியம்மன் கோயில்

சத்தியமங்கலம் வட்டத்தில் மைசூர் செல்லும் பாதையில் அமைந்துள்ளது. இந்த பண்ணாரியம்மன் கோயில் மிகவும் தொன்மை வாய்ந்த ஊராகும்.

பவானிசாகர்

இவ்வூரில் தொன்மை வாய்ந்த பவானிசாகர் ஆணை உள்ளது.

காலிங்கராயன் அணை

ஈரோடு மாவட்டத்தில் பவானி ஆறும், காவிரியாறும் கூடும் இடத்தில் கி.பி.1282-இல் காலிங்கராயன் என்பரால் கட்டப்பட்ட அணையாகும்.

கொடிவேரி அணை

ஈரோட்டை ஆட்சிபுரிந்த உம்மத்தூர் தலைவன் வழியில் வந்த "நஞ்சராயன்" என்பவரால் கட்டி முடிக்கப்பட்ட அணையாகும்.

சீனாபுரம்

இவ்வூர் சமணர்கள் வாழ்ந்த சமணத் திருத்தலமாகும். இவ்வூரில் மம்முட்டித் தோப்பில் ஆதிநாதர் சமணக் கோயிலும், மற்றும் இந்து மதக் கோயிலாக விசயகிரி வேலாயுதசுவாமி கோயிலும் உள்ளது.

சர்க்கார் பெரிய பாளையம்

இவ்வூர் சைவ மதத்தினரால் போற்றப்பட்ட சைவ வைப்புத் தலமாகும். இவ்வூர் குரக்குத்தளி சிவன் கோயில் கல்வெட்டும் சிற்பக்கலையும் நிறைந்த கோயிலாகும்.

கதித்தமலை

இவ்வூர் ஊத்துக்குளிக்கு அருகில் உள்ள குன்றாகும். இக்குன்றில் முருகன் கோயில் உள்ளது. இந்த முருகன் கோயில் அருணகிரிநாதரால் பாடப்பெற்ற கோயிலாகும்.

ஆதியூர்

இவ்வூர் பெருந்துறை வட்டத்தில் பெருமாநல்லூர், குண்ணத்தூர் செல்லும் சாலையில் உள்ளது. இவ்வூரில் ஆதிச்சுரவர சுவாமி கோயில் உள்ளது. இக்கோயில் மற்றும் தனிக்கல்லில் கொங்குச் சோழர், கொங்கு பாண்டியர் காலத்து கல்வெட்டு ஏராளமாக உள்ளது.

காளமங்கலம்

இவ்வூர் வரலாற்று சிறப்பு மிக்க ஊராகும். இவ்வூரின் அமைவிடம் ஈரோட்டிலிருந்து கரூர் செல்லும் சாலையில் கணபதி பாளையம் என்ற ஊரின் கிழக்கு பகுதியில் உள்ளது. இவ்வூரில் வரலாற்றுக் கால "குளவிளக்கம்மன்" என்ற கோயில் உள்ளது.

குன்னத்தூர்

இவ்வூர் கோபி செங்கம்பள்ளி செல்லும் சாலையில் கோபி செட்டிபாளையம் செல்லும் சாலையில் உள்ளது. கல்வெட்டுகளில் இவ்வூரை "குன்றத்தூர்" என்றே குறிப்பிடப்படுகின்றது. இவ்வூரில் குன்றபுரிசுவரர் கோயில், லட்சுமி நாராயணப் பெருமாள் கோயில் இரண்டு வரலாற்றுக்கால கோயில்களும், இந்த இரண்டு கோயில்களில் ஏராளமான கல்வெட்டுகள் காணப்படுகின்றது.

கூவலூர்

இவ்வூர் கோபிசெட்டிப்பாளையம் வட்டத்தில் உள்ள சிற்றூர். இவ்வூர் சிவன் கோயிலில் கொங்கு பாண்டியர் காலத்து கல்வெட்டுகள் காணப்படுகின்றது. இந்த சிவன் கோயில் கல்வெட்டுகளில் "நட்டுறாண்ட நாயகர்" என்று அழைக்கப் பெறுகின்றது. மேலும் "கூவல்" என்ற சொல்லிற்கு கிணறு என்று பொருள் கூறப்படுகின்றது.

தலையநல்லூர்

இந்த சிற்றூர் ஈரோடு வட்டத்தில் உள்ளது. தலையநல்லூர் கிராமத்தின் பெயர், ஆதிநல்லூர், அரசநல்லூர் பின்பு சிங்காநல்லூர் என்றும் அழைக்கப் பெற்றது. இவ்வூரில் பொன்காளியம்மன் கோயில் வரலாற்று சிறப்பு வாய்ந்த கோயிலாகும்.

திங்களூர்

இவ்வூர், சமணத்திருத்தலமாகும், மற்றும் இந்துமதக் கோயில்களான சந்திரமௌளீசுரர் கோயில் அழகப் பெருமாள் கோயில், சமணர் புட்பநாதர் கோயிலும், மிகுதியான கல்வெட்டுகளும் உள்ள தொன்மையான ஊராகும்.

ஈரோடு மாவட்ட கிராமங்களின் பழைய பெயரும், நடைமுறையில் உள்ள பெயரும்

1.	கோபி செட்டிபாளையம்	- கோபி
2.	சத்தியமங்கலம்	- சக்தி
3.	காரையூர்	- காரை
4.	வீராட்சி மங்கலம்	- வீரை
5.	தலையநல்லூர்	- தலைசை
6.	முகுந்தனூர்	- பெரிய பாளையம்
7.	தலையநல்லூர்	- சிவகிரி
8.	சிலம்பூர்	- எண்ணமங்கலம்
9.	கொடுமணம்	- கொடுமணல்
10.	குள்நுறை	- பூந்துறை
11.	கூவனூர்	- கூகலூர்
12.	உலகவிடங்கம்	- ஓலகடம்
13.	ஈர்ந்தூர்	- ஈங்கூர்

ஈரோடு மாவட்டத்தில் பழமையான கோட்டைகள்

கோபிசெட்டிபாளையம் வட்டம்

1. சத்தியமங்கல கோட்டை
2. தலமங்கல கோட்டை
3. மான் கோட்டை

பவானி வட்டம்

1. அந்தியூர் கோட்டைமேடு மட்டும் உள்ளது.

ஈரோடு வட்டம்

ஈரோடு மாவட்டத்தில் ஈரோட்டிலிருந்து சுமார் 10 கி.மீ. தென்மேற்கு பகுதியில் "கனகபுரம்" என்ற சிற்றூரில் அழகான குகைத்தளங்கள் உள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் கல்வெட்டு உள்ள ஊர்கள்

ஈரோடு வட்டம்

1. ஈரோடு
2. அனுமன்பள்ளி
3. அறச்சலூர்
4. கொடுமுடி
5. கொளநல்லி
6. சிவகிரி
7. முருங்கை தொழுவு

பெருந்துறை வட்டம்

1 பெருந்துறை
2. கத்தாங்கன்னி
3. நிசியணர்
4. கொடுமணல்
5. விசயமங்கம்
6. பாசூர்
7. சீனாப்புரம்
8. திங்களூர்

கோபிசெட்டிபாளையம் வட்டம்

1. அத்தாணி
2. சத்தியமங்கலம்
3. கணக்கம்பாளையம்

சத்தயமங்கலம் வட்டம்

1. புங்கம்பள்ளி
2. சத்தியமங்கலம்
3. நல்லூர்

பவானி வட்டம்

1. அந்தியூர்
2. உலகடம்
3. பட்லூர்
4. பவானி
5. ஜம்பை

ஈரோடு மாவட்டத்தில் வரலாற்று சிறப்புடைய கோயில்கள்

சிவாலயங்கள்

1. ஈரோடு
2. அனுமன் பள்ளி
3. கொடுமுடி
4. முருங்கைதொழுவு
5. பவானி
6. சத்தியமங்கலம்
7. அந்தியூர்
8. பெருந்துறை

வைனவதலங்கள்

1. ஈரோடு
2. சித்தாம்பூர்
3. ஊஞ்சலூர்

சமணம் மதம்

1. விசயமங்கலம்
2. திங்களூர்
3. சீனாப்புரம்

ஈரோடு மாவட்டத்தில் சமணத் திருத்தலங்கள் (*Jain centre*)

ஈரோடு மாவட்டத்தில் சமணபுனிதத் தலங்கள் பல உள்ளது. சமண சிற்பங்களும் பல ஊர்களில் கிடைக்கின்றன. சமணர்கள் பற்றிய கல்வெட்டு செய்திகளும் மிகுதியாக கிடைக்கின்றன. சங்க இலக்கியத்தில் கொடுமணம் என்றும், இன்றைய கொடுமணலில் கடந்த அகழாய்வில் கிடைத்த பாளை ஓடுகளில் "விஸாகி" என்று பழந்தமிழில் எழுதப்பட்டுள்ளது. எனவே "விஸாகி" என்ற சமண முனிவரின் பெயர் ஈரோடு மாவட்டத்தில் பரவி உள்ளது.

இராட்டிரகூடர் அரசன் இரண்டாம் கோவிந்தராயன் "அரிட்டானம்" என்ற சமண முனிவருக்கு பூமி தானம் அளித்தார் என்று கல்வெட்டு செய்திகள் கூறுகின்றன. இந்த "அரிட்டான சமண முனிவர் வாழ்ந்த மலை அரசன்ன மலை" என்ற பெயரில் விசயமங்கலம் அருகில் உள்ளது.

கங்க மன்னர் துர்விநீதன் காலத்தில் பெரிய பாளையம் "முகுந்தாபுரிப்பட்டினம்" என்றும் சர்க்கார் பெரிய பாளையம் என்றும் இவர்கள் தலைநகரமாக விளங்கியுள்ளது.

அரசன்னமலை

விசயமங்கலத்திற்கு அருகில் இந்த மலை உள்ளது. இந்த மலைமேல் நேமிநாதருக்கும் இயக்கி "சஷ பாலிகர்"க்கும் கோவில்கள் இருந்துள்ளன. இந்த அரசன்னமலை அடிவாரத்தில் "கொங்கபாளையம்" என்ற ஊர் உள்ளது. இந்த ஊரில் தான் இயக்கி "அரசன்னமலை" அடிவாரத்தில் கொங்கப்பாளையம் என்ற ஊரில் பலரும், "இயக்கி அரசாத்தாள்" "இயக்கன்" "அரசன்" என்ற பெயர்களை வைத்துக் கொள்கின்றனர். இந்த அரசன்னமலையை "மக்கென்சி" சுவடியில் அதியமலை என்று குறிப்பிடுகின்றனர்.

அரச்சலூர் மலை

"நாகம்" என்று சங்க இலக்கியங்களில் புகழ் பெற்ற நாகமலை என்னும் மலை அரச்சலூர் மலையாகும். இந்த மலையில் வடக்குப் பக்கத்தில் மேல் பாறையில் சமண முனிவர்கள் வாழ்ந்த குகைத்தலங்களும் இசையைப் பற்றிய இரண்டாம் நூற்றாண்டு "பிராமி" கல்வெட்டும் உள்ளது.

விஜயமங்கலம்

சங்க இலக்கியங்களில் "வாகை" என்று விசயமங்கலத்தைக் குறிப்பிடுகின்றனர். சமணத் துறவிகளின் வருகையால் விசயமங்கலம் என அழைக்கப்படலாயிற்று. சமணர்களில் 2-ம் தீர்த்தங்கரர் சந்திரபிரபா தீர்த்தங்கரர் பெயரில் கோயில் உள்ளது. இக்கோயிலில் ஆதிநாதர்,தேவிநாதர், மகாவீரர் ஆகியோருக்கு தனித்தனி படிமங்கள் உள்ளன.

திங்களூர்

திங்களூரிலிருந்து "காசுகாரம்பாளையம்" செல்லும் வழியில் கோயில் தோட்டத்தினுள் "புசஷ்பநந்த தீர்த்தங்கரர் கோயில்" உள்ளது. பிரம்மயட்சனுக்கும் தீர்த்தங்கருக்கும் படிமங்கள் உள்ளது. இக்கோயிலிலுள்ள எல்லா தூணகளிலும் தீர்த்தங்கரர்களின் சிற்பங்கள் உள்ளன. புசஷ்பநந்த தீர்த்தங்கரர் "பூமேந்திரா" என்ற கல்வெட்டு குறிக்கின்றது.

சீனாபுரம்

பெருந்துறையிலிருந்து திங்களூர் செல்லும் வழியில் சீனாப்புரம் அருகே "மம்முட்டித் தோப்பு" என்ற இடத்தில் பழமையான ஆதிநாதர் கோயில் உள்ளது. ஜீனப்புரம் என்ற பெயரே காலப்போக்கில் மருவி சீனாப்புரம் என மாறிவிட்டது.

வெள்ளோடு

வெள்ளோடு ஊரின் வடக்கில் பெரிய குளத்தின் கிழக்கு பகுதியில் தொன்மையான "ஆதிநாதர்" கோயில் உள்ளது.

சத்தியமங்கலம்

சத்தியமங்கலம் அருகே "நல்லூர்" என்ற ஊரின் விண்ணப்பள்ளி சமணர்கோயில் உள்ளது, மற்றும் புங்கம்பள்ளி என்ற ஊரிலும் சமண சான்றுகள் உள்ளன.

செங்கம்பள்ளி

பெருந்துறை வட்டம் செங்கம்பள்ளியில் சமணர்கள் கோயில் இருந்ததாக விசயமங்கலம் கல்வெட்டுகள் கூறுகின்றன.

ஈரோடு

செங்குந்தர் மேல்நிலைப் பள்ளியில் விளையாட்டு மைதானத்தில் சமணர் சிலை ஒன்று கண்டெடுக்கப்பட்டது. கலைமகள் அருங்காட்சியகத்தில் உள்ள கல்வெட்டு ஒன்றில் மின்னப்பள்ளி சமணர் கோயில் குறிக்கப்பெறுகின்றது.

ஈரோடு மாவட்டத்தில் சமணர் சிற்பங்கள்

அய்யனாரை வணங்கும் முறை தமிழ்நாட்டில் இருந்து வந்துள்ளது. இந்த அய்யனார் வழிபாடு பௌத்தர்களுக்கு மட்டுமல்லாமல் எல்லா மதத்தினருக்கும் உண்டு. இந்த அய்யனார், அய்யப்பன் வழிபாடு இன்று கேரளாவில் பெரும் வழக்கமாக இருந்து வந்துள்ளது. ஈரோடு மாவட்டத்திலும் இந்த பழக்கம் இருந்து வந்துள்ளது. ஈரோடு மாவட்டத்தில் ஈரோடு, சிவகிரி, பூந்துறை, வட்டக்கல்வலசு, ஈங்கூர், பாலதொழு போன்ற இடங்களில் அய்யனார் வழிபாடு இருந்ததற்கு சான்றாக பல சிற்பங்கள் உள்ளது. ஈரோட்டில் காலிங்கராயன் வாய்க்கால் கரையில் அய்யனாருக்கு ஒரு அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் கோயில் உள்ளது. இக்கோயிலில் எழுந்தருளியுள்ள அய்யனார் மீது ஒரு பள்ளு பிரபந்தமும் உள்ளது. இந்த அய்யனார் பெருந்துறை வட்டம் ஈங்கூர் குட்டை தோட்டத்தில் கிடைத்ததாகும். இந்த அய்யனாரைக் கி.பி.1156-இல் "போத்தன் செய்யான்" என்பவன் உருவாக்கினான். இவனுக்கு குலோத்துங்க பல்லவராயன் என்பது அரசன் அளித்தப் பட்டப் பெயராகும். இவன் ஈங்கூரைச் சார்ந்தவன். இந்த ஈங்கூர் மேல்சரைப் பூந்துறை நாட்டில் உள்ளது. இவன் வேட்டுவர் குலத்தில் குறும்பில்லர் என்ற பிரிவைச் சேர்ந்தவன். இவன் இந்த அய்யனார் சிற்பத்தை குலோத்துங்க சோழனுடைய ஏழாம் ஆட்சியாண்டில் செய்துள்ளான். இந்த செய்தியானது அய்யனாரின் அருகே வெட்டப்பட்ட கல்வெட்டு செய்தி மூலம் அறியப்படுகின்றது.

ஈரோடு மாவட்டத்தில் நடைபெற்ற கொடுமணல் அகழாய்வு

கொடுமணல் ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், சென்னிமலைக்கு அருகில் உள்ளது. சங்க இலக்கியங்களில், கொடுமணம் என்று குறிப்பிடுகின்றது. தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த கொடுமணல் ஊரை இந்திய தொல்லியல் துறை, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், கள ஆய்வு செய்து பல்வேறு காலகட்டங்களில் அகழாய்வுப் பணியை செய்துள்ளனர். இவ்வூரில் ஊரின் கிழக்குப் பகுதியில் புதையுண்ட மக்கள் வாழ்விடம் மற்றும் (Habtation) ஈமக்காடு (Burial Ground) இரண்டு பிரிவுகள் உள்ள இடங்கள் உள்ளது. இவ்வூர் மக்கள் வாழ்விடத்தை நத்தக்காடு செலவானக்காடு, சம்பக்காடு என்று பெயர் சொல்லி அழைக்கின்றனர். இப்பகுதி மண்மேடு உள்ள பகுதியாக உள்ளது. மற்றும் வாழ்விடப் பகுதியின் வடக்கிலும், கிழக்கிலும் பெரும் பரப்பளவில் ஈமக்காடு உள்ளது. இந்த ஈமக்காட்டில் பெருங்கற்கால சின்னங்கள் உள்ளது. இவ்வூர் மக்கள் பெருங்கற்கால சின்னங்களை பாண்டியன் குழி, பாண்டியர் வீடு என்று அழைக்கின்றனர்.

ஊரிருக்கை பகுதியில் அகழாய்வு

கொடுமணலில் தொல்லியல் துறையினர் ஊரிருக்கை பகுதியில் அகழாய்வுப் பணி மேற்கொண்டனர். இந்த அகழாய்வில் வெளிப்பட்ட தொல்பொருள்கள் இரண்டு பண்பாட்டு காலங்களைச் சார்ந்தவையாகும். முதல் பிரிவு பெருங்கற்காலத்தைச் சார்ந்தவை (Metalithic Period) கி.மு.3-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. முதல் நூற்றாண்டு வரை காலத்தைச் சார்ந்தவையாகும். இரண்டாம் காலம் வரலாற்றுக் காலத்தை சார்ந்தவையாகும். (Histaricaal Period) இவற்றின் காலம் கி.பி.முதல் நூற்றாண்டு முதல் கி.பி. 3-ஆம் நூற்றண்டு காலம் வரையாகும்.

கொடுமணல் பெருங்கற்கால சின்னங்கள் (கி.மு.300 முதல் கி.பி.100 வரை)

கொடுமணல் பெருங்கற்காலச் சின்னங்கள் ஈமக்காட்டில் உள்ளது. இந்த பெருங்கற்காலச் சின்னங்களில் காணப்படும் தொல்பொருள்களின் அடிப்படையில் இந்தக் காலகட்டத்தில் கல்மணிகள் செய்தல், இரும்பு உருக்கி எடுத்தல், நெசவுத்தொழில், உழவுத் தொழில்களையும் தெரிந்து வைத்துள்ளனர் என்பதை உணர முடிகின்றது. இந்த பெருங்கற்கால சின்னங்களில் குறியீடு பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் கிடைக்கப்பெற்ற தமிழ்-பிராமி எழுத்துப் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள், மற்றும் உரோமானிய மட்கலன்களான செம்பு நிற மட்கலங்களும் (Russet coated painted ware) கருப்பு சிவப்பு மட்கலன்கள் (Black and Red Ware) பானை ஓடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளது மற்றும் இவர்கள் கண்ணாடி, சுடுமண்ணில் செய்த மணிகளையும், சங்கு பொருள்களையும் பயன்படுத்தியுள்ளனர் என்பது பெருங்கற்கால சின்னங்களின் அகழாய்வின் போது தெரிய வந்துள்ளது.

கொடுமணல் வரலாற்றுக்காலம் (கி.பி. 100 முதல் கி.பி. 300 முடிய)

கொடுமணல் பெருங்கற்காலத்தை அடுத்து வரலாற்று காலத்து தொல்லியல் சான்றுகள் கிடைக்கப் பெற்றுள்ளது. இவர்கள் அரிய கல்மணிகள் செய்தல், இரும்பு உருக்கும் தொழில் செய்தல், உழவுத் தொழில் செய்தல், தானியங்களை சேமித்து வைத்தல் போன்ற தொழில்கள் செய்து வந்துள்ளனர். சுடுமண் மணிகள், கண்ணாடி மணிகள், சங்கு பொருள்களையும் பயன்படுத்தி யுள்ளனர். வெள்ளை வண்ணம் தீட்டப் பெற்று செம்பழுப்பு பூச்சு பெற்ற மட்கலன்களும் (Russet coated Paint Ware) கருப்பு சிவப்பு மட்கலன்களும் (Black and Red Ware) பயன்பாடு குறைவாக உள்ளது. சிவப்பு நிற மட்பாண்டங்கள் (Red Ware) அதிக அளவில் பயன்படுத்தியுள்ளனர். இவ்வகழாய்வில் கிடைத்த சான்றுகளின் அடிப்படையில் நல்ல வீடுகளை கட்டிக் கொண்டு வாழ்ந்துள்ளனர். புன்செய் தானியங்களை விவசாயப் பொருளாக உற்பத்தி செய்துள்ளனர்.

கொடுமணலில் ஈமச் சடங்கு சின்னங்கள்

இவ்வூரில் 150-க்கும் மேற்பட்ட பெருங்கற்கால பதுக்கைகள் (Crami circle) காணப்படுகின்றது. இச்சின்னங்களை இப்பகுதி

மக்கள் பாண்டியன் குழி, பாண்டியன் வீடு என்று அழைக்கின்றனர். இந்த சின்னங்கள் இருக்கும் நிலப்பகுதி, சாம்பக்காடு, தோரணக்காடு என்றும் கூறுகின்றனர். இந்த கல்பதுக்கைகளில் ஒருசிலவற்றில் நெடுங்கல்லும் (Men heir) காணப்படுகின்றது. இந்த கல்பதுக்கையின் உள் மையப்பகுதியில் உள்ள கல்லறைகளில் படையல் பொருள்கள் வைக்கப்பட்டுள்ளது. இந்த கல்லறையில் மேலும் இரும்பு, செம்பு, வெள்ளி, தங்கம், கார்னீலியன், அகேட் ஆகியவற்றினால் செய்யப் பெற்றவைகளே படையல் பொருள்களாக உள்ளது. இரும்பு பொருள்களாக கத்தி, நீண்ட வாள், கேடயம், அம்பு நுணி, அங்கவடி (Stcirrup)ஆகியவைகளும் வைக்கப்பட்டுள்ளது. தங்க ஆபரணங்களாளக மோதிரம், சுருள், மணிகள், வளையல் போன்றவகளில் ஈமச்சின்னங்களில் கிடைத்துள்ளது மற்றும் செம்பு, வெண்கலப் பொருள்களளாக குவளை, மணி, பொம்மை. வாணலி, கரண்டி போன்றவைகளும் வைக்கப்பட்டுள்ளது. கார்னீயன் கல் பதிக்கப்பட்ட அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய புலி பொம்மை குவழைகள், இதழ்களுடன் கூடிய பூக்கிண்ணம் ஒன்றும் கிடைக்கப் பெற்றுள்ளது. இந்த பெருங்கற்கால சின்னங்களில் கல்மணிகளும் கிடைத்துள்ளது. சபையர், குவார்ட்ஸ், பளிங்குகல், சூதுபவளம், நீலம், ஜஸ்பர், அகேட், கார்னேட், லேடிசுலி, மாவுக்கல் முதலிய கல்மணிகள் செய்யும் தொழிலும் தெரிந்து வைத்துள்ளனர்.

கொடுமணல் அகழாய்வில் கிடைக்கப் பெற்ற பொருள்கள்

கொடுமணல் அகழாய்வில் வெவ்வேறு வகையான தொல்பொருள்கள் கிடைத்துள்ளது. ஈமச்சின்னங்களில் செய்யப்பட்ட அகழாய்வுகளில் இரும்பு, செம்பு, அரிய கற்கள், சுடுமண், கண்ணாடி மற்றும் தந்தம், எலும்பு போன்ற பொருள்களும், இரும்பு பொருள்களாக அம்பு நுணி, அரிவாள், சுத்தி, உளி நீண்ட வாள், கடப்பாறை, ஆணி, ஊக்கு, வளையல், மணி போன்றவைகள் கிடைத்துள்ளது. செம்பு பொருள்களான வளையல்கள், ஊதுகுழாய்கள், குவளைகள், ஊசிகள், கொக்கிகள், ஆபரணங்கள் போன்றவைகளும், வெள்ளி முத்திரை நாணயங்களும், வெள்ளி பொருள்களாகவும், தங்கத்தினால் செய்யப்பட்ட மணிகள், வளையல்கள், தங்க பொருள்களும் கிடைத்துள்ளது. எலும்பினால்

செய்யப்பட்ட ஊசிகளும், அம்பு முனைகளும், சக்கரப் பொருட்களும் கிடைத்துள்ளது. கண்ணாடி பொருள்களான வளையல் மற்றும் சுடுமண் பொருள்களான மணிகள், காது வளையங்கள், தக்களிகள் போன்றவைகளும் கிடைத்துள்ளன.

கொடுமணல் அகழாய்வில் குறியீடுகள்

கொடுமணல் அகழாய்வில் கிடைக்கப் பெற்ற குறியீடுகளும், பிராமி எழுத்துக்களும், பானைகள் சுடப்பட்ட பின்னே எழுதப்பட்டவை. பெரும்பாலும் வெளிப்புறத்தில், தோள்பகுதி, விளிம்பிற்கு கீழ்பகுதி அல்லது கழுத்துப் பகுதி தான் குறியீடுகள் மற்றும் பிராமி எழுத்துக்கள் உள்ளது. குறியீடுகள், தமிழ் பிராமி எழுத்துக்கள் பொறித்த பானை ஓடுகள், பெரும்பாலும் கருப்பு சிவப்பு, குவளையின் ஓடுகளில் காணப்படுகின்றது.

தமிழ்பிராமி

கொடுமணல் ஊரிருக்கைப் பகுதியில் செய்யப்பட்ட அகழாய்வில் முதல் பண்பாட்டு ஆரம்ப காலத்திலிருந்தே தமிழ் பிராமி எழுத்து பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் கிடைத்துள்ளது. இந்த தமிழ் பிராமி எழுத்துக்கள் மண்தட்டுக்கள் (Plates) சிறு குவளைகள் (bowls) போன்ற மட்பாண்டங்களில் பொறிக்கப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் நடுகற்கள்
(*Hero Stone*)

வீரமரணம் எய்திய ஆடவர்கட்கும், பெண்களுக்கும் நினைவாக கல் நடுவது தமிழரது பண்டைய வழக்கங்களில் ஒன்றாகும். இந்த நடுகற்களை நினைவு கற்கள் என்றும் கூறலாம். தொல்காப்பியர் நடுகல் நடும் வழக்கம் பற்றிய பொருளதிகாரம் புறத்தினை இயலில் மிகச் சிறப்பாக கூறியுள்ளார். அகநானூற்றில் இரண்டு பாடல்களில் நடுகல்லின் சிற்பமும், எழுத்தும் அழிந்துவிட்ட நிலை இருந்ததை தெளிவாகக் காட்டுகின்றது. இறந்த வீரனின் பெயரும், பெருமையும் பொறித்த கற்களைச் சங்க இலக்கியம் நமக்கு தெளிவாக காட்டுகின்றது. ஈரோடு மாவட்டத்தில் பல இடங்களில் நடுகற்கள் உள்ளது. விண்ணப்பள்ளி, தலைவாசி, கவுந்தபாடி, ஊராட்சிக் கோட்டை, வாய்ப்பாடி, காஞ்சிக் கோயில், அரச்சலூர், வெள்ளோடு, பழமங்கலம், விளக்கேத்தி, பவானி, பெரியபுலியூர் போன்ற பல இடங்களில் நடுகற்கள் உள்ளது.

சதிக்கல்

பண்டைய காலத்தில் கணவன் இறந்தால் உடன்கட்டை ஏறும் வழக்கம் நடைமுறையில் இருந்துள்ளது. இந்த சதிக்கற்களை மாசத்திக்கல் என்றும், உடன் கட்டை ஏறிய பெண்ணின் தீப்பாஞ்சாள் அம்மன், வீரமாத்தி அம்மன், புடவைக்காரி என்றும் அழைக்கின்றனர். சதிக்கற்கள் காணப்படும் இடங்கள், தாமரைக்கரை, அந்தியூர், காடனஅள்ளி, ஈரேட்டி, பெரியபுலியூர் போன்ற இடங்களில் காணப்படுகின்றது.

பழமங்கலம் நடுகல்

பழமங்கலம் நடுகல் வெண்பா வடிவில் உள்ளது. பழமங்கலத்தில் நத்தக்காட்டில் இந்த நடுகல் கிடைக்கப் பெற்றுள்ளது. நடுகல்லில் வெண்பா வடிவில் எழுதப்பட்ட கல்வெட்டுள்ளது.

"வாய்ந்த புகழ் மங்கலத்து வந்தெதிர்ந்த மாற்றலரைச்
சாய்ந்த மருள் வென்ற சயம்பெருகச் சீர்த்த புகழ்
நீக்கு வணம் கற்பொறிக்கப்பட்டான் கரைய குலர்
சொக்களேந்த லேவலகில் தான்"

என்ற பாடலாக உள்ளது.

ஆப்பக்கூடல் நடுகல்

இப்புலிக்குத்திக் கல் புடைப்பு சிற்பமாக உள்ளது. நின்ற நிலையில் ஒரு புலியின் வயிற்றில் ஒரு நீளமான ஈட்டியை செலுத்திய வீரன் உருவம் பொறித்த இச்சிற்பம் ஆப்பக்கூடல் சக்தி நகர் சர்க்கரை ஆலை பகுதியிலிருந்து கிடைக்கப்பெற்றுள்ளது. இப்புலிக்குத்தி சிற்பம் பிற்காலத்தைச் சார்ந்தவையாகும்.

பெரிய சேமூர் நடுகல்

ஈரோடு மாவட்டம் பெரிய சேமூர் சூளைக் காட்டில் இரண்டு நடுகற்கள் கிடைக்கப் பெற்றுள்ளது. இந்த நடுகற்கள் பெரிய பலகை கற்களில் சுமார் 5 அடி உயரத்திலும், 2 அடி அகலத்திலும் அமைந்துள்ளது. இரண்டு கற்களிலும் வீரனின் உருவம் நின்ற நிலையில் அழகிய வேலைப்பாடுகளுடன் புடைப்பு சிற்பங்களாக செதுக்கப் பெற்றுள்ளன. ஒரு நடுகல்லில் உருவத்தில் பழங்கால அமைப்பில் இடக்கையில் அரிய உருவமுடைய கேடயம் ஒன்றும், வலக்கையில் குறுவாலும் காணப்படுகின்றது. வீரனின் கால்கள் சற்று மடித்த நிலையில் காணப்படுகின்றது, மற்றொரு சிற்பத்தில் வலது கையில் மட்டுமே நீண்ட வேல் காணப்படுகின்றது.

சிவகிரி நடுகற்கள்

ஈரோடு மாவட்டம், சிவகிரி கிராமத்தின் அருகே கவுண்டம்பாளையம் நத்தக்காட்டில் இரண்டு நடுகற்கள் கிடைத்துள்ளது. தலையநல்லுரை கிழங்க வேட்டுவரின் கிழங்கன் பெரிய கிழங்கன் சிலை ஒன்றாகும். வீரன் கையில் ஈட்டியும், கேடயமும், இடையில் குறுவாளும் உள்ளது. இந்த நடுகல்லின் அருகிலேயே மற்றொரு நடுகல்லும் உள்ளது. வாளும், கேடயமும், சிறப்பாக தோற்றம் உடையவை. இந்த இரண்டு நடுகற்களும் கி.பி.13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

பெரிய மேட்டுப்பாளையம் - குதிரைக்கல்

பெருந்தலையூர் மேட்டுப்பாளையம் அருகே இந்த கல் கிடைத்துள்ளது. நான்கு குதிரையில் நால்வர் அமர்ந்துள்ளனர். குதிரைப் போர்க்காட்சி நன்கு சித்தரிக்கபபட்டுள்ளது. கீழே ஒரு வீரன் ஒரு குதிரையில் எதிரே ஓங்கிய வாளுடன் குதிரைப் படையை எதிர்த்து நிற்கின்றான். குதிரைகளும் அதில் அமர்ந்துள்ள வீரர்களும் நல்ல நுட்பமான வேலைப்பாடுகளுடன் அமைந்துள்ளது. குதிரைகள் பாய்ந்து செல்லும் நிலையில் உருவாக்கப்பட்டுள்ளன.

காலிங்கராயன் சிற்பம்

கி.பி.13-ஆம் நூற்றாண்டில் ஈரோடு வட்டம் வெள்ளோட்டில் தோன்றி பாண்டியர் தம் படையில் சேர்த்து தளபதியாகி பாண்டினுக்கு அமைச்சனுமாகி கொங்கு நாட்டில் அதிகாரம் செலுத்தியவன் காலிங்கராயன் ஆவான். காலிங்கராயன் என்பது பெயர். வீரபாண்டியன் கொடுத்தப் பட்டப்பெயர் செப்பேடு ஒன்றில் காலிங்கராயன் இயற்பெயர் "லிங்கையய்யன்" என்றும் தந்தை பெயர் நஞ்சையப்பன் என்றும் குறிப்பிடுகின்றன. இந்த காலிங்கராயன் முயற்சியால் கி.பி.13-ஆம் நூற்றாண்டில் பவானியாறு, காவிரியில் கலக்குமிடத்தில் ஒரு அணையைக் கட்டினான். இந்த நீர்ப்பாசன அணையையும், வாய்க்காலையும், மக்கள் நீர்பாசன வசதிக்காகப் பயன்படுத்தி காலிங்கராயனை தெய்வமாக வணங்கிப் போற்றினர். இந்த காலிங்கராயனுக்கு பல இடங்களில் கோயில் மற்றும் சிலை அமைத்து வணங்கினர். இந்த சிலையை தற்பொழுது கலைமகள் கலைக்கூடத்தில் வைத்துள்ளனர்.

ஈரோடு மாவட்டத்தில் வீரக்கல் காணப்படும் இடங்கள் (*Hero Stone*)

நாட்டையும், மக்களையும் காக்க போர்முரசு கொட்டி உயிர் தியாகம் செய்த வீரனுக்கோ அன்றி சேனைத்தலைவனுக்கோ சுற்றமும், கொற்றமும் நினைவுச் சின்னமாக சிலை அமைத்து அந்நிகழ்ச்சியை பொறித்து வைப்பதே "வீரக்கல்லாகும்". இந்த நடுகற்கள் கீழ்கண்ட இடங்களில் காணப்படுகின்றது.

கோபிசெட்டிபாளையம் வட்டம்

1. கவுண்தம்பாடி
2. விண்ணப்பள்ளி

பவானி வட்டம்

1. அந்தியூர்
2. பெரியபுலியூர்
3. ஊராட்சிக் கோட்டை
4. பட்லூர்
5. வெம்பாடி
6. துக்கநாயக்கன் பாளையம்
7. கணக்கம் பாளையம்

ஈரோடு வட்டம்

1. அரச்சலூர்
2. ஈரோடு
3. சென்னிமலை
4. காஞ்சிக்கோயில்
5. கொடுமுடி
6. பழமங்கலம்
7. பாழதொழுவு
8. பெருந்தலையூர்
9. சிவகிரி
10. துக்காச்சி
11. வாய்ப்பாடி

பெருந்துறை வட்டம்

1. விசயமங்கலம்
2. ஈங்கூர்
3. காஞ்சிகோயில்
4. வெள்ளோடு
5. பிடாரியூர்
6. வாய்ப்பாடி

கல்வெட்டுகளில் குறிக்கப்பெறும் வரிகள்

ஈரோடு மாவட்டத்தில் மொத்த வருவாயும் வரி வசூல் மூலமாகவே வருகின்றது. இந்த வரிவசூல் முறை பண்டைய காலம் தொட்டே நடைமுறையில் இருந்துள்ளது. இந்த வரிவசூல் முறை, சொற்கள் பற்றிய செய்திகள் கல்வெட்டுகளில் காணப்படுகின்றது. குறிப்பாக "சித்தாயம்" என்ற சொல் வரி என்ற பொருளை கொண்டுள்ளது.

1. இறைபுரவு - அரசுக்கு தரும் நிலவரி
2. உப்பாயம் - உப்புக்கு செலுத்த வேண்டிய வரி
3. கடமை - அரசுக்கு செலுத்த வேண்டிய வரி
4. ஊர் விணியோகம் - ஊர்களில் நடைபெறும் நல்ல நிகழ்ச்சிகளுக்காக செலுத்த வேண்டிய வரி
5. உகவை - மகிழ்வான நிகழ்ச்சிகளுக்கு செலுத்த வேண்டிய வரி
6. ஓலை சம்படம் - ஓலை எழுத கூலி
7. கீழிறை - சிறுவரி
8. கார்த்திகை பச்சை - கார்த்திகை விளக்குக்கு கொடுக்கும் வரி
9. எலவை - அமலங்க காரியத்துக்கு செலுத்தும் வரி
10. காவல் கூலி - காவல் காக்க கொடுக்கும் கூலி
11. தட்டொலி பட்டம் - இசைக் கருவிகள் பயன்படுத்தும் வரி
12. தனி இறை - தறிக்கு வரி
13. தண்ணீர் காணம் - நீர்ப்பாசன வரி
14. செக்கிறை - செக்கு வரி
15. சுங்கம் - விற்பனை பொருள்கள் கொண்டு செல்லும் வரி
16. தறிப்புடவை - நெய்யும் சேலைக்கு வரி
17. நற்பசு - கால்நடை வரி
18. பாசி பட்டம் - மீன்பிடிக்க வரி
19. மகமை - விற்பனையில் ஒரு குறிப்பிட்ட பங்கு வரி

20. வேண்டுகோள் வரி - விண்ணப்பம் மீதான வரி
21. பாறை வரி - வண்ணார் வரி
22. நத்த வரி - குடியிருப்பு மீதான வரி
23. நாட்டு வினியோகம் - நாட்டு சபைக்கு செலுத்தும் வரி
24. பலபட்டடை வரி - வணிகர்கள் கொடுக்கும் வரி
25. வால் வரி - கால்நடைகளுக்கு உரிய வரி
26. தட்டார் பாட்டம் - பொற்கொல்லர் வரி
27. குடிப்பணம் - குடியுரிமைக்கு செலுத்தும் வரி
28. அந்தராயம் - நிலவரி நீக்கிய சிறய வரி

மேற்கண்ட வரிகள் பண்டைய காலம் முதல் அழைக்கப்பட்டு வந்துள்ளது என்பது தெரியவந்துள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் ஆட்சி செய்த அரசர்கள்

1. சேர மன்னர்கள் - சங்க காலம்
2. கங்கர்கள்-இராட்டிரர் - கி.பி.9-ஆம் நூற்றாண்டு வரை
3. பாண்டியர் - கி.பி.9-ஆம் நூற்றாண்டு வரை
4. இடைக்கால சேரர்கள் - கி.பி.10-ஆம் நூற்றாண்டு வரை
5. கொங்கு சோழர்கள் - கி.பி.14-ஆம் நூற்றாண்டு வரை
6. கொங்கு பாண்டியர்கள் - கி.பி.14-ஆம் நூற்றாண்டு வரை
7. பொய்சாளர்கள் - கி.பி.14-ஆம் நூற்றாண்டு பிற்பகுதி
8. விசயநகரர் - கி.பி.16-ஆம் நூற்றாண்டு
9. நாயக்கர்கள் - கி.பி.17 மற்றும் 18-ஆம் நூற்றாண்டு
10. பிரித்தானியர் - கி.பி.18 முதல் கி.பி.19-ஆம் நூற்றாண்டு

ஈரோடு மாவட்டத்தில் மதங்கள்

இந்து மதம்

1. சைவம்

2. வைணவம்

ஈரோடு மாவட்ட சிவலாயங்கள் சிலவற்றிற்கு கபாலிச்சுரம் என்ற பெயர் உள்ளமை இப்பெயர் கபாலிக சமயத்தின் பெருமையை உணர்த்துகின்றது. ராசி என்ற காளமுக முனிவர் பெயரால் ராசிபுரம் என்ற பெயர் உருவாகியுள்ளது. இப்பெயரே காளமுக மடங்கள் இருந்ததை சுட்டிக்காட்டியுள்ளது. கொங்கு நாட்டில் கி.பி.12-ஆம் நூற்றாண்டு கல்வெட்டுகளில் மடங்களைப் பற்றிய செய்தி காணப்படுகின்றது. எனவே கி.பி.3-ஆம் நூற்றாண்டில் காளமுகம், பாசுபதம் சைவ மதங்களின் உட்பிரிவுகள் இருந்துள்ளது. பாசுபதத்தில் மகேசுவரர் வழிபாட்டினைப் பற்றி குறிப்பிடுகின்றது. பாசுபதத்தில் சற்று சீர்திருத்தம் அடைந்த நிலையில் லகுளீச பாசுபதம் என்றும் அழைக்கின்றனர். இந்த லகுளீச பாசுபதம் கொங்கு நாட்டில் கி.பி. 3 அல்லது 4-ஆம் நூற்றாண்டில் பரவியுள்ளது. கொங்கு நாட்டில் லகுளீசர் சிற்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளது.

கொங்கு நாட்டில் சிவலாயங்கள்

கொங்கில் சிவாலாயங்கள் கி.பி.12-ஆம் நூற்றாண்டு முதல் காணப்படுகின்றது. கொங்கு நாட்டில் கிடைக்கின்ற ஐந்து கல்வெட்டுகளில் ஏழு சிவாலயங்களைப் பற்றி கல்வெட்டு செய்திகள் குறிப்பிடுகின்றது. அந்த ஐந்து கல்வெட்டுகள் உள்ள ஊர்கள், பாரியூர், திங்களூர், விசயமங்கலம், மொடக்கூர், கூகலூர் ஆகும்.

மடங்கள்

தமிழ்நாட்டில் பக்தி இயக்கத்தை மடங்கள் பரப்பியுள்ளது. பக்தி இயக்கம் வளர மக்கள் மடங்களை ஆதரித்துள்ளனர். மடங்கள், இந்து மடங்கள், சமணமத மடங்கள் தமிழ் நாட்டில்

இருந்துள்ளது. இந்த மடங்கள், கல்வி போதனையும், மதபோதனையும் பரப்பியுள்ளது. சில மடங்கள் உண்டு. உறைவிடப் பள்ளிகளையும் நடத்தியுள்ளனர். இந்து மதத்தில் காளமுக சைவமடம், பாசுபத சைவ மடம் இருந்துள்ளது. ஈரோடு மாவட்டத்தில் சைவம், வைணவம், பௌத்தம் ஆகியவை கி.பி. 5-ஆம் நூற்றாண்டு முதல் இருந்துள்ளது. மற்றும் வீரசைவம் கி.பி.14-ஆம் நூற்றாண்டு முதல் பரவியுள்ளது என்பதை கல்வெட்டுகள் மூலம் அறிய முடிகின்றது.

இஸ்லாம், கிருத்துவம்

ஈரோடு மாவட்டத்தில் இஸ்லாம் மதம்

ஈரோடு மாவட்டத்தில் இந்து மக்களில் ஒரு பிரிவினர் ராவுத்தர் சாமி என்ற குல தெய்வத்தை வணங்கி வருகின்றனர். இந்து மக்கள் பலர் துலுக்கண்ண கவுண்டர்,துலுக்க நாச்சியம்மன் என்ற பெயர்களை வைத்துள்ளனர். துலுக்கபாளையம் என்ற ஊரும் உள்ளது. மற்றும் இம்மாவட்டத்தில் தாளவாடி, கவுந்தம்பாடி, காங்கயம் பாளையம், குருமாத்தூர் போன்ற ஊர்களில் பள்ளி வாசல்களும், சென்னிமலை, ஓலகடம், கோபி, அந்தியூர், பெருந்தலையூர், காசிபாளையம், கள்ளக்கவுண்டன்புதூர், பவானி, ஜம்பை, கொடுமுடி போன்ற இடங்களில் தர்காக்கள் காணப்படுகின்றன.

கிருத்துவம்

ஈரோடு மாவட்டத்தின் கல்வி வளர்ச்சிப் பணியில் கிருத்துவர்களின் பங்கு உள்ளது. கிருத்துவ மதத்தில் பல உட்பிரிவுகள் இம்மாவட்டத்தில் உள்ளது.

I. ரோமன் கத்தோலிக்கத் திருச்சபை ஆலயங்கள் - **(Roman Catholic)**

1. தூய மேரி ஆலயம் - ஈரோடு
2. தூய இருதய ஆலயம் - ஈரோடு இரயில்வே காலனி
3. தூய இக்னேசு ஆலயம் - அக்கரை கொடுவேரி
4. தூய பேதுரு(ம)பவுல் ஆலயம் - வாலிப்பாளையம்
5. தூய தெரசா ஆலயம் - கொளப்பலூர்

2. தென்னிந்தியத் திருச்சபை (CSI)

1. பிஷப் நினைவாலயம் - ஈரோடு
2. தூய பேதுரு ஆலயம் - ஈரோடு
3. தூய யோவான் ஆலயம் - ஈரோடு

3. லூத்தரன் சபை ஆலயங்கள்

1. சுவிசேச லூத்தரன் உயிர்த்தெழுந்த நாதர் ஆலயம் - ஈரோடு
2. லூத்தரன் திருச்சபை ஆலயம் - ஊத்துக்குழி
3. லூத்தரன் திருச்சபை ஆலயம் - புஞ்சை புளியம்பட்டி

4. பெந்தகோஸ்தே சபை ஆலயங்கள்

ஈரோடு மாவட்டத்தில் பெந்தகோஸ்தே திருச்சபைகளும், ஒரு சில இடங்களில் வழிபட்டு வருகின்றனர்.

துணை நின்ற நூல்கள்


1. கலைமகள் கலைக் கூடம் - புலவர் செ. இராசு.
2. அறைநாடு வரலாறு - எஸ். கே. ராமசாமி
3. கந்தாங்கண்ணி வேட்டுவ குலன் வரலாறு- புலவர் செ. இராசு.
4. கொடுமணல் அகழாய்வு- க. இராசன்
5. கொங்கு நாட்டு வரலாறு- கோ. இராசேந்திரன் செட்டியார்.

நிழற்படங்கள்


அட்டைப்பட விளக்கம்

முன் அட்டை : தீர்த்தங்கரர் கற்சிற்பம், சமணர் கோயில்
விசயமங்கலம் - ஈரோடு


பின் அட்டை : நவகண்டம் கற்சிற்பம்
கலைமகள் கல்வி கலைக்கூடம்
ஈரோடு




சந்திரபிரபா சைனமதக் கோயில்
விசயமங்கலம்
ஈரோடு



சமணதீர்த்தங்கரர்
சமணர் கோயில்
விசயமங்கலம்-ஈரோடு



புலிக்குத்தி நடுகல்
கலைமகள் தொல்லியல் கலைக்கூடம்
ஈரோடு



நவகண்டம் கற்சிற்பம்
கலைமகள் கல்வி கலைக்கூடம்
ஈரோடு



தாய்சேய் கற்சிற்பம்
அரசு அருங்காட்சியகம்
ஈரோடு




வராகி கற்சிற்பம்
அரசு அருங்காட்சியகம்
சோழபுரம்




நடுகல்-ஈங்கூர்
கலைமகள் கல்வி கலைக்கூடம்
ஈரோடு



செப்புத் திருமேனி-ஈங்கூர்
கலைமகள் கல்வி கலைக்கூடம்
ஈரோடு




செப்புத் திருமேனிகள்
கலைமகள் கல்வி கலைக்கூடம்
ஈரோடு




கல்மணிகள்
கலைமகள் கல்வி கலைக்கூடம்
ஈரோடு




வரலாற்றுக் காலக் கால் சிலம்பு (செம்பு)
கலைமகள் கல்வி கலைக்கூடம்
ஈரோடு



ஓலைச் சுவடிகள்
கலைமகள் கல்வி கலைக்கூடம்
ஈரோடு



பூ வேலைப்பாடுகளுடன் இரும்பு மேஜை
அரசு அருங்காட்சியகம்
ஈரோடு



ஈரோடு மாவட்டம் - வரைபடம்

KONGU IN 10 - 11 TH CENTURIES A D

